மாலை 48 மணி 10 செப்டம்பர் 2006 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

## தமிழ்க்களஞ்சியமாம் தொல்காப்பியம்

- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்

குருவருள் நல்கும் திருச்செந்தூர்

முருகவேள் 108 போற்றி



சோளிங்கர் யோக நரசிம்மர்

அம்மனிடம் வேல்வாங்கி அசுரனைச் சம்மாரம் செய்த சிக்கல் சிங்காரவேலர்



# அம்மன் கோயில் படைவீடு
# அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயில்

**போளூர் வட்டம் - திருவண்ணாமலை மாவட்டம்**
**தொலைபேசி 04181 - 248224**

அன்புடையீர்!

தொண்டை மண்டலத்தில் புகழ்பெற்ற சக்தித்தலங்களுள் சீரும் சிறப்புமுடையது, கமண்டல நதிக்கரையில் அமைந்துள்ள படைவீடு ஸ்ரீ ரேணுகாதேவி அம்மன் திருக்கோயிலாகும்.

அம்மன் சுயம்புவாய் எழுந்தருளியுள்ளதுடன் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளையும் உடன் கொண்டு அவர்களிலும் பேருருக் கொண்டு உலகில் சக்தியே எல்லாமென எடுத்துக் காட்டி அருள் புரிந்து வருகிறாள். சக்தி பீடங்கள் 64ல் படைவீடு ஒன்றெனவும் பகரப்படுகிறது.

சக்தித் தலங்களுள் சிறந்ததாகவும், சித்தர்கள் பலரின் வழிபாட்டிற்குரியதாகவும் விளங்கும் இத்திருத்தலத்தில் நாள்தோறும் நடைபெற்றுவரும் பூஜையில் பொதுமக்களும் பங்குகொண்டு அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மனின் அருள்பெறவேண்டும் என்ற நோக்கத்துடன்

''நித்திய ஆராதனைக் கட்டளைத் திட்டம்'' துவங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பங்குகொள்ள விரும்புவோர் ரூ.3000/ திருக்கோயிலில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தொகை வங்கியில் ''நிரந்தர வைப்பு நிதி''யாக வைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டியைக் கொண்டு வருடத்தில் ஒரு நாள் அவரவர்கள் குறிப்பிடும் நன்னாளில் (பிறந்தநாள், திருமணநாள் போன்றவைகள்) ஒரு காலப்பூஜை செய்யப்பட்டுப் பிரசாதம் வழங்கப்படும். நேரில் வர இயலாதவர்களுககு அஞ்சல் மூலம் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும்.

அன்பர்கள் அனைவரும் ''நித்திய ஆராதனைக் கட்டளைத் திட்டத்தில்'' பங்கு கொண்டு அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மனின் அருளைப் பெறவேண்டுகிறோம்.

இதர கட்டளைத் திட்ட விபரங்கள்:

| | |
|---|---|
| நித்திய ஆராதனைக் கட்டளை செய்ய | ரூ. 3000 |
| ஆண்டு அபிஷேகக் கட்டளை செய்ய | ரூ. 6000 |
| மாதாந்திர அபிஷேகக் கட்டளை செய்ய | ரூ. 75000 |
| ஆண்டு அர்ச்சனைக் கட்டளை செய்ய | ரூ. 500 |
| மாதாந்திர அர்ச்சனைக் கட்டளை செய்ய | ரூ. 6000 |



திருக்கோயிலுக்குக் காணிக்கை மற்றும் கட்டளைத் திட்டத் தொகை செலுத்த விரும்புவோர் நேரடியாகவோ அல்லது வரைவோலை (D.D) மூலமாகவோ செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ப. குணசேகரன் பி.எஸ்சி.பிஎல்**
நிர்வாக அதிகாரி

**எஸ்.ஜெயராமன் எம்.ஏ.பி.எல்**
தக்கார்/துணை ஆணையர்



திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2037 விய- ஐப்பசி
மாலை 48 மணி 10 அக்டோபர் 2006

# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

**வணக்கம்.**

உலகின் உயர்தனிச் செம்மொழிகளில் ஒப்பற்ற முதன்மொழி என்ற பெருமைக்கு உரியது நம் செந்தமிழ் மொழியாகும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய முதல்மொழி என்ற பெருமைக்கு உரிய நம் வண்டமிழ் மொழியில் எண்ணற்ற இலக்கண இலக்கிய நூல்கள் தோன்றியிருப்பினும், இன்றைக்கு நமக்கு கிடைக்கும் பழந்தமிழ் நூல்களில் முதல் நூல் என்ற பெருமைக்குரியதாய் திகழும் நூல் தொல்காப்பியர் செய்துள்ள ''தொல்காப்பியம்'' என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தொல்காப்பியமாம் இலக்கண நூலை எளிய முறையில் அனைவரும் அறியும் வண்ணம் தமிழ்த்தாயின் உள்ளம் மகிழும் படியாக நம் மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள் ''தொல்காப்பியம் பூங்கா'' எனும் அரிய நூலைப் படைத்துள்ளதைப் பாராட்டும் வகையில் அண்மையில் நம் மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் அவர்கள் ''தொல்காப்பிய விருது'' வழங்கிச்சிறப்பித்தார்கள்.

''முப்பத்து மூன்று நாட்களில் தொல்காப்பியம் மட்டுமல்லாமல் மற்றமற்ற தமிழ் நூல்களில் குளித்து மகிழ்ந்து, இக்காலத் தமிழ் மக்களுககாக - மற்றும் தமிழ் படிக்க நினைக்கும் மற்ற மொழியினருக்கும் எளிதான இதந்தரும் தமிழில் ''தொல்காப்பியப் பூங்கா'' அவர் எழுதியிருப்பது தமிழ் மக்களுக்குச் செய்த ஒரு பெரிய பணியாகும், போற்றதலுக்குரிய செயலாகும்''.

என்று நம் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் பாராட்டி ''தொல்காப்பியர் விருது'' வழங்கிச் சிறப்பித்த இனியதொரு விழாவில் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை உங்களுக்காக இவ்விதழில் வெளியிட்டுள்ளோம் என்பதை மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''குருவருள் இன்றித் திருவருள் இல்லை'' என்பது நாடறிந்த பொன்மொழி.

''குருவருள் நல்கும் திருச்செந்தூர் திருத்தலம்'', ''கேட்டவரம் தரும் குச்சனூர் வடகுரு பகவான்'' கட்டுரைகள் உங்களைப் பெரிதும் மகிழ்விக்கும் என நம்புகின்றேன்.

''சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சூரசம்மாரம்'' செய்யும் முருகப் பெருமான், அன்னை வேல் நெடுங்கண்ணி அம்மையிடம் வேல் வாங்கும்போது நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பும் அதிசயத்தை விவரிக்கும் கட்டுரையும் வாசகர்களுக்கு ஒரு பெருவிருந்து என்பதில் ஐயமில்லை.

உலகில் தீமை அழிய, மக்கள் மகிழும் தீபாவளித் திருநாள் பலதுறை வளர்ச்சிக்கும், பொருளியல் சுழற்சிக்கும் வாய்ப்பளிக்கும் பண்டிகைத் திருநாள் என்பதை விவரிக்கும் கட்டுரையும் வாசகர்களுக்குத் தீபாவளிப் பெருவிருந்தென்பதில் ஐயமில்லை.

''நாழிகையில் நமக்கருளும் சோளிங்கர் யோக நரசிம்மர்'' கட்டுரையும், ''ஐப்பசியில் அவதரித்த முதலாழ்வார்கள்'' கட்டுரையும் வாசகர்களைப் பெரிதும் மகிழ்விப்பது திண்ணம்.

''காலச்சுவடுகள்'' பகுதியில், தம்பிளவை நோயைத் தீர்த்தருளிய குன்றக்குடி சண்முகநாதனுக்குப் பெரிய மருது பாண்டியர் தங்கக் கவசம் அணிவித்து மகிழ்ந்த நிகழ்ச்சி உங்கள் உள்ளங்களையும் நெகிழச் செய்வது உறுதி.

அனைவருக்கும் என் மனமார்ந்த ''தீபாவளித் திருநாள்'' வாழ்த்துக்கள். ''வாழ்க வளமுடன்!''

அன்புள்ள

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

# தமிழ்க்களஞ்சியமாம் தொல்காப்பியம்

## மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள்

தொல்காப்பியம் என்பது வெறும் இலக்கணம் மாத்திரமல்ல, திருக்குறளுக்கு முந்திய - இன்னும் சொல்லப்போனால் தமிழிலே, தமிழனுக்குக் கிடைத்த முதல் இலக்கணநூல் தொல்காப்பியம்தான்.




அந்தத் தொல்காப்பியத்தை நான் எளிய நடையிலே எல்லோருக்கும் புரிகின்ற வகையிலே வழங்க வேண்டும்என்று எண்ணினேன்.

தொல்காப்பியம் என்றால் ''ஏ, அப்பா, அதையா படிப்பது!'' என்று நடுங்குகின்ற இளைஞர்களுக்கு ஒரு துணிவை ஏறபடுத்த வேண்டும், எளிமையாக்கித் தர வேண்டும் என்று முயற்சி எடுத்தேன்.

அந்த முயற்சியிலே நான் வெற்றிப் பெற்றிருப்பதாகவே கருதுகின்றேன். எத்தகைய முயற்சி என்பதற்கு எல்லாவற்றையும் சொல்லிக் குடியரசுத் தலைவரின் நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. ஏனென்றால் அவர்கள் ஏற்கனவே இந்த நூலை நான் தந்து, ஓய்வாகப் படித்திருக்கின்றார். படித்து அதைப் பற்றிய கருத்தையும் எனக்கு எழுதியிருக்கின்றார். உங்களுக்காக ஒன்றிரண்டை மாத்திரம் இங்கே சொல்ல விரும்புகின்றேன்.

உயர்திணை, அஃறிணை என்று இரண்டு திணைகள் உண்டு. இந்த இரண்டு திணையும் பொதுவாக வருகின்ற ஒரு நிலையைத் தொல்காப்பியர் எடுத்து விளக்குகிறார். அப்படி

## இதழின் உள்ளே ....


1. தமிழ்க்களஞ்சியமாம் தொல்காப்பியம் - மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள் 2
2. காலச்சுவடுகள் : குன்றக்குடி முருகனுக்குப் பெரியமருது அணிவித்த தங்கக்கவசம் - முனைவர் த.அமிர்தலிங்கம் 6
3. தீபாவளித் திருநாள் - பருத்தியூர் டாக்டர் கே.சந்தானராமன் 8
4. குருவருள்நல்கும் திருச்செந்தூர் - ''அருளரசு'' கிருபானந்த வாரியார் சுவாமிகள் 10
5. அன்னையிடம் வேல்வாங்கி அசுரனைச் சம்மாரம் செய்த - சிக்கல் சிங்கார வேலர் சொ. கணபதி தேசிகர் 14
6. சிற்பியர் மரபில் கண்திறப்பு - பொன்னி செல்வநாதன் 17
7. கேள்வி - பதில் 18
8. கேட்டவரம் தரும் குச்சனூர் குருபகவான் 20
9. நாழிகைக்குள் நமக்கருளும் சோளிங்கர் யோக நரசிம்மர் - வைணவச் சுடராழி டாக்டர் ஆ. எதிராஜன் 22
10. திருமந்திர உபதேசம் - திருமந்திரச்செல்வர் திருமிகு டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப(ஓய்வு) 26
11. திவ்விய தேசத்திற்கு நிகரான புரசைஅருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயம் 28
12. ஐப்பசியில் அவதரித்த முதலாழ்வார்கள் - திருமதி இந்திரா ஆராஅமுதன் 30
13. திருக்கண்ணபுரம் முனியோதரன் பொங்கல் - பா.குபேந்திரபாபு 33
14. தீராநோய்தீர்த்தருளும் மூலிகைவனேசுவரர் - ஏ.கிருஷ்ணன் 34
15. முருகவேள் 108 போற்றி 36
16. அம்மன் கோயில் படைவீடு அருள்மிகு ரேணுகாம்பாள் ஆலயம் 39
17. இராமானுஜர் செய்த புரட்சி - மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்கள் 40

விளக்கும்போது அவர் அதற்கு புனைந்திருக்கின்ற அந்தப் பா:

''அஃறிணை விரவும் பெயர்
இயல்பு மாருளவே''
*(எழுத்ததிகாரம் - தொகை மரபு-நூற்பா:-13)*

இப்போது நான் சொன்னதும், நீங்கள் நினைப்பதும் உண்மையாகவே ஆகும். ஏனென்றால் இந்தப் பாடல் யாருக்கும் புரியாது. இந்தப் பாட்டிலே என்ன புரிகிறது? தமிழ்ப் புலவர்கள் பொருள் சொல்லலாம், ஆனால் எல்லோரும் சொல்ல முடியாது. இதைத்தான் நான் ஒரு சிறு நிகழ்ச்சி மூலம் விளக்கியிருக்கிறேன்.

ஒரு சிறுவன் ஒரு கிழவியைச் சந்திக்கின்றான்; பேருந்து நிலையத்தில் என்று வைத்துக் கொள்வோம்.

''என்னப்பா படிக்கிறாயா?'' என்று அந்தக் கிழவி கேட்கிறாள்.

''தமிழ் படிக்கிறேன் பாட்டி, தமிழ் ஆசிரியராக வேலை பார்க்க எனக்கு ஆசை!'' என்கிறான் அச்சிறுவன்.

''அப்படியா நல்லது! உன் தமிழ் ஆசான் இலக்கியங்கள் சொல்லித் தருகிறாரா?''

''ஓ! திருக்குறள்- தொல்காப்பியம் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்!''

''அப்படியானால் எனக்கும் கொஞ்சம் இலக்கியம் தெரியும் - நானும் ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியைதான் - உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்கிறாயா?'' பாட்டி கேட்கிறாள்.

''கேள் பாட்டி; பதில் சொல்கிறேன்!''

''என்னை அழைத்துக்கொண்டு போக இப்போது சோழன் வரும் என்கிறேன். இப்போது சோழன் உயர்திணையா? அஃறிணையா?''

''பாட்டி! நீ சொல்லும் சோழன், உன் மகனாகவோ, பேரனாகவோ இருந்தால் உயர் திணை! அல்லது அந்தச் சோழன் பேருந்தாக இருந்தால் அஃறிணை!'' என்று பையன் சொல்கிறான்.

''தம்பி; இதை எப்படிச் சொல்கிறாய்? இதற்கு இலக்கணம் என்ன?''

பையன் சொல்கிறான், ''பாட்டீ; இதோ தொல்காப்பியம் எழுத்ததிகாரம் கூறுகிறது; **''அஃறிணை விரவும் பெயர் இயல்பு மாருளவே''**

''அதாவது இருதிணைக்கும் உரிய பெயரைப் பொதுப் பெயர் என்பர். அதனால் நான் சொல்வது பொருந்துகிறது. ஆண்பால் உயர்திணையான சோழன் அஃறிணையாவது இப்போது இயல்பு''.

## மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தொல்காப்பியர் விருது



''தொல்காப்பியப் பூங்கா'' நூலை எழுதிய நம் மாண்புமிகு தமிழக முதல்வர் ''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் ஆ.பி.ஜெ. அப்துல்கலாம் அவர்கள் ஆழ்வார்கள் ஆய்வுமையம் வழங்கிய ''தொல்காப்பியர் விருது'' வழங்கிச்சிறப்பித்தார்கள்.

உடனே கிழவி சொல்கிறாள். ''அன்புப் பேரனே! அன்று ஔவையிடம் ஆற்றலைக் காட்டியதாகக் கூறப்படும் அந்த முருகனைக் காட்டிலும் நீ சிறந்தவன். அவன் தமிழாற்றலை பழத்தில் காட்டினான். (சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா என்று) நீயோ பழந்தமிழ் இலக்கணத்தில் காட்டியுள்ளாய்! வாழ்க! வாழ்க!

வாழ்த்திக் கொண்டிருக்கும் போதே (நான் கதையைப் பிறகு முடிக்கிறேன்) சோழன் வந்துவிட்டான்; இல்லை, இல்லை வந்து விட்டது. இளைஞன் உச்சியில் முத்தமீந்து கிழவி, பேருந்தில் அவன் உதவியுடன் ஏறிக் கொண்டாள். எழுத்ததிகாரம் - தொகை மரபு - நூற்பா 13)

அறிவியல் வளர்ச்சிக்கும் தொல்காப்பியம் அன்றைக்கே தூண்டுதலாக இருந்திருக்கின்றது. அன்றைக்கே அறிவியல், மரபியல் இவைகளைப் பற்றியெல்லாம் தொல்காப்பியம் பேசிக் கொண்டிருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு இது மிகவும் பிடிக்கும் என்பதற்காக இதை மாத்திரம் தனியாக எடுத்து நான் படிக்கிறேன்.

**''ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே**

# மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையின் கீழ் மாநில அளவிலான திருக்கோவில் ஆலோசனைக்குழு



தமிழகம் முழுவதிலும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவில்கள் அனைத்திலும் செம்மையான முறையில் நிர்வாகம் நடைபெறுவதற்குத் தேவையான தகுந்த ஆலோசனைகளை வழங்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்-அமைச்சர் அவர்கள் மாநில அளவிலான திருக்கோவில் ஆலோசனைக்குழு ஒன்றை அமைத்துள்ளார்கள்.


மாண்புமிகு தமிழக முதல்- அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்த மாநில அளவிலான திருக்கோவில் ஆலோசனைக்குழுவில், தமிழக இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் துணைத் தலைவராகவும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், உறுப்பினர் - செயலாளராகவும் இருப்பார்கள்.

இந்தக் குழுவின் பிற உறுப்பினர்களாக தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறைச் செயலாளர் மற்றும் குன்றக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு பொன்னம்பல அடிகளார், திருப்பனந்தாள் மடாதிபதி தவத்திரு முத்துக்குமாரசுவாமி தம்பிரான், திருவரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் தவத்திரு சிவப்பிரகாசபண்டாரசன்னதிகள், தவத்திரு பேரூர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார், திருமதி சவுந்திரா கைலாசம் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள் அவர்கள், திருமிகு கருமுத்து.கண்ணன் அவர்கள், பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலை நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எஸ்.வி.பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆகியோர் இருப்பார்கள்.

தருமபுர ஆதீனகர்த்தரின் பிரதிநிதி இக்குழுவின் கூட்டங்களில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கு பெறுவார்கள்.

மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே''
*(மரபியல் - நூற்பா:- 27)*

இதன் பொருள் விளக்கம்:ஓரறிவுள்ள உயிர் உடம்பினால் அறியக் கூடியது. ஈரறிவுள்ள உயிர் என்பது உடம்பினாலும் வாயினாலும் அறியக்கூடியது. மூவறிவுயிராவது உடம்பினால் - வாயினால் - மூக்கினால் என மூன்றினாலும் அறியக் கூடியது. நாலறிவுயிராவது உடம்பு, வாய், மூக்கு, கண் ஆகியவற்றால் அறியக்கூடியது. ஐயறிவு உயிர் என்பது உடம்பு, வாய், மூக்கு, கண், செவி ஆகியவற்றால் அறியக் கூடியது. இவைகளேயன்னியில் ஆறாவதாக மனத்தினாலே அறியக் கூடியதே ஆறறிவு எனப்படும். இவ்வாறு உயிர்கள் ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.



இவ்வாறு இன்று நேற்றல்ல, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய முப்பாட்டன், பாட்டனுக்குப் பாட்டன், அந்தத் தொல்காப்பியன்

எழுதுகிறான், அறிவியல் வளர்ச்சியைக் கூர்ந்து நோக்கி எழுதுகின்றான்.

அது மட்டுமின்றி, ஓரறிவு முதல் ஆறு அறிவு வரை பெற்றுள்ள உயிரினங்கள் எவை எவை என்பதையும் பட்டியலிட்டுக் காட்டுகிற பாங்கினை அவன் எழுதிய மரபியல் உணர்த்தும்போது எந்த அளவுக்கு மிகப் பழங்காலத்திலேயே அறிவியல் அடிப்படையில் வாழ்க்கை இலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது என்ற மலைப்பு நமக்கு ஏற்படத்தான் செய்கிறது என்று நான் அதிலே குறிப்பு எழுதியிருக்கிறேன்.

''புல்லும், மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''
*(மரபியல் - நூற்பா:- 28)*

எனும் நூற்பா; புல்லும் மரமும் எனும் இருவகைத் தாவரங்களும உடம்பினால் அறிந்தும் கொள்ளக் கூடிய ஓரறிவுடைய உயிர்களாகும் என்பதைக் குறிப்பிடுகிறது. பிறவும் என இந்த இரண்டிலும் அல்லாத பிற உயிர்கள் என்றும் உணர்த்தப்படுகிறது. அவற்றுக்கும் உடலால் அறிந்து கொள்ளக் கூடிய ஓரறிவுதான்.

உடம்பால் உணர்ந்து கொள்ளக் கூடிய புழுக்கள், புற்கள், மரங்கள், கொடிகள், செடிகள் எனப்படும் ஓரறிவுடைய பட்டியலுக்கு அடுத்து;

''நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''
*(மரபியல் - நூற்பா:- 29)*

சங்கு, நத்தை, கிளிஞ்சல் போன்றவையும் ஈரறிவு உயிர்களாம். தாக்கப்படும்போது அறியும் உணர்வும், இரை கொள்ளுவதால் வாயுணர்வுமென இரு அறிவு கூறப்படும். அடுத்து

''சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே''
*(மரபியல் - நூற்பா:- 30)*

ஈசல், எறும்பு, கறையான் இவற்றுக்கும் இவற்றையொத்த பிற உயிர்க்கும் மூவறிவு.

உடலால் வாயால் மூக்கினால் அறியக் கூடிய உயிரினங்கள் இவை.

நண்டும் தும்பியும் நான்கறிவுடையவை எனவும், விலங்குகளும், பறவைகளும் ஐந்தறிவுடையவை எனவும் மரபியல் விளக்குகிறது.

கடைசியாக நான் முடிக்கிறேன்; மக்கள் ஆறறிவுடையோராவர் - ஆறில் ஒன்றிரண்டு குறைவதற்கும், நிலையாக இருப்பதற்கும்; இந்த இலக்கணம் பொறுப்பல்ல! ★★★

# சாதி ஒரு தடையல்ல என்று சாற்றியவர் இராமானுஜர்



பக்தி மார்க்கத்திலே ஈடுபடுவதற்குச் சாதி ஒரு தடைஅல்ல, எல்லா சாதியினரும், ஏன் பெண்களும் கூட பக்தி வழியிலே இறைவனை அடையலாம் என்று முழங்கியவர் இராமானுஜர்.

ஒரு குரு ஒருமாணவனுக்கு மாத்திரம் உபதேசிப்பது என்ற வரம்பை நீக்கி எத்தனைச் சீடர்களுக்கு வேண்டுமானாலும் உபதேசிக்கலாம். சீடனுடைய தகுதியைப் பார்க்காமல் அவனுடைய ஆர்வத்தை மாத்திரமே நோக்கி உபதேசிக்க வேண்டுமென்று சொல்லி அதையும் நடத்திக் காட்டினார்.

இதனால் பக்தியின் பயனாகிய முத்தியும் ஒரு சிலருடைய சொத்தன்று, அது எல்லோருக்கும் பொதுவுடைமை என்றாக்கியவர் இராமானுஜர்.

'திருக்கச்சிநம்பி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இராமானுஜர் உயர் குலத்தில் பிறந்தவர். அவர் தனக்கு அறிவுரை கூறுகின்ற ஆசானாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் தாம் திருக்கச்சி நம்பி என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்.

இராமானுஜருடைய மாணவர்கள் பலபேர் தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பார்கள். அவர்களில் ஒருவர்தான் உறங்காவில்லி தாசர் என்பவர். காவிரிக் கரைக்கு நீராடச் சென்று, நீராடி விட்டுத் திரும்பும்போது இந்த உறங்காவில்லிதாசர் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவருடைய தோளிலேதான் கைபோட்டுக் கொண்டு இராமானுஜர் நடந்து வந்திருக்கிறார்.

- மாண்புமிகு தமிழக முதல்வர்
''முத்தமிழ் அறிஞர்'' டாக்டர்
கலைஞர் அவர்கள்

# குன்றக்குடி முருகனுக்குப் பெரிய மருது அணிவித்த தங்கக்கவசம்

முனைவர்.த.அமிர்தலிங்கம்



தேவாரப் பதிகம் பெற்ற பாண்டிப் பதிகள் பதினான்கில் ஒன்றாகச் சிறப்புற்று விளங்கும் திருப்புத்தூருக்குக் கிழக்கே 12கி.மீ தொலைவில் அமைந்துள்ள திருத்தலம் குன்றக்குடி.

காரைக்குடி ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 10 கி.மீ தொலைவில் அ்மைந்துள்ள குன்றக்குடி மலைக்கோயிலில் குன்றாப் புகழுடன் வீற்றிருக்கும் கண்கண்ட தெய்வமாம், கலியுக வரதனாம் சண்முகநாதனைப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நெஞ்சு நெக்குருகி வழிபட்டு வளமும் நலமும் ஓங்கி வாழ்ந்து வருகின்றார்கள்.

''குலகிரி, துங்கக்கிரி, உயர்குன்றக்குடி'' என்று அருணகிரிநாதரும் 8 திருப்புகழ்ப் பாடல்களில் போற்றியுள்ளார். பாம்பன் சுவாமிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் போன்ற அருளாளர்கள் போற்றியுள்ள அற்புதத் திருத்தலம் இதுவாகும்.

''குன்றுதோறாடலில் முந்தியதாகிய குன்றக்குடி'' என்ற வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் வாக்கைக் கொண்டு இத்தலத்தின் பெருமையை நாம் நன்கு உணரலாம்.

சிவகெங்கைச் சீமையைக் கி.பி. 1780 முதல் 1801 வரை ஆட்சி புரிந்த பெரிய மருது, சின்னமருது சகோதரர்களின் கண்கண்ட தெய்வமாகத் திகழ்ந்த குன்றக்குடி அருள்மிகு சண்முகநாதன், தம் அருள் விளையாடலால் அவர்களை ஆட்கொண்ட அற்புதம் ஒன்றை இங்கு நாம் கண்டு மகிழலாம்.

ஒருமுறை உயிரைக் கொல்லும் ''இராசப்பிளவை'' என்ற கொடிய நோய் கண்டு மிகவும் வாட்டமுற்று வருந்தி உருக்குலைந்து போனார் பெரிய மருது பாண்டியர்.

அரண்மனை மருத்துவர்கள் பலரும் ஆய்ந்து அரியபல மருந்துகள் தந்தும் நோயின் கொடுமை நாளுக்குநாள் அதிகமானதே தவிர குறையவில்லை.

வெகுநாள் இந்நோயில் வாடி. உறக்கமும் இல்லாமல் வருந்திய பெரிய மருது பாண்டியர்





''காலன் ஏன் தன் இன்னுயிரைப் பறித்துப் போக இன்னும் வராமல் தாமதப் படுத்துகின்றான்''. என்று கலங்கித் தவித்தார்.

இந்நிலையில் தான் குன்றக்குடி அருள்மிகு சண்முகநாதனின் தீவிரபக்தரான காடன் செட்டியார் என்பவர் அரண்மனைக்கு வந்து ''கலங்காதீர் மன்னா! வந்த வினையும் வருகின்ற வல்வினையும் தீர்த்துத் தீரா நோய் தீர்த்தருளும் குன்றக்குடி முருகன் திருநீறு எம்கை வசம் உள்ளது. திருநீற்றினும் சிறந்த வேறு மருந்து இல்லை'' என்று மன்னரின் மனக்கலக்கம் தீர்த்து அவர் நெற்றியிலும், மார்பிலும் திருநீறு அணிவித்தார் காடன் செட்டியார்.

''மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு''
அல்லவா!

குன்றக்குடி முருக பக்தரான காடன் செட்டியார் திருநீறு பூசியவுடனே திருஞானசம்பந்தரால் திருநீறு பூசப்பட்ட கூன்பாண்டியனின் நோய் தணிந்ததைப் போல மருதுபாண்டியருக்கும் நோயின் வேகம் தணிந்தது. அன்றிரவு அவருக்கு நல்ல தூக்கமும் வந்தது.

அயர்ந்து தூங்கிய மருதுபாண்டியரின் கனவில் பாலசந்நியாசி ஒருவர் தோன்றினார். அவர்தம் கையில் வைத்திருந்த மயில் தோகையினால் மருதுவின் பிளவையைப் பிதுக்கி அதிலிருந்து ஆணி எடுத்து வாழையிலையில் வைத்துப் பிளவையின் வாயில் திருநீறு வைத்து மறைந்தார்.

திடீரெனக் கனவு கலைந்து எழுந்த மருதுபாண்டியர், தம் எதிரே வாழையிலையும். அதில் பிளவையிலிருந்து எடுக்கப்பட்ட ஆணியும் இருக்கக் கண்டு அதிசயித்தார்.

இந்நிகழ்ச்சி நடைபெற்ற நாள் முதலாக அவருடைய பிளவை நோய் முற்றிலும் நீங்கிக் குணம் பெற்று எழுந்து விட்டார்.

பரிபூரண குணம் பெற்ற மருது பாண்டியருக்குக் காடன் செட்டியார் மேல் மதிப்பு உண்டானது, அவரது இஷ்டகுல தெய்வமான குன்றக்குடி அருள்மிகு சண்முகநாதன் மேல் பக்தி மிகுந்தது.

காடன் செட்டியார் வழிகாட்ட தம்பரிவாரங்களுடன் குன்றக்குடி வந்தார் பெரியமருது பாண்டியர்.

குன்றக்குடி மலையடிவாரத்தில் அடர்ந்து இருந்த காடுகளை வெட்டிச் சீர்செய்தார். மலைமீது ஏறி அருள்மிகு சண்முகநாதனை வழிபட்டு ஆனந்தம் கண்டார்.

மூலவர் கருவறை, மயில் மண்டபம், உற்சவமூர்த்தியின் அலங்கார மண்டபம், சுற்று மண்டபம், சுற்று மதில்கள், இராஜகோபுரம் என அனைத்தையும் திருப்பணி செய்து திருக்கோயிலைப் புதுப்பித்துத் திருக்குட நீராட்டு விழா செய்வித்து மகிழ்ந்தார்.

குன்றக்குடி மலையின் தென்புறம் மிகப்பெரிய திருக்குளம் தோற்றுவித்தார், அதற்கு ''மருதாபுரி'' என்ற திருப்பெயரும் உண்டானது.


முருகப்பெருமானுக்கு மிகப்பெரிய தேர் செய்வித்து அதில் தைப்பூசதேர்த்திருவிழாவையும் சிறப்பாக நடத்தி மகிழ்ந்தார்.

உற்சவ மூர்த்திக்கு அவர் தங்கக்கவசம் செய்து அணிவித்தார். அத்தங்கக் கவசத்தின் திருவடிப் பகுதியில் ''குன்றக்குடி சுப்பிரமணிய சுவாமியாருக்கு மருது பாண்டியன் உபயம்'' என்று பொறித்து வைத்திருப்பது குன்றக்குடி முருகன்மேல் அவன் கொண்ட குன்றாக் காதலை உணர்த்துவதாகும். இன்றும்பெரிய மருது பாண்டியர் வழங்கிய தங்கக் கவசத்தையும், அதில் கண்டுள்ள வாசகத்தையும் கண்டு முருகனடியார்கள் இன்புறலாம். உற்சவ மூர்த்தியின் சந்நிதியில் வடக்குத் தூணில் சின்ன மருதுவின் உருவச்சிலையும், தெற்குத் தூணில் பெரிய மருதுவின் உற்சவக் சிலையும் முருகவேளை எந்தவேளையும் தொழுது நிற்பதே தொழில் என்பதைக் காட்டும் வண்ணம் கம்பீரமாகக் காட்சி தருவதை இன்றும் கண்டு மகிழலாம்.

''விரும்புகவசம் மருது மகிபதி
வேண்டியிட
அரும்பிய ஓகை மயில்வேலன்''

என்று இச்சம்பவத்தை மயூரகிரிகோவை நூல் பாடி மகிழ்கின்றது.


**திருக்கோயில்**
**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச் சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

| | |
|---|---|
| 1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# தீபாவளித் திருநாள்

பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன்,M.A.,D.Litt.,ph.D

பூமாதேவியின் அம்சமான சத்தியபாமாவைக் கொண்டு. கண்ணன் நரகாசுரனை வதம் செய்தான். அதன் பிறகு நரகாசுரனின் மகன் பகதத்தன் கண்ணனைத் தனது நகரத்துக்கு அழைத்து வரவேற்று மகிழ்ந்தான்.

அப்போது பகதத்தன் நகரம் முழுவதும் தீபங்கள் ஏற்றி அலங்கரித்தான். அன்று முதல் தீபாவளி தொடங்கியது.


இறைவனின் திருப்பெயர்களை (நாமங்களை) வரிசைப்படுத்திப் பாடுவதை. 'நாமாவளி' என்கிறோம். அதுபோல் தீபங்களை வரிசையாக ஏற்றும் திருநாள் தீபாவளி என்றாயிற்று. தீபம்+ஆவளி=தீபாவளி. ஆவளி-வரிசை.

'நரகன்' என்ற சொல்லே கொடிய பாவச் செயல்களைச் செய்யும் தீயவர்களைக் குறிக்கும். ''நரகன் ஒருவனின் உயிருக்குப் பதிலாக நல்லவனின் உயிரை நான் எடுத்துக் கொள்ளமாட்டேன்'' என்று புகார் நகரில் இருந்த சதுக்கப் பூதம் கூறியதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

கொடிய நரகாசுரனைக் கண்ணன் வதைத்து உலக மக்களைக் காப்பாற்றிய நாளை நரகாசுரனின் மகனே கொண்டாடினான்.

சத்தியபாமாவின் தியாக உள்ளம், தன் மகன் இறந்த சோகத்திலும் உலக மக்களின் நலனைப் பெரிதாக நினைத்தது. அவள், நீதிக்குப் பின் பாசம் என்பதை நிலைநாட்டினாள். அவளது வேண்டுகோளின்படியும். நரகாசுரனின் இறுதிக்கால விருப்பத்தின் படியும். 'நரக சதுர்த்தசி' என்ற தீபாவளிப் பண்டிகை தோன்றுவதற்குக் கண்ணன் வரம் கொடுத்து அருளினான்.

திருமால் வராக அவதாரமெடுத்து நீரில் மூழ்கிய பூமியை மேலே கொண்டு வந்தார். அந்த அவதாரத்தில் அவர் பூமாதேவியை மணந்து ஒரு மகனைப் பெற்றார். அவனே நரகாசுரன்.



உலகத்தை ஆள்பவனின் மகனே தவறு செய்தாலும் அவன் தண்டிக்கப் படவேண்டும் என்பதை உணர்த்தத் திருமால், தானே கிருஷ்ணாவதாரக் காலத்தில் நரகாசுரனை வதம் செய்தார். திருமாலின் காத்தல் தொழிலுக்கு. சத்தியபாமாவும் உடன் இருந்து உதவினாள்.

திருமால் மூன்று உலகங்களையும் இரண்டடியால் அளந்து, மூன்றாவது அடியை மகாபலியின் தலைமீது வைத்து, அவனைப் பாதாள உலகில் வாழச் செய்தார்.

மகாபலி, ஆண்டுக்கு ஒரு முறை பூமிக்கு வந்து போக அருள் செய்யும்படியும், அந்த நாளை அனைவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடும்படியும் திருமாலிடம் வேண்டினான். திருமால் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்தார். அந்த வரத்தின்படியே, அந்த நாள் தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது என்றும் கூறுவர். ஆனால், கேரளத்தில் மகாபலியின் வருகை, 'ஓணம்' பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது.

இராமன், இராவணனை வென்று, வனவாசம் முடிந்து, அயோத்திக்குத் திரும்பி முடிசூட்டிக்கொண்ட நாளே தீபாவளி என்றும் கூறப்படுகிறது.

**கங்கைக் குளியலின் பின்னணி :**

தீபாவளி ஆயிற்றா? என்பதைவிட, ''கங்கா ஸ்நானம் ஆயிற்றா?'' என்று கேட்கும் வழக்கமே அதிகமாக உள்ளது. அத்துடன் தீபாவளியன்று காசியில் கங்கையில் புனித நீராடி, காசி விஸ்வநாதரையும், தங்க அன்னபூரணியையும் தரிசிக்கின்றனர். இவற்றின் காரணம் என்ன?

பகீரதனின் முன்னோர்களைக் கடைத்தேற்றுவதற்காகவும், பூமிக்கு வளமையைக் கொடுப்பதற்காகவும், கங்கை பூமிக்கு இறங்கி வந்த நாள்தான் தீபாவளி என்று தில்லிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர்சிவப்பிரியா அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். சதுர்த்தசி திதி சிவபெருமானுக்கு உகந்தது. மாத சிவராத்திரியும், மகாசிவராத்திரியும் சதுர்த்தசியில்தான் வருகிறது,

அந்த வகையில் சிவபெருமான் ஆகாய கங்கையை ஐப்பசி சதுர்த்தசி நாளில் பூமிக்கு

கொடுத்தருளினான். ஆகாயகங்கையை, பூமியில் வரவேற்கதீபங்கள் ஏற்றி விழா எடுத்தனர். ஆகவே, கிருஷ்ணாவதாரக் காலத்துக்கு முன்பிருந்தே தீபாவளி கொண்டாடப்பட்டது என்று கூறும் டாக்டர்சிவப்பிரியா, பிற்காலத்தில் நரகாசுரன் வரலாறும் தீபாவளியுடன் இணைந்திருக்க வேண்டும் என்கிறார்.

குழந்தைகள் தீபாவளியை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். ஏனெனில், அவர்கள் பெரிதும் விரும்பும் இனிப்பு வகைகள், புத்தாடைகள், பட்டாசு வகைகள் ஆகியவை தீபாவளியில் கிடைக்கின்றன.

குழந்தைகள் கொளுத்தி மகிழும் வாண வெடிகளிலும் ஆழ்ந்த ஆன்மிகத் தத்துவங்கள் உள்ளன. நம்முள் ஆத்ம ஒளியும், நம்முள் இறைவனும் இருப்பதால், ''நானே இறைவன்'' (அஹம் பிரம்மாஸ்மி) என எண்ணும் நுண்ணிய ஒலிகளும் நிறைந்திருக்கின்றன. அவற்றை நாம் அறிவதில்லை.

நெருப்பைத் திரியில் வைக்கும்போது வாணங்கள் பிரகாசமாக எரிகின்றன. வெடிகள் ஒலியெழுப்புகின்றன. ஜடமான வாணமும், வெடியும் திரியில் தீப்பொறி பட்டவுடன் ஒளியும் ஒலியும் கொடுக்கின்றன. அதுபோல் ஞானகுரு, சீடனிடம்வைக்கும் ஞானக்கனல் தன்னை அறியும் உள்ளொளியையும், ஒலியையும் சீடனிடமிருந்து வெளியே கொண்டுவருகின்றன.

**பிற மாநிலங்களில் தீபாவளி:**

தீபாவளி சமயத்தில் இமாசலத்தில் பால் கொடுக்கும் பசுக்களை வழிபடும் கோபூஜையும். உத்திரப் பிரதேசத்தில் அன்னபூரணி வழிபாடும், கங்கைக் குளியலும் முக்கிய இடம் பெறுகின்றன.

வங்காளத்தில் வெற்றிலைப் பாக்கு வழங்கும் தாம்பூலத் திருவிழாவாகவும், கொற்றவைஎ.ய வழிபடும் துர்க்கா பூஜையாகவும் தீபாவளி கொண்டாடப்படுகிறது.

குஜராத்தில். தீபாவளி குபேர பூஜையாக நடைபெறுகிறது. மகாராஷ்டிரத்தில், மகாபலிக்கும், லட்சுமிக்கும் சிறப்புப் பூஜைகள் செய்கின்றனர். குஜராத் மாநிலத்தில் மட்டும் தீபாவளி ஐந்து நாட்கள் நடைபெறுகிறது. மற்ற மாநிலங்களில் இரண்டு முதல் நான்கு நாட்கள் வரை நடைபெறுகிறது.

தீபாவளியில் இனிப்பு மற்றும் காரங்களுடன், 'தீபாவளி லேகியம்' என்ற மருந்தையும் உட்கொள்ளும் முறை தமிழகத்தின் தனிச் சிறப்பு எனலாம்.

**பொருளியல் சுழற்சி:**

தமிழகத்தில் வேளாண்மைக்கு அடுத்த நிலையில் உள்ளது நெசவுத் தொழிலாகும். தமிழகமக்கள் விரும்பி ஏற்றுக் கொண்டாடும் தீபாவளிப் பண்டிகையில் புத்தாடை உடுத்துவதால் நெசவாளப் பெருமக்கள் பயன் எய்துகின்றனர்.

தமிழகத்தில், குறிப்பாக சிவகாசியில் பட்டாசுத் தொழிலும், அச்சுத் தொழிலும் சிறப்பாக நடைபெறுகின்றன. இவ்விரு தொழிலுக்கும் தீபாவளி வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

தீபாவளி மாதம் தொழிலாளர்களுக்கு ஊக்கத் தொகை (போனஸ்) வழங்கும் மாதமாக அமைகிறது. வீடுகளில் வேலை செய்பவர்களுக்கும் தீபாவளி நாளில் புத்தாடை, இனிப்பு மற்றும் எண்ணெய்க் குளியலுக்கு வேண்டிய பொருட்களை அன்பளிப்பாக வழங்கும் மரபு உள்ளது.

எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் ஓவியக் கலைஞர்களுக்குத் தீபாவளி அரிய வாய்ப்புகளை அளிக்கிறது. ஏனெனில், தீபாவளி சிறப்பிதழ்களும், மலர்களும் வெளியிடப் படுகின்றன. படைப்பாளிகள் தீபாவளிக்கு மூன்று மாதங்கள் முன்பிருந்தே தங்கள் திறமையைக் காட்டத் தயாராகிவிடுகின்றனர். பேராசிரியர்கள், பிரபலங்கள் என்று பல்வேறு துறைகளைச் சார்ந்த பெருமக்களும் தீபாவளிச் சிறப்பிதழ்களில் எழுதுகின்றனர். அவர்களின் கட்டுரைகள் பின்னர் நூல்வடிவமும் பெறுகின்றன, இவ்வகையில், இலக்கிய வளர்ச்சிக்குத் தீபாவளி பெரிதும் உதவுகிறது.

செய்தி ஏடுகள் சிறப்பு மலருடன் தீபாவளிக்கு வேண்டிய, கங்கைநீர், காசிக்கயிறு போன்ற பொருட்களை இலவசஇணைப்பாக வழங்குகின்றன.

தற்காலத்தில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தீபாவளியன்று படங்களை வெளியிட்டு மக்களுக்குக் கலைவிருந்து படைக்கின்றனர். திரைத்துறைக் கலைஞர்களுக்கும் தீபாவளிநாள் இனிய நாளாக அமைகிறது.

ஊடகங்கள் பட்டிமன்றம், நேர்காணல், மெல்லிசை, இன்னிசைஎன்று ஏராளமான நிகழ்ச்சிகளை வழங்குகின்றன.

சுற்றுலாத் துறையினர் தீபாவளி நாளில் காசிக்கு அழைத்துச் சென்று, கங்கைக் குளியலுக்கு ஏற்பாடு செய்கின்றனர்.

ஆதரவற்றோர் இல்லங்களுக்குச் சென்று புத்தாடை மற்றும் இனிப்புகள் வழங்கி மனிதநேயத்தை வளர்க்கும் நாளாகவும் தீபாவளி அமைகிறது.

உலகில் தீமை அழிந்து, மக்கள் மகிழும் நன்னாள் என்ற பண்பாட்டுப் பின்னணியுடன் பல துறை வளர்ச்சிக்கும் பொருளியல் சுழற்சிக்கும் வாய்ப்பளிக்கும் திருநாள் தீபாவளி என்றால் அது மிகையாகாது.

## ஐப்பசியில் தீபாவளி கொண்டாடப்படுவதேன்?



ஐப்பசி மாதம் துலாமாதம் என்று சிறப்பிக்கப்படுகின்றது. துலா என்றால் தராசு. தராசின் இருதட்டுக்களும் சமநிலையில் இருக்கும். இதைப்போல மனிதனின் மன நிலையும் தராசுபோல் நீதியுடன் இருக்கவேண்டும்.

சத்தியத்துடன் நடந்து கொள்ளாத நரகாசுரனைத் தன் மகனென்றும் பாராது துலாக்கோல் போல் நின்று நீதி காத்தார் கண்ணப் பரமாத்மா.

தன்னைப் போல் மக்களும் நீதிமானாக வாழ வேண்டும் என்பதைக் கண்ணபெருமான் உணர்த்திய தீபாவளித் திருநாள் துலாமாதமாகிய ஐப்பசியில் கொண்டாடப்படுவது உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

# குருவருள் நல்கும் திருச்செந்தூர்

- அருளரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்



நம்முடைய உடம்பிலே ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. அவை, மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூர்கம், அநாகதம், விசுக்தி, ஆக்ஞை என்பனவாம். இந்த ஆறு ஆதாரங்களின் வழியாக ஆத்மா சகஸ்ரார சித்தி அடைகின்றது. சகஸ்ராரம் என்பது ஆயிரம் நரம்புகளாலே சூழ்ந்த மேலைப் பெரு வெளியாகும்.

முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள படைவீடுகள் ஆறு. அதில் முதல் படை வீடு திருப்பரங்குன்றம். இரண்டாவது படை வீடு திருச்செந்தூர் ஆகும். பழநிமூன்றாவது படை வீடு. சுவாமிமலை நான்காவது படைவீடு. திருத்தணி முதலான குன்றுதோறாடல் ஐந்தாவது படை வீடு. பழமுதிர்ச்சோலை ஆறாவது படை வீடு.

இறைவனுக்குரிய மூன்று தன்மைகள் சத்து சித்து ஆனந்தம்.

சத்து - என்றைக்கும் உள்ளது நிரந்தரமானது.

சித்து - அறிவு மயமானது.

ஆனந்தம் - இன்ப நிலையைக்காட்டும்.

சத்து - சிவம்

சித்து - உமாதேவியார்.

ஆனந்தம் - முருகன்... சச்சிதானந்தம் அதுதான் சோமாஸ்கந்தர். இந்தச் சத்து என்னும் சிவத்தலத்திலே உயர்ந்தது சிதம்பரம்; சித்து என்னும் தேவி தலத்திலே உயர்ந்தது மதுரை; ஆனந்தம் என்கிற சுப்ரமணியர் தலத்திலே உயர்ந்தது திருச்செந்தூர். திருச்செந்தூருக்கு மேற்பட்ட தலம் கிடையாது.

இதற்குச் செந்தில், அலைவாய், திருச்செந்தில், திருச்சீரலைவாய், திருச்செந்தூர், ஜெயந்திபுரம், ஸ்ரீசாந்திபுரம், கந்தமாதனம், சந்தனாசலம் எனப் பெயர்கள் உள்ளன.

இத்தலம் சூரபன்மனை வெற்றி கொண்ட இடம். ஆதலினால் ஜெயந்திபுரம் என்று வழங்கப்படுகிறது. சிந்து என்றால் கடல். கடல் உள்ள ஊர் ஆனதினாலும் செந்தில் என்று பேர் பெற்றது. சேந்தன் + இல் சேந்தனாகிய முருகனின் இல்லம் ஆயிற்று என்றும் கொள்ளலாம்.

செந்தில் என்றால் ஆன்மாக்கள் தங்குகின்ற இடம் என்பது பொருள். செந்து + இல் =செந்தில். அந்தச் செந்தில் என்பது செந்தூர் என்றாயிற்று.

இந்நகரம் சாந்தி நகரமாக விளங்குகிறது.

இரண்டாவது படைவீடான இந்தத் திருச்செந்தூர் சுவாதிஷ்டான மாகும். அந்தக் கடல் அலைகள் எல்லாம் எம்பெருமான் திருவடியில் வந்து மோதுகின்றன. அப்படி ஆன்மாக்களுடைய அதாவது நம்முடைய துன்பங்கள் எல்லாம் அவன் திருவடியில் ஒடுங்கி விடும். நாமெல்லாம் பிறவிப் பெருங்கடலிலே நீண்ட காலமாகத் தத்தளித்திருக்கின்றோம்.

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்''

என்பார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

அந்தப் பிறவியாகிய பெருங்கடலிலே நீண்ட காலமாகத் தத்தளிக்கின்றோம்.

பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து தத்தளிக்கின்ற ஆன்மாக்களுக்கு என்ன வேண்டும்? ஓடம் வேண்டும். அந்த ஓடம் தான் இறைவனுடைய திருவடி.

''ஏழையினி ரட்டைவினை யாயதொ
ருடற்சிறை
யிராமல்விடு வித்தருளும் நியாயக்காரனும்''



என்பார் அருணகிரியார்.

முருகன் ஓடக்காரன். அவன் திருவடியாகிய ஓடத்தில் ஆன்ம கோடிகளை எல்லாம் ஏற்றிக் கொண்டுபோய் முத்திக் கரை சேர்க்கின்றான் முருகன்.

இந்தச் செந்தில்மா நகரத்தை வழிபடுகின்ற அடியார்கள் தூண்டுகை விநாயகரைத் தொழுது மணல் மேட்டில் அப்படியே போனால் ஆனந்த விலாசம் எதிர்ப்படும். அதுதான் இதயக் கமலம். அத்தகைய ஆனந்த விலாசத்தில் சென்று கடற்கரை வழியாக வந்து சண்முக விலாசம் சேர்ந்தால் ஓங்காரமாக முடியும். பிரணவாகாரத்தை உடையவன் திருச்செந்தூர் ஆண்டவன். அவன் கருணைக்கடல். அடியார் அல்லலை அகற்றுகின்ற பரம்பொருள்.

திருச்செந்தூர் திருநெல்வேலிக்கு 3 மைல் கல் தொலைவில் உள்ளது. கிரவுஞ்சமலையைப் பிளந்து தாரகாசுரனைக் கொன்றபின் ஆறுமுகப் பெருமான் திருச்செந்தூருக்கு வந்து அங்கே தங்கி தேவதச்சனைக் கொண்டு இத்திருக்கோயிலை நிர்மாணம் செய்ததாகப் புராணம் கூறும்.

''அறுமுகன் அங்கண் ஏகி
அகிலகம் மியனை நோக்கி
இறையிலோர் சினக ரத்தை
இயற்றுதி ஈண்டை என்னத்
திறனுணர் புனைவர் செம்மல்
சிந்தையில் நாடித் தேவர்
உறைதிரு நகரம் வெஃக
ஒருதிருக் கோயில் செய்தான்''.

தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், அப்பர் திருத்தாண்டகம் முதலான நூல்கள் செந்தூரின் பெருமையைச் சிறப்பாகத் தெரிவிக்கின்றன. திருமுருகாற்றுப்படையில் 48 வரிகள், திருப்புகழிலே 83 பாடல்கள் இந்தத் திருச்செந்தூருக்கு அமைந்துள்ளது. அன்றியும் கந்தரலங்காரத்தில் 5 பாடல்கள், கந்தரந்தாதியில் 26 பாடல்களில் திருச்செந்தூரின் புகழை அருணகிரிநாதர் பாடுகின்றார்.

இந்தத் தலத்திலே வழங்குவது பன்னீர் இலை விபூதி. ''பன்னீர் பச்சிலையில் வைத்த தவளநீறு'' என்பார் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்.

ஏற்கனவே வந்த வினைகளும், இனி எதிர்காலத்தில் படர இருக்கும் வினைத்துயர்களும், கந்தன் என்ற திருப்பெயரைச் சொன்னாலே கலங்கி ஓடும். இன்னும் செந்தில் நகர் சேவகனே என்று உள்ளம் உருகி ஓதி திருநீறு அணிபவர்களைத் தொடராது வினைகள் விலகி ஓடும் என்று ஒரு தனிப்பாடல் கூறும்.

''வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தனென்று சொல்லக் கலங்குமே - செந்திநகர்ச்
சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவவா ராதே வினை''.

ஒருகாலத்திலே உக்கிரபாண்டியனின் மகள் அங்கசுந்தரி குதிரை முகத்துடன் பிறந்தாள். எந்தத் தலத்துக்குப் போயும் அந்தத் துன்பம் விலகவில்லை.

திருச்செந்தூர் வந்து செந்திலாண்டவனுக்கு நேரே இருக்கிற வதனாரம்பத்திலே மூழ்கி எழுந்தவுடன் குதிரை முகம் மாறி மனித முகம் பெற்றாள். அதனாலே வதனம் ஆரம்பம் ஆயிற்று.

அந்த உக்கிர பாண்டியன் சில திருப்பணிகளைச் செய்துள்ளான். அதுவல்லாமல் தட்சிணாமூர்த்தி சுவாமிகள், மவுன சுவாமிகள், காசி சுவாமிகள், வள்ளி நாயக சுவாமிகள் முதலிய துறவிகள் இந்தத் திருக்கோயிலுக்குப் பற்பல திருப்பணிகளைச் செய்துள்ளனர்.

அங்கே கல்லே கிடையாது. எங்கிருந்துதான் கல்லைக்கொண்டு வந்தார்களோ? 137 அடி உயரம் உள்ள ராஜ கோபுரம் 9 நிலைகளில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கே நவக்கிரகங்கள் கிடையாது. நவவீரர்கள் உண்டு. விரவாகுதேவர், வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரபுரந்தரர், வீரராக்கதர், வீரமார்த்தாண்டர், வீராங்கதர், வீரதீரர் என்பவராவர்.



## முத்திக்கரை சேர்க்கும் துறைமுகம்

பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து நீண்டகாலமாக துன்பப்படுகின்ற ஆன்மாக்களாகிய நாம் திருச்செந்தூர் போகவேண்டும். திருச்செந்தூர் கடற்கரை மோட்சலோகத்துக்கு ஹார்பர் என்றறிக. அவன் திருவடியாகிய ஓடத்தைப் பற்றிக் கொண்டால் நிச்சயமாக முத்திக்கரை சேர்ந்து விடுவோம். அதைத்தான் ஆதிசங்கரர்,

''யதாசன்னி தானம் கதாமான வாமே''

என்றார்.

''யதா - எப்பொழுது, என் சன்னிதானத்தை ஆன்மாக்கள் அடைகின்றனவோ. கதா - அப்போதே முத்திக்கரையைச் சேர்ந்திடுவேன்'' என்று எம்பெருமான் கடற்கரையிலே வீற்றிருக்கின்றார். துன்ப அலைகள் எல்லாம் அவன் திருவடியிலே வந்து மோதி மோதி ஓய்வு பெறுகின்றன.

## விதியை மாற்றும் செந்திலோன் திருவடி



எல்லாருடைய தலையிலும் பிரமன் எழுதி வைக்கின்றார். இவன் இவன் இப்படி வாழ வேண்டும் என்று எழுதி நிற்கின்றார். ''அன்று எழுதினவன் அழித்து எழுதப் போகிறானா'' என்பது பழமொழி. எல்லாம் என் தலையெழுத்து என்றும் வழக்கில் சொல்லுவார்கள்.

அந்தப் பிரமன் எழுதிய தலையெழுத்தைச் செந்திலாண்டவன் திருவடி மாற்றிவிடும். குழந்தைகள் எழுதியதை அழிக்க வேண்டுமென்றால் ரப்பரால் தேய்த்து அழிப்பர். அப்படி நம் தலையில் இருக்கின்ற பிரமனின் எழுத்தைச் செந்திலாண்டவன் திருவடி அழித்துவிடும்.

''சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததுஇங் கென்தலை மேலயன் கையெழுத்தே.''

என்று கந்தரலங்காரத்தில் பாடியுள்ளார்.

இத்தலம் குருவுக்குப் பிரசித்தியான தலம். குருவின் கருணையைப் பெற வேண்டுமானால் செந்திலாண்டவனை வந்து வழிபட வேண்டும்.

இங்குள்ள தீர்த்தங்கள் பல. ''சென்றாடு தீர்த்தங்கள் ஆனான் கண்டாய்'' என்பார் அப்பர். தீர்த்தம் இறைவனுடைய வடிவமாகத் திகழ்கிறது. அதைச்சிவமாக எண்ணி முழுக வேண்டும்.

ஒரு சமயம் காயத்ரி மந்திரமானது கந்தப் பெருமானின் திருவடிகளைச் சிரமேற்கொண்டு எனக்கொரு வரம் தந்தருள வேண்டும் என்று வேண்டி நின்றது.

செந்திலாண்டவனும் சிந்தை மகிழ்ந்து யாதுவரம் வேண்டுமெனக் கேட்டான்.

காயத்ரீ தனது வடிவமாகிய இருபத்தி நான்கு அட்சரங்களும்' இருபத்தி நான்கு தீர்த்தங்களாகத்திகழ வேண்டுமென்றது. அறுமுகனும் அவ்வாறே ஆகுக என்றருளினார்.

அவற்றின் பெயர்களும், அத்தீர்த்தங்களில் முழுகுவோர் பெறும் பலன்களையும் இங்குப் பார்ப்போம்.

1. முகாரம்ப தீர்த்தம் - இதில் மூழ்குவோர் கந்தக்கடவுளின் கருணையமுதத்தைப் பருகுவர்.

2. தெய்வயானை தீர்த்தம் - இந்தத் தீர்த்ததில் மூழ்குவோர் ஆடை, அணிகலன், போஜனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூஅமளி என்கின்ற இன்பத்தைப் பெறுவர்.

3. வள்ளி தீர்த்தம் - இந்தத் தீர்த்தம் ஒருமையுள்ளத்துடன் பிரணவ சொரூபமாய்ப் பிரகாசிக்கின்ற கந்தப் பெருமாயின் திருவடித் தாமரையைத் தியானிக்கும் ஞானத்தைக் கொடுக்கும்.

4. இலக்குமி தீர்த்தம் - இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர் வடதிசைக்கு அதிபனான குபேரனும் அடைதற்கரிய ஐஸ்வரியங்களைப் பெறுவர்.

5. சித்தர் தீர்த்தம் - இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோருக்கு காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களும் நீங்கி, முத்திக்குத் தடையாகிய உடல், உலக, பைசாசு என்கிற பகைகளைவிலக்கி முத்தி வழியை நாடச்செய்யும்.

6. திக்கு பாலகர் தீர்த்தம்- இங்குத் தீர்த்தத்தில் மூழ்குவோர் கங்கை, யமுனை, காவிரி முதலிய தீர்த்தங்கள் கொடுக்கும் பலனைப் பெறுவர்.

7. காயத்ரீ தீர்த்தம் - இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர் அநேக வேள்விகளைச் செய்தவர் அடைகின்ற பலன்களைச் செய்தவர் அடைகின்ற பலன்களைப் பெறுவர்.

8. சாவித்திரி தீர்த்தம் - இந்தத் தீர்த்த்தில் மூழ்குவோர்க்குப் பிரமாதி தேவர்களாலும் காணுதற்கரிய உமாதேவியின் பொன்னடிகளைப் பூசித்த பலனைக் கொடுக்கும்.

9. சரஸ்வதி தீர்த்தம்- இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர்க்குச் சகல ஆகம புராண இதிகாசங்களை அறியத் தகுந்த அறிவைக் கொடுக்கும்.

10. அயிராவத தீர்த்தம்- இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர் சந்திர பதாகை. பன்னாசைமுதலிய நதிகளில் நீராடிய பலனைப் பெறுவர்.

11. வயிரவ தீர்த்தம் - இந்தத் தீர்த்தத்தில் நீராடியோர் சரஸ்வதி, சோனை, பொருநை முதலிய நதிகளில் மூழ்கியவர் அடையும் பலனை அடைவர்.

12. துர்க்கை தீர்த்தம் - இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர் இம்மையிலே அடையும் துன்பத்தைப் போக்கி நன்மையைப் பெறுவர்.

13. ஞான தீர்த்தம் - இந்தத் தீர்த்தம் இறைவனைப் பரவுவோர்க்கும் பரவுதற்கு நினைத்தோர்க்கும் நன்மையைக் கொடுத்தருளும்.

14. சத்திய தீர்த்தம் - இந்தத் தீர்த்தமானது களவு, கள்ளுண்டல், குரு நிந்தை, கொலை, பொய் என்கின்ற ஐந்துடன், அகங்காரம் உலோபம், காமம், பகை, போஜனப் பிரியம், சாய்தல், சோம்பல் முதலான ஏழு துன்பங்களையும் போக்கும். இன்னும் தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என்று சொல்கின்ற பாதகம், அதிபாதகம், மகாபாதகம் ஆகிய மூன்றினின்றும் நீக்கித் தனது சித்தத்தை நன்னெறியில் நிற்கச் செய்யும்.

15. தரும தீர்த்தம் - இந்தத் தீர்த்தமானது தீவினையாகிய வேரைக் களைந்து தேவாமிர்தமாகிய மங்கள கரத்தைக் கொடுத்தருளும்வல்லமை படைத்தது.

16. முனிவர் தீர்த்தம் - இந்த தீர்த்தத்தில் மூழ்குவோர் ஜகத்ரட்சகனைக் கண்ட பலனைப் பெறுவர்.


17. தேவர் தீர்த்தம்- இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர்க்குக் காமம் குரோதம் லோபம் மோகம் மாச்சரியம் என்னும் ஆறு குற்றங்களை நீக்கி ஞானஅமுதத்தை நல்கும்.

18. பாவநாசதீர்த்தம் - இத்தீர்த்தம் குற்றமில்லாத முனிவர்களால் சபிக்கப்பட்ட சாபங்களை விலக்கி அனைத்துப்

# சகல நலங்களும் தரும் நாழிக் கிணறு

திருச்செந்தூர் கோயிலுக்குத் தெற்கே 200 கெஜ தூரத்தில் நாழிக்கிணறு உள்ளது. பெரிய கிணற்றுக்குள்ளே இது ஒரு சிறு கிணறு. ஒரு சதுர அடி பரப்பும் எழு அடி ஆழமும் உள்ள இந்தத் தீர்த்தம் உவர்ப்பு அற்ற நன்னீராகக் காட்சி தருகின்றது.. சமுத்திரக் கரையோரம் இப்படி இனிய நீராக அமைந்துள்ளது கந்தப்பெருமானின் அருளாடலேயாகும். இதற்குக் கந்தபுஷ்கரணி என்றும் பெயர்வழங்கும்.

இந்தக் கந்தபுஷ்கரணியில் முழுகுவோர் சகல நலன்களையும் பெறுவார்கள்.



புண்ணியார்த்தங்களையும் அளிக்கவல்லது.

19. கந்தப்புட்கரணி தீர்த்தம் - இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர் சந்திர சேகர சடாதரனுடைய திருவடியை முடிமிசைச் சூடும் மேன்மையைப் பெறுவர்.

20. கங்கா தீர்த்தம் - இத்தீர்த்தம் முத்திக்கு ஏதுவாய் பெருமானைத் தரிசித்துப் போற்றுவோர் ஜெனனமாகிய பிறிவிக்கடலைக் கடக்கும் தெப்பம் போன்றிருக்கும்.

21. சேது திர்த்தம் - இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர்க்குச் சகல பாதகத்தினின்றும் நீக்கி நன்மையைக் கொடுத்தருளவல்லது.

22. கந்தமாதன தீர்த்தம் - இந்தத் தீர்த்தத்தில் மூழ்குவோர்க்கு அன்னையைப் போன்று ஆசிர்வதித்து அதிலும் பன்மடங்கு அதிகமாக பலனைக் கொடுக்கும்.

24. தென்புலத்தார் தீர்த்தம் - இதில் ஒரு தரம் மூழ்கி எள்ளுந் தண்ணீரும் இறைத்தவர்களுககு இம்மை மறுமையும் சிறந்து விளங்க செந்திலாண்டவன் திருவருட் சுரந்து வாழும் பதத்தைக் கொடுத்தருளுவான்.

மூவரும் தேவரும் காணாத முழு முதல் கடவுளாக எம்பெருமான் மாலயனாதி வானவர்கள் புடைசூழ நவ வீரர்கள் பணிசெய்ய செந்திலம்பதியிலே தங்கி வீரவாகு தேவரைச் சூரபன்மனிடம் தூதனுப்பினார். சூரபன்மனை எப்படியும் உய்விக்க வேண்டுமென்று எம்பெருமானுடைய கருணை எண்ணுகின்றது. இறுதியில் சூரபன்மனை சேவலும் மயிலுமாக்கி கொடியாகவும், வாகனமாகவும் கொண்டருளினார்.

பகைவனுக்குக் கருணை காட்டுகின்றவன் முருகன். வைதாரையும் அங்கு வாழவைப்போன்.

''இதமொழி பகரினும் மதமொழி பகரினும்
ஏழைக்கு இரங்கும் பெருமாளே''

என்பார் அருணகிரிநாத சுவாமிகள்.

அந்தச் செந்திலாண்டவன் தன் தந்தையாரைத் தினந்தோறும் பூஜை பண்ணுவார். ஒரு சமயம், சத்யோஜாதம் என்று பஞ்சலிங்கங்களை வைத்து, தேவலோக மலர்களைக் கையிலே வைத்துக் கொண்டு பரமேஸ்வரரைப் பூஜை செய்து கொண்டிருக்கின்றார்.

ஓம் சிவாய நம
ஓம் சிவலிங்காய நம
ஓம் பவாய நம
ஓம் பவலிங்காய நம
ஓம் ஆத்மாய நம
ஓம் ஆத்மலிங்காய நம
ஓம் சர்வாய நம
ஓம் சர்வலிங்காய நம

என்று வேத மந்திரங்களினாலே முருகப் பெருமான் அர்ச்சனை செய்கின்றார். அப்போது தேவர்களும் மாலயனாதிவானவர்களும வந்து பெருமானை வணங்கினார்கள். இறைவனுக்குச் சாத்துகின்ற கடைசி புஷ்பத்துடன் திரும்பித் தேவர்களுக்குக் காட்சி கொடுக்கின்றார்.


செந்திலாண்டவன் பூஜா மூர்த்தி அவன் கையிலே ஒரு மலர் உண்டு. வேறு எந்தத் தலத்திலும் இந்தத் தன்மை கிடையாது. மற்ற தலங்களிலே கையில் வேல் வைத்திருப்பார். இங்கே மலர் வைத்திருக்கின்றார். உங்கள் வாழ்க்கையை மலர வைக்கின்றேன் என்று.

ஆகவே எல்லா பக்த கோடிகளும் செந்திலாண்டவனைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்தி அவருடைய கருணைக்கு ஆளாவார்களாக.

திங்களும் கங்கை சூடும்
சிவனருள் குமரா போற்றி
மங்கையர் இருபா கம்வாழ்
மாதவன் மருகா போற்றி
செங்கைமா வடிவேல் ஏந்தும்
செந்திரு நகரா போற்றி
பங்கய மலர்வாழ் வேதன்
பணிந்திடும் பதனே போற்றி.

# அன்னையிடம் வேல்வாங்கி அசுரனைச் சம்மாரம் செய்த சிக்கல் சிங்காரவேலர்

செந்தமிழ்ச்செம்மல் வித்துவான் சொ.கணபதி தேசிகர்




சோழ வளநாடு பழம் பெருமையும், தொன்மையும் வாய்ந்தது. பல்லவர் ஆட்சிக்காலத்தில் சோழநாட்டின் சிறந்த துறைமுக நகரமாக நாகப்பட்டினம் விளங்கிற்று. தஞ்சைமாவட்டத்தில் இது இப்போதும் சிறப்புறவிளங்குகிறது. ''வங்கமலி கடல் நாகை'' என்று அப்பர்சுவாமிகளால் பாராட்டப் பெற்றது.

செல்வக் கடல் நாகையின் மேம்பால் விளங்கும் தலங்களிற் சிறந்தது திருச்சிக்கல் ஆகும். அருள்மிகு நவநீதேசுவரர் அன்புப் பிழம்பாக இவண் அருங்காட்சி தருகின்றார். இறைவி பெருமை பிறங்கும் நாயகியாக - இங்கே வேல்நெடுங்கண்ணி என்ற திருப்பெயர் தாங்கித் திருக்காட்சி வழங்குகின்றார். ஆறுமுகக் கடவுள் சிங்கார வேலவராக எழுந்தருளியுள்ளார்.

திருச்செந்தூரில் சூர சம்ஹாரம் செய்யும் முன்பு சிக்கல் என்னும் பெருமைமிகு இத்திருத்தலத்தில் அன்னை வேல்நெடுங் கண்ணியிடம் சக்திவேல் வாங்கிப் போருக்குப் புறப்பட்டதாக ஐதீகம். எனவே இப்புண்ணிய ஸ்தலம் மிகவும் பெருமைக்கும் வழிப்பாட்டிற்கும் உரிய முருகப் பெருமானின் திருத்தலங்களில் ஒன்றாக விளங்குகிறது என்பது மிகத் தெள்ளத் தெளிவு.

இத்திருத்தலத்தில் குடிகொண்டிருக்கும் சிங்கார வேலன் சுப்பிரமணிய பெருமானின் கீர்த்தையையும் அவனது அருளினையும் இங்கே காண வேண்டியது மிகவும் அவசியம். ஸ்ரீ சிங்கார வேலன் சஷ்டியின் போது அன்னையிடம் சக்திவேல் வாங்கியவுடன் வியர்வை பொழியும் வேலவன் காட்சி தருவது ஆனந்தமும் அதிசயமும் கொண்டது.

''சிக்கலம்பதி உறையும் சிங்கார வேலவனே
பக்கத்துணையிருப்பாய் மயிலோனே - சக்திவேல்
வாங்கிய நீசூரவதம் செயுமுன்னே வியர்வை
பொங்கியெழும் அருட்காட்சி ஆனந்தமே.''

என்ற இப்பாடல் சிங்காரவேலன் வியர்வை மகிமையை விளக்குவதாகும்.

வசிட்ட முனிவர் ஆசிரமம் தனக்கென




## ஓம் என்பது மும்மூர்த்திகளின் சொரூபம்.



அ - என்பது பிரம்மா
உ - என்பது விஷ்ணு
ம் - என்பது சிவம்
இம்மூன்றும் இணைந்த ஓம் என்பது மும்மூர்த்திகளின் சொரூபம்

அமைத்து நாடோறும் நீடுதவம் செய்து, தெய்வ மணங்கமழ் மல்லிகை வனத்தீசனைப் பணிந்து பூக்கைக் கொண்டு அரன் பொன்னடி போற்றி வரலானார். இவ்வமயம் காமதேனுப் பசு இத்தலம் சார்ந்து பாற்குளத்தில் நீராடி முன்பு செய்த தவத்தின் பயனால் மல்லிகை வனத்தீசனைப் போற்றி மாண்புறு பயனைப் பெற்றது. காமதேனுப் பசுவின் பால் பெருகியதால் உண்டான வெண்ணெய் நீர் நிலை பூராவும் பரவியது.

''செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும், மெய் வகையால் நான்காகும் விதித்த பொருள்'' என்ற சேக்கிழார் திருவாக்குப்படி, திருவருட் குறிப்பு இருந்த வண்ணம் வசிட்டர் இவ்வெண்ணெய்யைக் கண்ணுற்றார்.'' தவம் செய்வார் தம் கருமம் செய்வார்'' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க அவ்வெண்ணெய்யை ஒன்றாகச் சேர்த்து சிவலிங்கமாக அமைத்து, தன் ஆன்மார்த்த பூசையைத் தொடங்கிச் சிவபூசனை செய்யலுற்றார். பூசனை இனிது நிறைவேறியது. இலிங்கத்தை வேறிடத்தில் அமைக்க முயன்றார். இலிங்க வடிவினன் ''கல்'' என அசையாது நின்றார். வசிட்ட முனிவர் ''செல்வமே சிவபெருமானேயானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன். எங்கெழுந்தருளவது இனியே'' என்ற திருவாசகர் சொற்படி ''சிக்'' எனப் பிடித்தார். அன்று முதல் சிக்கல் எனப் பெயர் வரலாயிற்று என்பர் ஆன்றோர்.


அருள்மிகு வெண்ணெய்ப் பிரான்
Anbu

''செம்மனத்தர் மிகுந்த மாதவர்
நன்மை பெற்ற உளத்திலே மலர்
செல்வச்சிக்கல் நகர்க்குள் மேவிய
பெருமாளே''
- திருப்புகழ்

செல்வச் சிக்கலில் முருகப் பெருமான் சிங்கார வேலவராக அமர்ந்து காட்சியளிக்கிறார். முருகப் பெருமானுடைய பல பெயர்களில் சிகிவாகனன் என்ற திருப் பெயரும் ஒன்றாகும். சிகிவாகனனது தியான வடிவம் சிங்கார வேலவர் போன்றமைந்துள்ளது. சிகிவாகனன் என்றால் மயில் மீது இவர்ந்து விளங்குபவன் என்று பொருள்படும். (சிகி-மயில்)

சிகிவாகனன் இத்தலத்தே மன்னி வீற்றிருப்பதால் ''சிக்கல்'' என எண்ணுவர் மேலோர். சிக்குதல் கன்னட நாட்டுச் சொல் இதற்கு அகப்படுதல் என்று பொருள். இது அயல் மொழித் திசைச் சொல் ஆகும். சிவபெருமான் பக்தி வலையிற்படுபவன். அன்பு வலையிற் சிக்குபவன். சிவபெருமான் ''விறகில் தீயினன் பாலிற் படுநெய் போல் மறைய நின்றுளன்'' என்று அப்பர் பெருமான் திருவாய் மலர்ந்தருளுகிறார்.

வசிட்டர் அன்புக் கரங்களில், அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையாயிருப்பவன் வெண்ணெய்ப் பிரானாக அமர்ந்தான். அவரது அன்பினால் சிக்கினான். சிக்கலிலே அமர்ந்து அருள் புரியலானான். எம்மிறையீசன் பண்பட்ட அடியார்களுடைய உள்ளமெனும் வன்மனப் பாறையை மென்மையான வெண்ணெய் போலாக்கும் பரம கருணா நிதியாகிய சிவபெருமான், ஆன்ம கோடிகளின் சிக்கலைக்களையும் பொருட்டு இனிது இத்தலத்தே மேவியமர்ந்து நாளும் வழிபடும் அடியவர்கட்கு இன்னருள் புரிந்து வருகின்றான். ஆதலின் ''திருச்சிக்கல்'' எனப் பெயர் தோன்றக்காரணமாயிற்று என்று கனிந்த மனமுடைய சிவ பக்தியிற் சிறந்தோர் சிந்தனையில் இருத்துவர்.

இறைவர் திருநாமம் அருள்மிகு வெண்ணெய்ப் பிரான் எனும் நவநீதேசுவரன் என்பதாகும்.

வேனெடுங்கண்ணி என்னும் திருப்பெயரோடு உமா தேவியார் இத்தலத்தே தெற்கு நோக்கி திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளாள். வடமொழியில் சத்தியாயதாட்சி என்று வழங்கப்படுகிறது. தமிழ்ப் பெயரை நோக்கும்போது வேல் போன்ற நீண்ட கண்களையுடையவள் என்பது பொருள் ஆகும். ''வேலொண் கண்ணியினாளையோர்பாகன் வெண்ணெய்ப் பிரான்'' என்று திருஞானசம்பந்தர் பாடுகிறார்.

அருள்மிகு சிங்கார வேலவர் சூரனைச் சம்ஹாரம் செய்யச் சக்தி வேலினை இந்த வேனெடுங்கண்ணியிடம் பெற்றார். வேலைப் பெற்றபின் சிங்கார வேலவர்மேல் வியர்வைத் துளிகள் காணப்படும். முருகனடியார்கள் ஆண்டுதோறும் பெறுதற்கரிய இக்காட்சியினைக் கண்களாரக் கண்டு முருகானந்தக் கடலில் திளைத்துப் பரவசமடைகின்றனர்.

# கோடீஸ்வரர் யார்?



கோடிக்கணக்கான ரூபாய்களை வைத்திருப்பவர்கள் கோடீஸ்வரர்கள் அல்லர்.

தெருக்கோடியிலே வாழ்கின்ற ஏழை எளியவர்க்கு இரங்குகின்றவர்களே கோடீஸ்வரர்கள்.

இறைவன் திருநாமத்தை நாளும் உச்சரித்து அந்த எண்ணிக்கையில் கோடியைத் தொடுபவர்களே கோடீஸ்வரர்கள்.

தேவர்களைக் காக்கும் பொருட்டு சூரனுடன் போர் செய்யப் புறப்பட்டு வந்தார் முருகப் பெருமான். சூரபன்மன் சிங்கார வேலவனை வியந்து நோக்க, முருகன் அவனுக்குச் சிறிது நல் உணர்ச்சியை நல்கினார். சூரபன்மன் நிமிர்ந்து பார்த்தான். இதுகாறும் அத்தகைய திருவுருவத்தைக் கண்டதில்லை. ஆயிரமாயிரம் கதிர்களை வீசிப் பரப்புகின்ற தேசுத் திருவுருவம் தன் முன்னே நிற்பதைப் பார்த்தான். ஒருவனுக்கு அடிபணிந்து வளையவும் வியந்து அண்ணாந்து பார்க்கவும் அவனுக்குத் தெரியாது.. நின்றால் நின்றபடியே பார்க்கும் தகைமையன். இப்போது மிகமிக உயரமாக இருக்கிற முருகப்பெருமானின் திருவுருவத்தை அண்ணாந்து பார்த்தான்.



அம்பிகை

வேல் நெடுங்கண்ணி

பார்க்கும்போது இதுகாறும் இத்தகைய பேருருவத்தைக் கண்டிலோமே என்ற வியப்பு உண்டாகியது. ''யாரோ சிறிய குழந்தை ஒரு மயிற்குஞ்சின் மீது ஏறி வருகிறதென்று அல்லவா நினைந்தேன்? இவ்வளவு பெரிய அழகுத் திருவுருவத்தை உடையவன் முருகன் என்பதை இந்நாள் வரை நினைத்திலேனே என்று எண்ணி ஏங்குகிறான்.

'கோலமா மஞ்ஞைமீதிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள் பரிசிவை யுணர்ந்திலேன்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ'

என்று வியப்பு அடைகிறான்.

இது முதற் தோற்றத்தில் உண்டான வியப்பு.தான் சிறுவன் என்று கருதிய திருவுருவம் எல்லாப் பொருளுக்கும் மூலகாரணமாக இருக்கிற மூர்த்தியாக தோன்றியவுடன் தோற்றியவியப்பு.

அதற்குப் பின்னர் அவன் தன்னுடைய கண்ணால் அப்பெருமானது ரூபலாவண்யத்தை நுகரப் போகிறான். மெல்ல ஒவ்வோர் உறுப்பாக அவன் கண் உலவுகிறது. எல்லை கட்டிக் காணவொண்ணாத பரப்பும் எல்லைகட்டிச்சொல்ல முடியாத அழகும் உடைய அந்தத் திருவுருவத்தின் திருவடி முதல் திருமுடி வரையில் தன் கண்ணை ஓச்சுகிறான். பக்கத்தில் ஓட்டுகிறான். திருக்கரங்களின் முடிவு காணவில்லை. திருமேனியின் எல்லை காணவில்லை. அழகை அனுபவித்து முழுமையும் காணமுடியவில்லை. இந்த நிலையில் எம்பெருமானுடைய திருவழகில் ஈடுபடுகிறான்.

''உலகம் அறியாமையால் காமனைப் பேரழகன் என்று சொல்கிறது. அழகுக்குத் தலை எல்லை மன்மதன் என்று மயங்கிச் சொல்கிறார்களே! அந்த மன்மதன் எம்பெருமானுக்கு முன்னால் நிற்க முடியுமா? எம்பெருமானுடைய திருவுருவம் முழுமையிலும் உள்ள அழகு கிடக்கட்டும். அவன் திருவடியின் கண்ணே உள்ள அழகின் ஒரு பகுதிக்காவது ஆயிரம்கோடி மன்மதன்களுடைய அழகு எல்லாம் ஒன்றாகச் சேர்த்து உருவம் எடுத்தாலும் ஒப்பாகுமா? என்று ஈடுபட்டு அந்த அழகை வியக்கிறான்.

''ஆயிரம் கோடி காமர் அழகெலாந் திரண்டொன்றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந்தன்னில்
தூயஇவ் வெழிலுக் காற்றாதென்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமை யார் பகர வல்லார்''

-கந்தபுராணம்

சூரபதுமன் முருகனை இவ்வகையில் பலவாறு போற்றிப் புகழ்ந்தான். உண்மை ஞானம் சிறிது கைவரப் பெற்றான். அதனால் ''என்றும் மீளா ஆளாகவேயிருக்க எனக்கு ஆசை; ஆனால், என் மானம் என்னைத் தடுக்கிறது. என் செய்வேன்'' என்று பலவாறு தோத்தரித்துத் தன் குற்றத்தை உணர்ந்து வருந்தினான். அப்போது முருகன் மீட்டும் மயில் வாகனத்தின் மீது பண்டைய பாலக உருவில் காட்சியளித்தார்.

சூரபன்மன் மனம் முன்போல் அறியாமை மிக்கவனாகி மாயை மந்திர வலியால் கதிரவனும ஒளி மழுங்கும் பேரிருள் வடிவாக வானிற் கிளம்பித் தேவர்களை வருத்தினான்.

தேவர்கள் ''தேவர்கள் தேவே! ஓலம், மூவரும்

# அருளரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நூற்றாண்டு விழா



சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சார்பில் 22.8.06 அன்று அருளரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. பெருமன்றத்தலைவர் திருமிகு செ.வே.சதானந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மேதகு நீதியரசர் க.ஞானப்பிரகாசம் அவர்கள் ''செந்தமிழ் வேள்விச் சதுரர்'' திருமிகு சத்தியவேல் முருகன் அவர்கள், முனைவர் த.அமிர்தலிங்கம் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

ஆகி நின்ற மூர்த்தியே! ஓலம், ஓலம்'' என்று ஓலமிட்டனர். சக்தி வேற்படையினைப் பெற்றார். (இன்றும் வேல்நெடுங்கண்ணியிடம் வேல் வாங்கும் ஐதீகக் காட்சியில் சிங்காரவேலவன் மீது வியர்வைத் துளிகள் காணப்படும்) சிக்கல் அருள்மிகு சிங்காரவேலவர் ஆகிநிற்கும் முருகன் தமது திருக்கரத்திலுள்ள சக்தி வேற்படையை நோக்கி ''சூரன் மார்பைப் பிளந்து விரைவில் மீளுதி'' என்று ஏவினார். அவ்வேல் சென்று அவன் கொண்ட இருள் வடிவத்தை அழித்தது. சினங்கொண்ட சூரபன்மன் கடல் நடுவில் ஒரு பெரிய மாமரமானான். வேற்படை அங்கும் சென்று மாமரமாக இருந்த அவனை வெட்டி வீழ்த்தியது. மீண்டும் எழுந்து சூரபன்மன் வாட்போர் செய்ய வந்தான்.

வேற்படை அவன் மார்பைப் பிளந்து உடலை இரு துண்டாக்கிக் கடலில் தள்ளியது. தேவகங்கையில் மூழ்கித் தேவதேவன் திருக்கரத்தை அடைந்தது.

சூரபன்மன் அழியா வரம் பெற்றான் ஆதலின் மீண்டும் எழுந்தான். போர்ச் செருக்குக் கொண்டான். கோழியும் மயிலும் ஆனான். முருகன் முன்பு வந்தான், அருள்மிகு சிங்கார வேலவர் ஞான நோக்கருளினார். பரிசவேதியால் இரும்பு பொன்னானது போல அருள்மிகு சிங்கார வேலவனின் பார்வையால் சூரன் பகைமைய நீக்கி நல்லறிவு பெற்றான். கொடியாகவும் ஊர்தியாகவும் இருக்க அருள் வேண்டினான். அருள்மிகு சிங்கார வேலவரும் அவ்வாறே நல்லருள் புரிந்தார்.

கோழியைக் கொடியாகவும், மயிலை ஊர்தியாகவும் கொண்டார். தேவர்கள் ஆரவாரம் செய்தனர். தோத்திரம் செய்தனர். போர்க்களத்திலேயே அருள்மிகு சிங்காரவேலவர் அனைவருக்கும் அருள் வழங்கினார்.

ஐப்பசித் திங்களில் சிங்காரவேலருக்கு 10 நாட்கள் விழா நடைபெறும். வேலவர் தங்கவாகனங்களில் எழுந்தருளிக் காட்சி வழங்குவார். ஐந்தாவது நாளில் தேர்த்திருவிழா நிகழும். தேர்விழா முடிந்து வேலவர் அம்மையிடமிருந்து வேல் வாங்கிமலைக்குச் சென்ற பின் வேலவர் மேல் சிலமணிநேரம் வியர்வை துளிகள் காணப்படும். இஃது ஓர் அற்புதக் காட்சி. இத்தலத்திலும், திருச்செந்தூரிலும் சூரசம்மார விழாச் சிறப்பாக நடந்து வருகிறது. பின்பு தெய்வானைத் திருமணமும், வள்ளி கல்யாணமும் நடைபெறுகின்றன. இவ்விழாவைக் காண பல்லாயிரக்கணக்கான மக்கள் வெகு தூரங்களிலிருந்து வருகிறார்கள்.

**சத்ருசம்ஹார அர்ச்சனை :**

சிக்கலில் வேல் வாங்கி திருச்செந்தூரில் சம்ஹாரம் நடைபெற்றதாகப் புராணவரலாறு, சக்திவேல் பெற்றதால் சிங்கார வேலவர் என்ற பெயருடன் இத்தலத்தில் தனிச் சன்னதியில் அருள்பாலிக்கிறார். வேல் வாங்கிய ஸ்தலம் என்ற சிறப்புபெற்ற இடமாதலால் இங்கு சத்ருசம்ஹார அர்ச்சனை செய்வது மிக சிறப்புடையது. இந்த அர்ச்சனையானது நமக்கு எதிரியாக செயல்படும் நபர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்ற செய்யப்படும் அர்ச்சனையாகும். இந்த அர்ச்சனை செய்யப்பட்ட பின் நமது சத்ருக்கள் செயலிழப்பது நிச்சயம் என்பது கண்கூடு. இந்த அர்ச்சனை செய்ய விரும்புவோர் ரூ.1000/= செலுத்தினால் திருக்கோயிலில் பொருட்கள் வாங்கப்பட்டு அர்ச்சனை செய்துதரப்படும். தாங்கள் பொருட்கள் வாங்கி வந்தால் ஆலயத்திற்கு ரூ.250/= மட்டும் செலுத்த வேண்டும். எனவே இந்த அர்ச்சனையினைச் செய்து பயன்பெற வேண்டுகிறோம். இந்த அர்ச்சனை மற்ற திருக்கோயிலில் செய்வதைவிட இத்திருக்கோயிலில் செய்வது மிகவும் விசேஷமானதாகும்.

# பதில்?





★★★எஸ்.குமார், கோபிசெட்டிப் பாளையம்

கேள்வி : முருகன் என்ற சொல்லை முதன்முதலாக யார் உபயோகித்தார்கள்? எந்த நூலில்?

பதில் : முருகர் என்ற திருநாமம்மிகத் தொன்மையானது. இதனைச் சான்றோர்கள் வழிவழியாக ஓதி உய்வு பெற்றார்கள்.

திருமுருகாற்றுப்படை ''பத்துப்பாட்டு'' எனும் சங்க இலக்கியத்தில் முதல் நூலாக விளங்குகின்றது. இந்நூலின் கண் நக்கீரர்

''அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருக'' என்று பாடியுள்ளமை காணலாம்.



★★★த.கந்தசாமி, சேலம்.

கேள்வி : கருணை மிகுந்தவன் என்று கூறப்படும் கடவுளுக்குக் கையில் வாள், வேல் முதலிய கொடுமையான கருவிகள் ஏன் இருக்கின்றன?

பதில் : கருணை வடிவமான கடவுள் வாள், வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தியிருப்பது கொடுமையின் அடையாளம் அன்று.

வேல்என்பது ஞானம்

அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு.

*1.ஆழம் 2. அகலம் 3. கூர்மை*

வேலின் அடிப்பகுதி ஆழமாக இருக்கின்றது. நடுப்பகுதி விசாலமாக இருக்கின்றது. நுனிப்பகுதி கூர்மையாக இருக்கின்றது.

''ஆழ்ந்தகன்ற நுண்ணியனே''

என்பார் மணிவாசகர். எனவே ஞானமாகிய கருவிகளை இறைவன் வைத்திருப்பது நமக்கு ஞானங்களை வழங்கும் பொருட்டு, இவைகளை நுனித்துணரவேண்டும்.

★★★இரா.வசந்தி, திருவான்மியூர்.

கேள்வி : முருகன் கையில் வேலும்- சேவற் கொடியும், கிழே மயிலும் பாம்பும் வைத்திருப்பதன் உட்பொருள் என்ன?

பதில் : வேல் - ஞானம்

மயில் - விந்து

சேவல் - நாதம்

''நாதவிந்து கலாதீ'' என்பதனால் அறிக

பாம்பு - குண்டலி என்ற பாம்பை 'ஓம்' என்ற மயில் அடக்குகிறது.

★★★அ.கமலா, திருவொற்றியூர்,

கேள்வி : வீட்டில் நாள்தோறும் வைத்து வழிபடச்சிறந்தது படமா? சிலையா?

பதில் : வீட்டில் படம் வைத்து வழிபட்டால் போதும்.

★★★இராஜலிங்கம், ஈரோடு

கேள்வி : இறைவனைத் தோத்திரம் செய்யும்போது ஓர் இடத்தில் அமர்ந்துதான் தியானிக்க வேண்டுமா? வீட்டு அலுவல்களைச் செய்யும் போதே தோத்திரங்கள் கூறலாகாதா?

பதில் : இறைவனை நின்று கொண்டும், கிடந்து கொண்டும், நடந்து கொண்டும், பிற அலுவல்களைத் தொடர்ந்து கொண்டும் பாராயணம் செய்து வழிபடலாம்.

''நின்றாலும் இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும் மென்றாலும், துயின்றாலும் விழித்தாலும், இமைத்தாலும் மன்றாடு மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்''

-பெரியபுராணம்

★★★இராமலிங்கம், தருமபுரி,

கேள்வி : கந்தசஷ்டி விழாவை ஐப்பசி மாதத்தில் என் கொண்டாடுகிறார்கள்?

பதில் : கந்தவேள் ஐப்பசி மாதம் வளர்பிறை சஷ்டியில் சூரசம்ஹாரம் புரிந்தருளினார். ஆதலால் ஐப்பசி சுக்கிலபட்சத்துச் சஷ்டியின் அன்று விரதம் இருந்து விழா கொண்டாடுகிறார்கள்.

''வெற்பொடு அவுணன் தன்னை
வீட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி
அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துலையின் திங்கள்
சுக்கில பக்கம் தன்னில்
முற்பகல் ஆதி யாக
மூவிரு வைகல் நோற்றார்.''

என்று கந்தபுராணம் கூறுவது காண்க.

★★★கு.பங்கஜம், பாடியநல்லூர்

கேள்வி : கோயில் சென்றதும், சிலை எதிராக விழுந்து வழிபடுதலை விட கொடிமரத்தருகே விழுந்து வணங்குதல் சிறந்தது என்கிறார்களே! ஏன்?

பதில் : கோயிலுக்கு உள் பிரகாரத்தில் பலப்பல மூர்த்திகள் இருப்பதனாலும், சில அதி

தேவதைகள் சூட்சுமமாக இருப்பதனாலும் அங்கே கால்நீட்டி விழுந்து வணங்குதல் கூடாது. ஆதலால் கொடி மரத்திடம் விழுந்து வணங்க வேண்டும்.

★★★அன்பரசன், குளித்தலை.

கேள்வி : ஆலயங்களுக்குச் செல்லும்போது நவகிரகங்களை முதலில் வழிபட வேண்டும் என்றும், நவகிரங்களை விழுந்து வணங்கக் கூடாது என்றும் சொல்கிறார்களே! இந்த விதிகள் சரியானவையா?

பதில் : மாநில ஆளுநரைக் காண அவருடைய அரசபவனத்துக்குப் போகும் ஒருவன் வாசலில் நிற்கும் பணியாளர்களை அதிகம் மரியாதையா செலுத்தி வணங்குவான்?

ஆளுநருக்குத் தானே முதல் வணக்கம் செலுத்துவான். அதுபோல் ஆலயத்தில் இறைவனுக்குத்தான் முதல் வணக்கம் செலுத்த வேண்டும்.

இறை வழிபாடு முடிந்தபின் நவக்கிரகங்களை வழிபட வேண்டும். இறைவனை வழிபடாமல் நவகிரங்களை மட்டும் வழிபட்டால் அந்த நவக்கிரகங்களே அவர்களுக்கு நலம் புரியாது, தீமை புரியும்.

ஒரு வீட்டில் தலைவனை வணங்காமல் பணியாளனை வணங்கினால் அப்பணியாளன் நன்மையா புரிவான்? ''அங்கே என் எஜமான் இருக்கின்றார், அவருடைய திருமுன் என்னை வணங்கலாமா? என்பான்.

அதுபோல் இறைவனைப் புறக்கணித்துக் கோள்களை வழிபடலாகாது.

# நூல் மதிப் ரை




நூல்பெயர் : 108 வைணவ திவ்யதேச ஸ்தல வரலாறு
நூலாசிரியர் : வைணவச் சடராழி டாக்டர் ஆ,எதிராஜன்
நூல்வெளியீடு : ஸ்ரீ வைணவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 85/1 கோட்டையூர் சாலை, செக்காலை, காரைக்குடி தொலைபேசி: 225929
பக்கம் : 697
விலை : ரூ. 160

108 வைணவ திவ்விய தேசங்களைப் பற்றிப்பல நூல்கள் வெளிவந்து இருந்தாலும் இந்நூலைப்போல் எளிய இனிய நடையில் ஒவ்வொரு திவ்விய தேசத்தைப் பற்றிய அத்தனைச் சிறப்புக்களையும் தொகுத்து வழங்கும் ஒரு நூல் வெளியாகவில்லை என்று கூறலாம். நிச்சயம் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறவேண்டிய அருமையான நூல், நம் தமிழக அரசின் சிறந்த நூலுக்குரிய முதற்பரிசையும் பெற்றுள்ளது இந்நூல். இதை நாடு புகழும் பரிசாகப் பெற்று மகிழலாம் என்று வாழ்த்தியுள்ளார்கள் ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் சுவாமிகள்.

நூல்பெயர் : திருப்புகழ் முத்திக்கொருவித்து
நூலாசிரியர் : திருப்புகழ்மாமணி மு.அருணகிரி
நூல் வெளியீ : அருணகிரிப் பதிப்பகம் 26, கந்தசாமி கோவில் தெரு, பெரம்பூர் பேரக்ஸ், சென்னை - 600012 தொலைபேசி - 26422849
பக்கம் : 176
விலை : ரூ. 75.00

33 தலைப்புகளில் முத்திக் கொருவித்தாம் திருப்புகழை விவரிக்கின்ற இந்நூலை அனைவரும் படித்து இன்புறலாம்.

''உமக்குத் திருப்புகழே நிரந்தர பொக்கிஷம்'' என அடியேனுக்குக் குருநாதர் வழங்கிய ஆசி முதுமையில்தான் உருப்பெற்று. ''திருப்புகழாகிய கடலில் முத்துக்குளிக்க அடியேனது மனம் விழைந்ததில் ஆச்சரியமில்லை'' என்று முகவுரையில் தெளிவுபடுத்துகின்றார் முத்துவிழா கண்ட இந்நூலின் ஆசிரியர் திருப்புகழ்மாமணி மு.அருணகிரி அவர்கள்.

# சிற்பியர் மரபில் கண்திறப்பு

பொன்னி செல்வநாதன்


நவநாகரீக உலகில் வாழுகின்ற மக்களுக்கு மனக் கவலைகள் நிரம்ப இருக்கின்றது. ஒவ்வொரு சமயம் 'கடவுளே உனக்குக் கண் இருக்கின்றதா இல்லையா?' என்று மனதுக்குள்ளேயே குமுறுபவர்களும் உள்ளனர். வேறு சிலர் வாய்விட்டு சொல்லவும் செய்கின்றர்.

இந்நிலையில் அந்த கடவுளுக்கு கண் இருக்கின்றதா இல்லையா என்பதை அக்கடவுளைப் படைக்கும் சிற்பியரை அணுகிகேட்டபோது கிடைத்த தகவல்களைத் தொகுத்து எழுதப்பட்டதே இக்கட்டுரையாகும்.

சிற்பியர் என்றாலே கல், மண், மரம், செம்பு போன்றவைகளை கொண்டு சிலைகள் வடிப்பவர்கள் என்றும், கோயிலை நிர்மாணிப்பவர்கள் என்றும்தான் அறியப்படுகின்றார்கள். இச்சிற்பியர் போற்றதலுக்குரிய அரும்பெரும் படைப்புகளை படைத்தும் படைத்துக் கொண்டும் இருக்கின்றார்கள். உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால் அன்று இச்சிற்பியரின் முன்னோர்களினால் எழுப்பப்பட்ட நெடுங்கோபுரங்களைக் கொண்ட கோயில்களையும் - இன்று அவர் வழி வந்தவர்கள் அதனைத் தொடர்ந்து பெரிய கோயில்களுடன் வானளாவி கம்பீரமாக நின்று கொண்டிருக்கும் திருள்ளுவர் சிலை போன்ற அற்புத படைப்புகளையும் படைத்துக் கொண்டிருப்பதைக் குறிப்பிடலாம்.



சிற்பியர்கள் வடித்துக் கொடுக்கும் சிலையைக் கோயிலின் கருவறைக் குள் ஸ்தாபித்து வணங்கி வரும் இந்த சமுதாயத் தில் எத்தனைப் பேருக்குக் கடவுளுக்கே கண்திறக்கப்படுகின்ற ஒரு அற்புதமான நிகழ்ச்சியைப் பற்றி தெரியும்? இந்த அற்புதத்தைத்தான் சிற்பியர் மரபில் 'கண் திறப்பு', 'நயனோன்மீலனம்' என்றெல்லாம் அழைப்பார்கள்.



சிற்பியானவர் கடவுள் சிலையை சிற்பசாஸ்திர இலக்கணக் கோட்பாடுகளுக் கேற்ப செய்வார். சிலையின் ஒவ்வொரு பாகமும் அழகுற திறம்பட மக்களை கவர்ந்திழுத்திடும் வகையில் வடிப்பார்கள். சிற்பத்தின் முகமானது சாந்தமும் கனிவும் ததும்பிய திருமுகமாக செய்திடுவார்கள். இவ்வாறு வடிக்கப்படுகின்ற சிலையின் கண்களில் விழி மண்டலத்தைக் காட்டும் வட்டத்தை மட்டும் வடிக்காமலேயே விடப்படும்.

இவ்விழி மண்டலத்தைக் குறியிட்டு வடிக்கப்படுவதற்கு ஒரு சிறந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டு - அந்த நன்நாளில் சிலையினை ஸ்தாபிக்கப்பட வேண்டிய கருவறையோ அல்லது திருச்சன்னதியின் முன்போ அச்சிலையைச் செய்த சிற்பியானவன் சிலையின்கண்களில் ஒளி மண்டலத்திற்குண்டான வட்டத்தினைப் பொன்னாலான உளி மற்றும் வெள்ளியிலான சுத்தியல் கொண்டு உருவி அச்சிலைக்கு ஒளி மண்டலத்தை திறந்திடச்செய்வான்.

இச்சிறப்பு நிகழ்ச்சியினையே கண்திறப்பு என்றும் நயனோன்மீலனம் என்றெல்லாம் பெருமையுடன் சிற்பியர் குறிப்பிடுவர். இவ்வாறு சிற்பியரால் சிலா வடிவமட்டுமல்லாது கண் பார்வையும் பெற்ற கடவுள் என்றென்றும் அருளுடனும் உயிர்ப்புடனும் திருக்கோயிலில் விளங்குகின்றார்.

எந்தவொரு இடத்திலும் கண்திறக்கப்படாத சிலையினை வழிப்பாட்டிற்கு வைக்கப் படுவதில்லை. அவ்வாறு கண் திறக்கப்படாத கடவுள் சிலை வணங்குவதற்கு வைக்கப்படுமானால் அங்கு கடவுளின் அருளும் கருணையும் பார்க்க முடியாது எனவும் அச்சிலை இருக்கின்ற இடத்தில் தீயவை சூழ்ந்து கொள்ளும் என்றும்ச்சிற்ப ஆகம நூல்கள் குறிப்பிடுகின்றன.

எனவே கடவுளுக்கு கண் இருக்கின்றது - கடவுள் வெறும் கற்சிலையன்று. அதுவொரு உன்னதமான அருள் சுரந்திடும் மற்றும் உயிர்ப்புடன்கூடிய சிலையாகும்.



# கேட்டவரம் தரும் குச்சனூர் வட குரு பகவான்



சிவனோடு கூடிய

''கிரக தோஷம் நீங்கிட,
சுரபி நதியில் நீராடிச்
சனியைப் பார்க்கும் கண்கள்
கேட்ட வரம் தரும்
சிவனொடுறை வடகுருவைத்
தரிசிக்க ராஜயோகம்''

என்பது தவத்திரு முத்தானந்த சுவாமிகளின் அருள்வாக்கு.

தெற்கு நோக்கி அமர்ந்திருக்கும் தென்முகக் கடவுள் தட்சிணாமூர்த்தி, வடக்கு நோக்கி அருள்தரும் வடகுருஸ்தலம் அதிசயமானதாகும். யானையின் மீதமர்ந்து பக்தர்களுக்கு கேட்ட வரம் தரும் வடகுருவின் ராஜயோக காட்சி எங்கும் காண இயலாத அற்புதமாகும்.

'செண்பக நல்லூர்' சனீஸ்வர பகவான் பூலோகத்தில் சுயம்பாகத் தோன்றிய புண்ணிய ஸ்தலம் என்றெல்லாம் போற்றப்படும் பழமையும் பெருமையும் மிக்க குச்சனூர் சனிபகவான் திருக்கோயிலுக்கு அருகில் இந்த வடக்கு நோக்கிய தட்சிணாமூர்த்தி கோயில் உள்ளது.

தேவார மூவர், ஆதிசங்கரர், பட்டினத்தார், கம்பர், அருணகிரிநாதர், வள்ளலார் போன்ற அருளாளர்களுக்கு அருளிய ஞானபூமி திருவொற்றியூர் - சென்னை. அடியார்களின் அடியொற்றி இங்குச் சிலகாலம் தங்கி சிவப்பணி புரிந்து ஞானம் பெற்றவர் தவத்திரு முத்தானந்த சுவாமிகள்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் முத்தானந்த சுவாமிகள் என்ற திருமுறை விற்பன்னர் குச்சானூரில் தங்கிச் சிவத்தொண்டு செய்து வந்தார். ஒரு நாள் சிவபெருமான் இவர் கனவில் தோன்றி ''எனக்கு ஏன் இன்னும் கோவில் கட்டாமல் இருக்கிறாய்? அப்படிக் கட்டும்போது நான் வடகுருவாக காட்சி தரும் வகையில் கோயில் கட்டினால் இத்திருத்தலத்தில் சனிபகவானை வணங்கவரும் பக்தர்கள் குருவாக யானையின் மீது அமர்ந்து ராஜயோகத்தில் காட்சி தரும் என்னை தரிசிக்கும்போது அவர்கள் சகல தோஷங்களையும் நீக்கி கேட்டவரம் அருள்வேன்'' என்றருளி மறைந்தார்.

கனவு கலைந்தது, இறைவனின் கருணையை எண்ணி களிப்புற்றார் முத்தானந்த சுவாமிகள். பின் சிதம்பரம் சென்று தில்லைக்கூத்தன் திருவடிகளை வணங்கினார். மீண்டும் குச்சனூர் திருத்தலம் வந்தார்.

ஞான சம்பந்தப் பெருமான் சைவ சமயத்தின் மேன்மையை உலகிற்கு அறிவிக்க மதுரையில் ஏற்படுத்தியதைப் போல் பலருக்கும் தமிழ் வேதம் கற்பிக்கும் ஆதீனம் ஒன்றை நிறுவினார். இதன் நிர்வாகத்தில் சிவனொடுறை வட குருஸ்தலத்தை அமைக்க முயற்சி மேற்கொண்டு வந்தார். அவரது முயற்சிகள் முழுவதும் பூர்த்தியடைவதற்கு முன்பே 1964ம் ஆண்டு போகிப் பண்டிகையன்று தேனி மாவட்டம் தேவாரம் என்னும் திருத்தலத்தில் சிவபதவி அடைந்தார்கள்.

வட குருஸ்தலத்தை குச்சனூரில் தரிசிக்கும் பக்தர்களுக்கு ராஜயோகம் கிட்டும் என்பது அவரது அருள்வாக்கு.

ஆலமரத்தின் கீழ் அமர்ந்து வடதிசைநோக்கி தட்சிணாமூர்த்தி வேதங்களை பயிற்றுவிக்கிறார் என்ற தகவல் அவர் தென்முக கடவுள் என்பதற்கு முரணாக உள்ளதே என்று சிலர் சந்தேகம் எழுப்புகின்றனர்.

சிவனே குரு, தட்சிணாமூர்த்தி ஆகிய அம்சங்களாக உள்ளார். நவக்கிரக மண்டபத்தில் குருவின் திசைவடக்கு. தனி சன்னதியில் தட்சிணாமூர்த்தியின் திசைதெற்கு, தட்சிணாமூர்த்தி கல்லால் மரத்தின கீழ் குருவாக அமரும் போது வடக்கு திசைநோக்கி அமர்ந்து வேதம் கற்பிப்பதோடு பக்தர்க்ள கேட்கும் வரம் அருளுகிறார். தென்திசைநோக்கி அமரும்போது முயலகனை காலால் மிதித்து ஆணவத்தை அடக்க வேண்டும் என்று பாடம் கற்றுத் தருகிறார் என்பது அடியார்களின் கருத்து.

முத்து என்பதற்கு செல்வம் என்பது மற்றொரு பொருள். ஆனந்தம் என்றால் மகிழ்ச்சி அல்லது சந்தோஷம் என்பது அனைவருக்கும் தெரியும். செல்வத்தையும் சந்தோஷத்தையும் ஒருங்கே அளிக்கக்கூடிய சிவபெருமான் லிங்கமாகவும், கருணாமூர்த்தியாக கந்தவேளும், சாந்தமூர்த்தியாக தட்சிணாமூர்த்தியும் இத்திருக்கோவிலில் விளங்குகிறார்கள்.

வடக்கு நோக்கியவாறு இரண்டு அடி உயரத்தில் தட்சிணாமூர்த்தி பிரமாண்ட மூர்த்தியாக முகத்தில் சாந்தம் தவழ நாக உடுக்கை, சின்மய முத்திரை காட்டும் அபய ஹஸ்தமும், கொண்டு யானை மீது அமர்ந்து அருள்பாலிக்கிறார்.

மேதா, யோகா, வீணா தட்சிணா மூர்த்திகளுள் இவர் ராஜயோக தட்சிணா மூர்த்தியாவார்.

மாதா பிதாவுக்குப் பின் குருவே பெரியவர். தட்சிணாமூர்த்தி, வியாழன், குரு என்றெல்லாம் போற்றப்படும் இவரே உலகில் பெரியவர். குருவருள் இன்றித் திருவருள் இல்லை என்பதால் குருவே தெய்வத்திடம் நம்மை அழைத்துச் செல்பவர் ஆகிறார். வானியல் அறிவியல்கூட கோள்கள் யாவிலும் பெரியது வியாழன் கிரகம் தான் என்கிறது.

ஜுபிடர் கிரகமே பெரியது. குருவே பெரியவர். குணம் ரூபம் கடந்து ஞானம் தருபவர் குரு. ஆக குற்றம் நீக்குபவர். சீடரின் அறியாமைக் குற்றம் நீக்கும் ஆசிரியர் குரு ஆவார். தட்சிணா மூர்த்தி ஆலமரத்தின் கீழிருந்து தவம் செய்கிறார். அவரை வணங்கி அருள் பெறுவோம்.

வியாழன் தோறும் விளக்கேற்றி வழிபட்டு குருமூர்த்தி அருள்பெற பக்தர்கள் குவிந்தாலும் குருப்பெயர்ச்சி காலங்களில் சிறப்பு வேள்வி பூஜைகள் இங்கு சிறப்பாக நடைபெற்று வருகிறது. குருமூர்த்தி அருள்பெற அன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து குவிவார்கள்.

நவக்கிரகங்களில் அளவற்ற ஒளிவீசிப் பிரகாசிக்கும் குருபகவானுக்கு சிவபெருமான் அதிதேவதை ஆவார். ஜாதகத்தில் குருபகவான் பலவீனம் அல்லது பகை ஸ்தானம் அடைந்திருந்தால் பரிகாரம் செய்வது நல்ல பலனைத் தரும். ஏனெனில், பக்தி, பரிகாரம், அன்னதானம், 'குருவே சரணம்' என்று இறைவனின் திருநாமப்பாராயணம் ஆகியவற்றை மனமுவந்து ஏற்பவர் குரு.

தலச்சிறப்பு :

வாழ்க்கையில் திறமையிருந்து முன்னுக்கு வர முடியாமல் சிலர் திகைப்பதைப் பார்க்கிறோம்.

எவ்வளவு சம்பாதித்தாலும் பலர், திணறுவதை காண்கிறோம். நல்ல அழகும் வசதி வாய்ப்புகள் இருந்தும் சில பெண்களுக்குத் தகுந்த வரன் அமையாமல் தட்டிப் போகின்றது. ஆரோக்கியத்தில் குறைவற்ற சில தம்பதிகளுக்கும் குழந்தைச் செல்வம் கிடைப்பதில்லை. பலருக்குக் கடன் தொல்லையால் மூச்சு திணறுகிறது. வேறு சிலர் பிள்ளைகளின் ஒழுக்கக் குறைவான நடத்தையால் பேதலிக்கின்றனர். சிலர் தங்கள் முன்னோர் தேடிய சொத்தை விற்க முடியாமல் விரக்தியில் உள்ளனர்.

சிலருக்கு ஆர்வமும், திறனும் இருந்தும் கலைத்துறையின் கதவு தட்டினாலும் திறக்காத கற்கோட்டையாகவே இருக்கும்.

## அறுபதாம் ஆண்டு - மணிவிழா கொண்டாடுவது ஏன்?



தமிழ் வருடங்கள் 60 எனக் கணக்கிட்டு உள்ளார்கள். ஒருவருக்கு 60 ஆண்டு நிறையும் போது அவர் பிறந்த வருடம், நட்சத்திரம், ராசி மீண்டும் வருகின்றது. அப்போது அவர் மீண்டும் பிறந்ததாகக் கருதப்படுகின்றார். 60 ஆம் ஆண்டு விழாவை மணிவிழாவாகக் கொண்டாடி, 60ஆம் கல்யாணம் செய்வதால் தோஷங்கள் நீங்குவதாக நம் சான்றோர்கள் தெரிவிக்கிறார்கள். ஆடம்பரமின்றி அறுபதாம் மணிவிழாவைக் கொண்டாடுதல் நலம்.

இப்படி எத்தனையோ வித இன்னல்களைப் பட்டியலிடலாம். பெரும்பாலும் ஜாதகத்தில் 'பிதுர் தோஷம்' இருப்பதே இது போன்ற பல பெரும் பிரச்சனைகளுக்குக் காரணம் என்பது வல்லுநர்களின் கருத்து.

பிதுர்தோஷம் நிவர்த்தியாகிவிட்டால் எல்லாத் தடைகளும் மளமளவென்று தகர்ந்து விடும். பிறகு முன்னேற்றப் பாதையில் படுவேகமாகப் பயணிப்பது எளிதாகிவிடும். இந்த தோஷத்தை விரட்டிக் கேட்டதை அளிக்கும் வல்லமை படைத்தவர் தான் குச்சனூர் வடகுருபகவான்.

இத்திருக்கோயிலில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பகல் 12 மணிக்குத் தோஷ நிவர்த்திப் பரிகாரப் பூஜை செய்து கொள்பவர்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கிறது.

சுரபிநதியின் தீர்த்தம், பிருந்தாவனத்தின் மண், சிவபெருமான் மற்றும் வடகுருபகவானின் பிரசாதம் ஆகிய மூன்றும் பரம்பொருளின் வடிவங்கள். 'சிவபெருமானுக்கு நிவேதிக்கப்பட்ட உணவை உண்பவன் எல்லாவிதமான பாவங்களிலிருந்தும் விடுபட்டு சுத்தமான மனம் உடையவனாக ஆகிவிடுவான் என்கின்றனர் அருளாளர்கள். சிவபெருமானே இக்கோவிலின் பிரதான மூர்த்தியாக இருப்பதால் பிரதோஷ பூஜைகள் தவறாமல் நடந்து வருகிறது.


திருமணத்தடங்கல் நீங்க, குடும்ப ஒற்றுமைக்காக, வியாபார விருத்திக்காக, குழந்தைப் பேறுக்காக, வழக்குகளில் வெற்றி பெற, குழந்தைகளின் கல்வி மேன்மைக்காக இத்திருத்தலத்தில் தோஷ நிவர்த்தி பரிகாரப் பூஜைகள் நடைபெறுகிறது. மேலும் பூஜை முறைகள் தெய்வத் தமிழ் நெறியில் செய்து வேதங்கள் ஓதப்படுகிறது.

கோரமான இந்த கலியுகத்தில் துன்பங்களால் கஷ்டப்பட்டு மனமுடைந்து கிடப்பவர்கள் ஒரு முறையேனும் குச்சனூர் திருத்தலம் சென்று மேற்படி வடகுருபகவானைத் தரிசிக்க வேண்டும். குருபகவானின் சன்னதி நிம்மதியின் நிரந்தர இருப்பிடம்.

விளையாட்டாக வந்து இந்த ஆலயத்தைத் தரிசிப்பவன் கூட புனிதமடைகிறான். பொய்யில்லை. வந்து பாரீர்.

# நாழிகைக்குள் நமக்கருளும் சோளிங்கர் யோக நரசிம்மர்

- வைணவச் சுடராழி டாக்டர் ஆ.எதிராஜன்



''மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானை புகழ்சேர் பொலிகின்ற பொன் மலையைத்
தக்கானை கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே'' (1731)

பெரிய திருமொழி 8-9-4

என்று திருமங்கையாழ்வரால் பாடப்பட்ட இத்திருத்தலம் அரக்கோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சோளசிம்மபுரம் எனவும், சோளிங்கர் எனவும் கடிகாசலம் எனவும் வழங்கப்பெறும்.

வரலாறு :

இத்தலத்தைப் பற்றி விஷ்ணுபுராணமும் பாத்ம புராணமும் துணுக்குத் தகவல்கள் தருகின்றன.


சப்தரிஷிகளும், வாமதேவர் என்னும் முனிவரும் பிரஹலாதனுக்காக பெருமாள் காட்டின நரசிம்ம அவதாரத்தைக் காணவேண்டும் என்ற ஆவலால் இம்மலையில் வந்து தவமியற்றத் தொடங்கினர். அவர்கள் ஏன் இம்மலையைத் தேர்ந்தெடுத்தனர் என்றால் முன்னொரு காலத்தில் விசுவாமித்திரர் இம்மலையில் ஒரு கடிகை நேரத்தில் (ஒரு நாழிகை நேரத்தில்) நரசிம்மனைக் குறித்துத் துதித்து பிரம்மரிசி பட்டம் பெற்றாராம். எனவே கடிகை நேரத்தில் தாமும் நரசிம்ம மூர்த்தியைக் காணலாம் என்ற பேரவா காரணத்தால் இம்மலையைத் தெரிவு செய்து தவமியற்றத் தொடங்கினர்.

இஃதிவ்வாறிருக்க ஸ்ரீஇராமவதாரம் முடிந்ததும் ஸ்ரீராமன் வைகுண்டத்திற்கு எழுந்தருளுந் தருவாயில் தாமும் உடன்வருவதாக ஆஞ்சநேயர் கூற, ''கடிகாசலத்தில் என்னைக் குறித்து தவம் செய்யும் ஸப்த ரிஷிகட்கு உண்டாகும் இன்னல்களைக் களைந்து அதன்பின் வைகுந்தம் வருவாயாக'' என்று கூற, அவ்விதமே ஆஞ்சநேயனும் இம்மலை வந்து சேர்ந்தார்.

காலன், கேயன் என்னும் இரு அரக்கர்கள் இம்மலையில் நாராயணனைக் குறித்து தவஞ்செய்யும் ரிஷிகட்குப் பெருந் இடையூறு விளைவிக்க அவர்களொடு பொருது களைத்துப்போன ஆஞ்சநேயர் ஸ்ரீராமனைத் துதித்து நிற்க ஸ்ரீராமன் அனுமனுக்குக் காட்சி தந்து சங்கு சக்கரங்களை வழங்க, அவற்றால் இரு அரக்கர்களின் தலையைக் கொய்து ரிஷிகளுக்குத் தடையற்ற நிலையை உண்டாக்குகிறார். இறுதியில் ரிஷிகளின் தவத்தை மெச்சிய பகவான் நரசிம்ம மூர்த்தியாக அவர்களுக்குக் காட்சி கொடுத்து நின்றான்.

நரசிம்ம அவதாரத்தைக் கண்டு களித்த ஆஞ்சநேயர் ஆனந்த பஜனம் செய்து நிற்க ''ஆஞ்சநேயா நீநமது முன்பமர்ந்து யோக ஆஞ்சநேயராக மக்களுக்குத் தீராதபிணிகளையுந் தீர்த்துக் கலியுகம் முடியும் தறுவாயில் எம்மை வந்தடைவாயாக'' என்றருளி மறைந்தார்.

இதனால்தான் யோக நிலையில் அமர்ந்த (சங்கு சக்கரத்துடன்) ஆஞ்சநேயருக்கும் தனிச்சன்னதி உள்ளது. இப்பிரதான கீர்த்தி அனுமனுக்கு வேறெந்த திவ்ய தேசத்திலும் இல்லை. கலியுகம் முடியும் வரை அனுமனும் கலியுகத்திலேயே வாழ்வதாக ஐதீகம். எனவேதான் பக்தி ரசத்தோடு இராமாயணம் படிக்கும் இடம் தோறும் அனுமன் அருவமாகவோ உருவமாகவோ பிரத்யட்சம் ஆவதாய் ஐதீகம்.



மூலவர் :

யோக நரசிம்மர் (அக்காரக்கனி), வீற்றிருந்த திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம்.

தாயார் :

அம்ருதவல்லி (தனிக்கோயில் நாச்சியார்)

உற்சவர் :

பக்தவத்சல பெருமாள் (தக்கான்)

தீர்த்தம் :

அம்ருத தீர்த்தம், தக்கான் குளம், பாண்டவ தீர்த்தம்

விமானம் :

ஸிம்ஹ விமானம் கோஷ்டாக்ருதி விமானம் (ஸிம்ஹாக்ர விமானம்) ஹேமகோடி விமானம் என்றும் சொல்லப்படும்.

காட்சி கண்டவர்கள் :

ஆஞ்சநேயர், ஸப்த ரிஷிகள்

இங்குக் கீழே உற்சவரும், சுமார் 500 அடி உயரமுள்ள கடிகாசலம் என்ற பெரிய மலைமீது மூலவரும் அதனருகில் உள்ள சிறிய மலையில் சங்கு சக்கரங்களுடன் இலங்கும் ஆஞ்சநேயரும் அமர்ந்துள்ளனர்.

சிறப்புக்கள்

1. சுமார் ஒரு கடிகை (24 நிமிடம்) இங்கு தங்கியிருந்தாலே மோட்சம் கிடைக்கும் என்று ஐதீஹமிருப்பதால் இதற்குத் திருக்கடிகை என்னும் பெயர் வந்தது. கடிகை - நாழிகை, அசலம் - மலை எனவே கடிகாசலமானது.

2. இது ஒரு விசேஷமான பிரார்த்தனைத் தலம். பேய், பிசாசு சூனியம் என்று சொல்லப்படும் அதீத நோய்கள் தீர இங்கே வந்து விரதம் கடைபிடித்து பிரதி தினமும் தக்கான் குளத்தில் நீராடி, மலைமீதேறிப் பெருமானையும் ஆஞ்சநேயரையும் வழிபட்டு மகிழ்ச்சியுடன் செல்லும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும்.

3. தொட்டாச்சார்யார் என்னும் ஆச்சார்ய புருஷர் இத்தலத்தில் பிறந்தவர். இவர் ஆண்டுதோறும் காஞ்சிக்குச் சென்று வரதராஜப் பெருமாளை இடைவிடாது தரிசிப்பதை விரதமாகக் கொண்டிருந்தார். ஓராண்டு உடல் நலிவால் காஞ்சி செல்ல இயலாது போகவே தக்கான் குளக்கரையிலமர்ந்து காஞ்சி வரதராஜப் பெருமாளின் கருடசேவையை மனதில் எண்ணித்துதித்து கண்ணீர் சிந்த, கருட வாகனத்தில் காஞ்சிப் பெருமாள் இவருக்குக் காட்சி தந்தார். இதன் நினைவாக இன்றும் காஞ்சியில் பிரம்மோத்ஸவத்தின் மூன்றாம் நாள் காலை கருட வாகனத்தில் எழுந்தருளும்போது கோபுர வாயிலில் தாமதித்து நின்று சோளிங்கபுரம் தொட்டாச்சாரியார் சுவாமிகள் சேவை சாதிப்பதாய்க் கற்பூர ஆர்த்தி நடந்து வருகிறது. இத்திருக்கடிகையில் தொட்டாச்சார்யருக்கும் தனிச்சன்னதி உள்ளது.

4. சோழநாட்டைப் போன்று வளமிகுந்து நரசிம்மப் பெருமாள் உறைதற்கு இடமாதல் பற்றி சோளசிம்மபுரம் என்று அழைக்கப்படுகிறது. கல்வெட்டுக்களும் இப்பெயரையே குறிக்கின்றன. இப்போது சோளிங்கர் என்பர்.

5. சோழன் கரிகால் பெருவளத்தான் தன் நாட்டை 48 மண்டலங்களாகப் பிரித்த போது இப்பகுதியைக் கடிகைக் கேட்டம் என்னும் பெயராலேயே குறிக்கிறான். இச்செய்தி பட்டினப் பாலையில் பேசப்படுகிறது.

6. இராமானுஜர் தமது விசிஸ்டாத்வைத வைணவக் கோட்பாடுகளைத் தழைக்க நியமித்த 74 சிம்மாசனங்களில் இதுவும் ஒன்று.

7. ஒரு சமயம் துர்வாசமுனிவர் இத்தலத்தை அடைந்து இப்பெருமாளை வணங்கி நரசிம்மனின் திருத்துழாய் மாலையைப் பெற்று அதைக் கழுத்திலும், தலையிலும் சூடி ஆனந்தக் கூத்தாடினார் அப்போது அங்கே நிரம்பியிருந்த சாதுக்கள் கட்டத்தில் தானும் ஒருவனாக நின்ற புதன் (நவக்கிரங்களில் ஒருவன்) துர்வாசரின் இச்செயலைக் கண்டு ஏளனத் தொனியில் சிரித்துக் கேலி செய்ய். துர்வாசரால் சபிக்கப்பட்ட புதன், இக்கடிகாசலத்தில் பாண்டவதீர்த்ததில் நீராடி அங்கு ஆடியும் பாடியும் வரும் முனிவர்களுக்குத் தொண்டு செய்து தன் சாபந்தீர்ந்து மீண்டும் உயர்நிலை பெற்றான் என்று புராணம் கூறும்.

8. தொட்டாச்சார்யார் பல அற்புதங்கள் செய்து காட்டித் தமது பக்தியை வெளிக்காட்டிய இடம். இவரைப் போன்று எறும்பியப்பா என்னும் ஞானியும் இங்குதான் வாழ்ந்தார்.

9. முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்த ஸ்தலம்.

10. ஸ்ரீமந் நாதமுனிகளும், திருக்கச்சி

நம்பிகளும், மணவாள மாமுனியும், இராமானுஜரும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

11. கி.பி. 1781ல் ஆங்கிலேயருக்கும், ஹைதரலிக்கும் நடைபெற்ற இரண்டாம் கர்நாடகப் போர் இத்தலத்தின் முன்பகுதியில் நடைபெற்றபோதும் அவர்களால் இக்கோவிலுக்கு ஊறு நிகழவில்லை.


12. அஹோபில மலைதான் எம்பெருமான் நரசிம்ம அவதாரம் எடுத்த இடம். மீண்டும் ஒரு முறை முனிவர்க்காக அந்த அவதாரத்தை இங்கே மேற்கொண்டதால் தமிழகத்தில் எம்பெருமான் அமர்ந்துள்ள மலைகளிலேயே இது மிகச் சிறப்பானதாகும்.

13. ஏகசிலா பர்வதமென்றும் இதற்கு பெயர். பிரிவுகளும் சேர்க்கைகளுமின்றி ஒரே கல்லில் அமைந்த சிலைபோல் ஒரே கல்லில் இம்மலை அமைந்திருப்பதால் ஏகசிலா பர்வதம்.

14. இதனைச் சோழசிங்கபுரம் என்று சைவர்கள் அழைப்பர். ஏனெனில் முன்பு இத்தலத்தில் பெருமாளோடு சிவனும் சேர்ந்து கோயில் கொண்டிருந்தாராம். இப்போது சிவனுக்கு தனிக்கோவில் உள்ளது. தொட்டாச்சார்யார் தான் ஒரே கோவிலில் இருந்த சிவனைப் பிரித்து தனிக் கோவில் அமைத்தவர் என்று கூறுவர்.

15. இங்குள்ள பெரிய மலையில் யோக நரசிம்மர் எழுந்தருளியுள்ளார். இது 1500 படிகள் கொண்டது. இவரைத் தரிசித்துவிட்டுத்தான் சிறிய மலையில் எழுந்தருளியுள்ள ஆஞ்சநேயரைத் தரிசிக்க வேண்டும்.

16. பெருமாளுக்கு ஒவ்வொரு திவ்ய தேசத்திலும் ஒவ்வொரு விதமான வழிபாட்டு நியமம் உள்ளது. சில தலங்களில் உண்டியல் போடுவது. சில தலங்களில் மொட்டை, ஆனால் இங்கு பக்தர்கள் படியேறி வந்து தம்மைச் சேவிப்பதைப் பெருமாளே விரும்புவதாக ஐதீகம்.



## தெப்பக் குளத்தில் மீன்கள் வளர்ப்பதேன்?




மீனைப் பார்க்கின்ற மக்கள் அதன் வாழ்க்கைத் தத்துவத்தைக் கண்டு அறிந்து புரிந்து வாழ வேண்டும் என்பதற்காகவே கோயிற்குளங்களில் மீன்கள் வளர்க்கிறார்கள்.

கடல்நீரிலே மீன்கள் வாழ்ந்தாலும், கடல் உப்பு அந்த மீனுக்குச் செல்லாததைப் போல, நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்தின் ஆசைகள் இச்சைகள் நமக்குள் செல்லாதபடி நம்மை நாம் பாதுகாத்துப் பரிசுத்தமாய் வாழவேண்டும்.

17. மலைமேல் இருக்கும் நரசிம்மப் பெருமாளுக்குப் பக்தோசித ஸ்வாமி என்ற பெயருண்டு. பக்தர்கள் உசிதப்படி அருள்பவர் என்பது பொருள். அடிவாரத்தில் உள்ள பக்தோசித சுவாமிக்குத் தக்கான் எனப் பெயர். தீர்த்தத்திற்கும் தக்கான் குளம் என்பதே பெயர். திருமங்கையாழ்வார் இச்சொல்லை எடுத்தாண்டுள்ளார்.

18. அக்காரக் கனி என்றால் என்ன? இனிப்பே உருவான வெல்லமே மாமரமாய் பூத்துக் காயாகிக் கனியாகி நமக்கு கிடைக்கப் பெற்றது போல் சுவைமிக்க கனியாகும். அது போன்றவராம் இப்பெருமாள். (அதாவது வேண்டிய மாதிரியே வரம் கொடுப்பவர் என்பதுதான்)

19. 'வண்பூங்கடிகை இளங்குமரன்' என்பது பேயாழ்வார் மங்களாசாசனம்.

20. நூற்றெட்டு திருப்பதியந்தாதியில்.

''சீரருளால் நம்மைத் திருத்தி நாம் முன்னறியாக்
கூறறிவும் தந்தடிமை கொண்டதற்கே - நேரே
ஒரு கடிகையும் மனமே உள்ளுருகாய் முத்தி
தருகடிகை மாயவனைத் தான்''

21. கடிகாசலம் என்னும் இங்கு ஒரு நாழிகை நேரம் தங்கியிருந்து அக்காரக் கனியான எம்பெருமானைச் சேவித்தாலே மோட்சம் சித்திக்கும் என நூல்கள் மொழிகின்றன. அவ்விதம் திருக்கடிகை செல்ல முடியாதவர்களும் இருக்கலாம். அவர்கள் ஒரு நாழிகை திருக்கடிகையை மனதில் நினைத்து நரசிம்மரைச் சிந்தித்தாலே போதுமென்கிறார் பிள்ளைப் பெருமாளையங்கார்.



# திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)



"சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தசூ சூழ் பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியிற் சுடுமாறு போல
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே"

(திருமந்திரம் 117)

முன்னம் மந்திரத்தில் "தய - என்னுந்தோய மதாய் எழுஞ்சூரியனாமே" என்று, திருமூலர் இறைவனின் பெருங்கருணையைக் கோடிட்டுக் காண்பித்தார்.

புறத்தே உள்ள சூரியன் புற இருளை அகற்றுவது போல், அக இருளை உள்ளத்தில் இருக்கும் அறியாமையை நீக்குவது. அகத்தே ஒளிர்கின்ற இறைவனாகிய சூரியன் என்பது சான்றோர்களுடைய விளக்கம்.

திருத்தொண்டர் புராணத்தின் கடவுள் வாழ்த்தில், சேக்கிழார் பெருமான் நூலின் பெயரைக் கூற வரும்போது, மக்கள் சிந்தையில் சார்ந்து நின்ற பொங்கிய இருளை "செங்கதிரவன் போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம்" என்கிறார்.

சூரியன் என்றால் ஒளியைக் கொடுப்பது என்று பொருள் கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் சூரியனை முழுமுதற் கடவுளாக மக்கள் வழிபட்டார்கள். பின்னர் அந்த நிலை மாறியது. சூரிய ஒளிக்கு மேலான ஒளி ஒன்று உண்டு. அதுவே பரஞ்சோதி, சிவச்செழுஞ்சுடர். எல்லா ஒளிகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

"வானில் சூரியன் எப்படித் தோன்றும்? சந்திரன் எப்படிப் பிரகாசிக்கும்? விண்மீன்கள் எப்படி ஒளிவிடும், பரம்பொருள் ஆகிய சோதி ஒன்று சுடர் விட்டுப் பிரகாசிப்பதால் அல்லவா இவையெல்லாம் தங்களை வெளிப் படுத்துகின்றன!" என்று உபநிடத மந்திரம் ஒன்று கூறும்.

சிவப்பரம்பொருள், சூரியன், சந்திரன், உயிர் ஆகியவற்றை தனது அங்கமாகக் கொள்பவன் என்பது சித்தாந்தம். அட்டமூர்த்தி என்பது சிவனது திருநாமங்களில் ஒன்று. சூரியன், சந்திரன், அக்னி ஆகிய முச்சுடர்களையும் மூன்று கண்களாகக் கொண்டவன்.

ஆகவே சூரியன் சிவபெருமானின் வெளிப்பாடு நிலை. சிவபெருமானைச் சூரியனிடத்தில் வைத்து வழிபடுதல் சிவநெறியாகும்.

அண்டத்தில் சூரியனைக் காண்பது போல் பிண்டத்திலும்(உடலிலும்) காணலாம் என்பார்கள். சிவயோகிகள். சிவசூரியன் என்பவனும் அவனே.

உயிர்கள் உடம்போடு கூடி நின்றும், இருந்தும் கிடந்தும், நடந்தும் வாழ்க்கையை நடத்துகின்றன. அவை, எந்தத் தொழில் செய்யினும், சிவபெருமான் அவ்வுயிர்களோடு அழுந்திப் பொருந்தி, நீக்கமற நிற்கின்றான். பிராணவாயு இடநாடி, வலநாடி வழியாகச் செல்லாமல் நடுநாடி வழியாகச் செல்ல, சாதகன் கற்றுக்கொண்டால், பிராணன் ஒளியுடன் விளங்கும், அந்த ஒளிக்கு ஒளியாக சிவபெருமான் இருந்து கொண்டு உயிர்களின் மலங்களை நீக்கி, தற்போதத்தை அடக்கி அறிவுக் கறிவாய் விளங்குவான். இது திருமூலரின் உபதேசம்.

"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
கன்றிய நந்தி கருத்துள் இருந்தனன்
கொன்று மலங்கள் குழல் வழி ஓடிட
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே"

(திருமந்திரம் 1985)

உயிர்களுடைய அக இருளை, ஆணவத்தை அதனால் வரும் அறியாமையை நீக்கிச் சிவ ஞானத்தையும், சிவபோகத்தையும் நல்கி, ஒப்பற்ற சிவானந்தத்தை எந்நாளும் தருபவன் சிவன். உயிர்கள் பெறும் ஞான ஒளியிலே வந்து எழுகின்ற சிவஒளி, அக இருளை இராக் காலத்திலே பொருந்தி எழுகின்ற அருணோதயத்தைப் போன்று நீக்கி உயிர்களுக்குத் தெளிவினைத்தரும் என்கிறார் திருமூலர்.

"அன்றிய பாசஇருளும் அஞ்ஞானமும்
சென்றிடும் ஞான சிவப்பிரகாசத்தால்
ஒன்றும் இராவரும் அருளோதயந்
துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே"

(திருமந்திரம் 2001)

சிவசூரியன் என்கிற அந்த ஒப்பற்ற சோதி எங்கே எவ்வாறு அமைகிறது என்பதையும் திருமூலர் தெளிவுபடுத்துகிறார்.



# சுந்தரர் கயிலை புறப்பட்ட இடம்

18 ஆண்டுகள் மட்டுமே இப்பூவுலகில் வாழ்ந்திருந்தார் சுந்தரர், பரவையார், சங்கிலியார் என மனைவியர் இருவர் இருந்தும், கல்வியில் கரைகண்ட முத்தமிழ் வித்தகராய் நல்ல உடற்கட்டுடன் திகழ்ந்திருந்தும், கேட்டதெல்லாம் கிடைக்கச் செய்யும் தம்பிரான் தோழராய்ச் சிறப்புற்றிருந்தும் 'வெறுத்தேன் மனைவாழ்க்கை' என வாழ்வை வெறுத்த வீரத்துறவி அவர்.

அவர் கயிலை திரும்பவேண்டும் என்று விழைந்ததும், ஐராவத யானை அவர்முன் வந்து நின்றது. ஐந்தெழுத்து மந்திரம் ஓதி ஐராவத யானை மேல் ஏறிப்பறந்து கயிலை சென்றடைந்து விட்டார் சுந்தரமூர்த்தி நாயனார்.

அவர் கயிலைக்கு இப்பூவுலகில் இருந்து புறப்பட்ட திருத்தலம் திருவஞ்சைக்களம். கேரளாவில் உள்ளது. யாவரும் அதன் திசைநோக்கித் தொழ வேண்டிய புண்ணிய திருத்தலம்.

எல்லாப் பொருள்கட்கும் இடம் தருவது ஆகாயம் ஐம் பெரும்பூதங்களில் ஒன்று. எல்லாப் புவனங்களும் உலகங்களும் இந்த ஆகாயத்தில் இடம் பெறுகின்றன. இவற்றைப்பற்றிய அறிவுஎல்லாம் நமது மனம், புத்தி, சித்தம் ஆகியவை இயங்கி, நமக்குக் கிடைக்கும் அறிவுக்குள் அகப்பட்டுத்தோன்றுகின்றன.

பூத ஆகாயம் புற ஆகாயம் என்றால், நமது அறிவுகளை எல்லாம் அக ஆகாயம் எனலாம். நமது அறிவுகளை உள்முகப்படுத்தி இயங்கவைப்பது சிவனது பேரறிவு. ஆகவே அது செழுஞ்சுடர்ச் சோதியாகிய சிவாகாயம். எனவே அதுவே பரமாகாசம். இந்த சிவாகாயத்தைத் தன்னுள் கண்டு இன்புறுவது தான் அழகிய சமாதி நிலை என்கிறார் திருமூலர் பெருமான். எனவே சிவசோதியே, எல்லா அறிவினை இயக்கி அறிவிற்கு ஆதாரமாக இருப்பதும் தெளிவாகிறது.

''புறத்துள் ஆகாசம் புவனம் உலகம்
அகத்துள் ஆகாசம் எம் ஆதி அறிவு
சிவத்துள் ஆகாசம் செழுஞ்சுடர்ச் சோதி
சகத்துள் ஆகாசந்தான் அச்சமாதியே''

(திருமந்திரம் 3812)

இறைவன் திருவருள் இந்த ஒளியை நம்முள் மலரவைக்கின்றது. அது ஒரு மேலான அனுபவம். இந்த அனுபவத்தைப் பெற்றவர் திருமூலவர். அதை அவரே எடுத்துச் சொல்கிறார். இது பக்குவநிலை அநுபவம். சத்தி நிபாதத்தில் தீவிரக் கட்டம்.

''என் உள்ளத்திலே, மின்னல்போல் வந்து மறைந்தது ஒரு மாபெரும் அறிவு. இதுகாறும் அகக்கருவிகள் தரும் பொது அறிவினால் இயங்கி வந்தேன், சிவ ஒளியால், எனது ஆன்ம அறிவுக்கண்திறந்தது. கண்திறந்து பார்த்தபோது சிவன், என் கண்களிலே, என் அறிவிலே, அறிவாய் விளங்குவதைக் கண்டு கொண்டேன்''

''மின்னுதற சிந்தை விழித்தேன் விழித்தலும்
தன்னுற்ற சோதித் தலைவன் இணையிலி
பொன்னுற்றமேனி புரிசடைநந்தியும்
என்னுற்றறி வானான் என் விழித்தானே''

(திருமந்திரம் 2859)

உயிருக்கு உயிராக; உயிரின் அறிவாக, அறிவின் ஒளியாக விளங்கும் பரஞ்சோதியாகிய சிவபெருமான் அங்கிருந்து வெளிவந்து, உடலைத் தழுவி, உள்ளத்தை நிரப்பி, அறியாமையில் உழன்று கொண்டிருக்கும் மற்ற உயிர்களிடமும் பரவி, பிரபஞ்சம் முழுவதிலும் பேரொளியாக நிற்கும் காட்சியை அருளாளர்கள் அனுபவிக்கின்றார்கள்,

தன்னுள் எழும் பரஞ்சோதியைத் தான் காண இறைவன் வந்து அருள வேண்டும் என்று இறைஞ்சுகிறார் மாணிக்க வாசர்.

''மாறி நின் றெ்ன்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின் றெ்ன்னுள் எழும் பரஞ்சோதி
உள்ளவா காணவந்தருளாய்''

(திருவாசகம் . கோயிற்திருப்பதிகம்)

''மேலான சோதி ஒன்று என் உள்ளத்திலே தோன்றியது. அதைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். பிடித்தவுடன் அந்த ஒளி என்னுள் அடங்கியது. நான் பரஞ்சோதியுள் தோய்ந்தேன். தோய்ந்தபின் அது எல்லையின்று விரிந்து எல்லாவற்றிலும் வியாபிக்கக் கண்டேன்'' என்று தன் அனுபவத்தைச் சொல்கிறார் திருமூலர்.


''பரஞ்சோதியாகும் பதியினைப் பற்றப்
பரஞ்சோதி என்னுள் படிந்ததன் பின்னைப்
பரஞ்சோதியுள் நான் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக் கண்டேனே''

பறைதல் - வியாபித்தல் (திருமந்திரம் 2842)

திருஞானசம்பந்தரைப் பற்றிச் சொல்லும் போது சேக்கிழார் பெருமான், ''தாவில் சராசரம் எல்லாம் சிவம்பெருக்கும் பிள்ளையார்'' என்று பெருமிதம் அடைவார். இறைவன் அருள் பெற்ற அடியவர்கள் இறைமையை உலகெங்கும் பரப்பும் ஆற்றல் பெற்று இருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லையே!

(தொடரும்)

# திவ்விய தேசத்திற்கு நிகரான புரசைஅருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயம்



திருப்பதி ஸ்ரீநிவாசப் பெருமாளின் கோயில் மணியின் அம்சமாகப் பிறந்தவர் தூப்புல் ஸ்ரீவேதாந்த தேசிகர் ஆவார்.

திருப்பதி ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கு உகந்த புரட்டாசி மாதத்தில், திருமாலுக்குரிய திருவோண திருநட்சத்திரத்தில், முத்தித் திருத்தலமாம் காஞ்சிக்கு அருகில் உள்ள தூப்புல் எனப்படும் திவ்விய திருத்தலத்தில் அனந்த சூரி- தோத்தாரம்மா தம்பதியினரின் தவப்புதல்வராய இவரைப் பிறக்கத் திருவருள் புரிந்தார் என்பதை இவர்தம் புண்ணிய வரலாற்றால் அறிகின்றோம்.

''வஞ்சப் பலசமயம் மாற்றவந்தோன் வாழியே!
மன்னுபுகழ்ப் பூதூரர் மனமுவப்போன் வாழியே!
கஞ்சத் திருமங்கை உகக்க வந்தோன் வாழியே!
கலியன் உரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே!
செஞ்சொல் தமிழ்மறைகள் தெரிந்துரைப் போன் வாழியே
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன் வாழியே!
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே
சாற்றுத்தமிழ்த் தூப்புல் திருவேங்கடவன் வாழியே!''

என்ற வாழித் திருநாமத்தில் ''திருமலைமால் திருமணியாய் சிறக்க வந்தோன் வாழியே'' என்பதால் திருவேங்கடவன் திருமணியின் அவதாரமாகத் தோன்றிவர் தூப்புல் ஸ்ரீவேதாந்த தேசிகர் என்பதை அறியலாம்.

சென்னை நகரின் மையப் பகுதியான புரசைவாக்கத்தில் வெள்ளாளர் தெருவில் சுமார் 200 வருடங்களுக்கு முன்பு ஒரு சிறிய ஆலயம் மூலவர் சீனிவாசப் பெருமாளுடனும், ஆலயமுகப்பில் ஒரு பெரிய மணியுடனும் மட்டும் திகழ்ந்துள்ளது.

இந்தச் சீனிவாசப் பெருமானை நித்தமும் வழிபட்டு வந்த ஒரு முதியவர் கனவில் திருப்பதி வெங்கடேசப் பெருமாளே எழுந்தருளி ''என்னை திருப்பதியில் உள்ளது போல் பெரிய மூலவராக, என் மணியின் அவதாரமான வேதாந்த தேசிகருடன் பிரதிட்டை செய்து வழிபடுக'' என்று கூறி மறைந்துள்ளார்.

அந்த முதியவர் தாம் கண்ட கனவைப் பல்லோரிடமும் தெரிவிக்க உண்டானதுதான் புரசைஅருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயம்.

''திலதம் உலகுக்காய் நிற்பவன்
திருவேங்கடத்தெம் பெருமானே!''

என்று ஆழ்வார்கள் போற்றியுள்ள திருவேங்கடத்தெம் பெருமானை ஆஜானபாகுவாகக் கம்பீர உருவத்துடன் கோயிற்கட்டி வழிபட்டுள்ளனர் புரசைவாழ் வைணவத் திருத்தொண்டர்கள், திருவேங்கடவன் மணியின் அவதாரமாம் வேதாந்த தேசிகரையும் இவ்வாலயத்துள் பிரதிட்டை செய்து, சென்னையில் ஒரு திருப்பதியை உருவாக்கியுள்ளனர் திருமால் திருத்தொண்டர்கள்.

இருநூறு வருடங்களாகச் சென்னையில் புரசையில் சிறப்புற்று விளங்கும் இவ்வாலயத்தின் ஒரு நூற்றாண்டு வரலாறு மட்டுமே தெளிவாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

*1896*இல் பெருமாள் பக்தர் ஜெகந்நாத செட்டியார் என்பவர் இக்கோயிலை விரிவுபடுத்திக் கட்டியுள்ளார்.

*1897* முதல் *1930* வரை இவரது மருமகன் விஜயராகவனும், *1931* முதல் *1949* வரை அவரது மருமகன் வீரராகவலுவும் இந்தக் கோயிலைச் சிறந்த முறையில் நிர்வகித்து வந்துள்ளனர்.

*1950*ஆம் ஆண்டு முதல் இக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையில் நிர்வாகத்தின் கீழ் இருந்துவருகின்றது.

தற்போது இக்கோயிலின் பரம்பரை அறங்காவலாக திரு எம். நடராஜன் அவர்கள் நல்லமுறையில் திருக்கோயிலை நிர்வகித்து





வருகின்றார்.

ஆகமங்களில் கூறியுள்ளபடி 12 வருடங்களுக்கொருமுறை இத்திருக்கோயிலின் மகாசம்ப்ரோட்சணம் நடைபெறவும், நின்று போயிருந்த பல உற்சவங்களை உபயகாரர்கள் மூலம் சிறப்பாக நடத்தவும் இவர் செய்துள்ள பணிகள்பாராட்டிற்குரியன.

*1984, 1995* ஆண்டுகளில் மகாசம்ப்ரோட்சணம் நடைபெற்றுள்ள இவ்வாலயத்தில் 2.7.06 அன்று மீண்டும் மகாசம்ரோட்சணவைபவம் நம் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் முன்னிலையிலும், நம் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு த. பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையிலும், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் சுவாமிகள் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றுள்ளமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

''சீனிவாசப் பெருமாள் பக்த ஜனசபை'' என்ற அமைப்பு சுமார் 7 லட்சரூபாய் நிதியைத் திரட்டித் திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொண்டு மிகச் சிறப்பாகத் திருக்குடநீராட்டு விழாவை நிகழ்த்தியுள்ளது.

இந்த அமைப்பின் தலைவராகத் திருமிகு தேவராஜ நாயுடு அவர்களும், துணைத் தலைவராக திருமிகு ஈஸ்வரப்பன் அவர்களும் இருந்து இவ்வரிய திருப்பணியைத் திறம்பட முன்னின்று நிகழ்த்தியுள்ளார்கள்.

புரட்டாசி மாதந்தோறும் சனிக்கிழமைகளில் காலையில் கருடசேவை இத்திருக்கோயிலில் நடைபெறுவதைக் காணக் கண்கோடி வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாட்களில் திருவிளக்குப்பூஜை இக்கோவிலில் தவறாமல் நடை பெறுகின்றது. கார்த்திகை மாதம் கடைசி வெள்ளிக் கிழமை அன்று நடைபெறும் விஷேசதிருவிளக்குப் புஜையில் நூற்றுக்கணக்கான கன்னிப் பெண்கள் கலந்து கொள்கிறார்கள். இப்பூசையில் பங்கேற்கும் கன்னிப் பெண்களுக்கு விரைவிலேயே திருமணம் கைகூடும் அற்புதமும் இவ்வாலய விசேடமாகும்.

மார்கழி மாதம் இங்கு வைகறைப்

# வாசகர் எண்ணங்கள்



★★★''கலைஞர் அவர்களைக் கவர்ந்த கல்வெட்டு''க் கட்டுரையும், ''திருக்குவளையும் திருவாரூரும்'' தகவலும் சுவையானவை.

நம்கலைஞர் அவர்களின் ஆன்மீக உள்ளத்தை அடையாளம் காட்டி எங்களைப் பரவசப்படுத்திவிட்டது.

- த. சத்தியநாராயணன், அயன்புரம்

★★★''பத்தினித் தெய்வம்'' எனப் போற்றப்படும் கண்ணகி உலகாளும் உமையவளாம் மாரியம்மனின் ஒரு அவதாரம் தான் என்பதை ஆதாரபூர்வமான ஆன்மீகத் தகவல்களுடன் விவரித்த கட்டுரை சிலிர்ப்பில் ஆழ்த்திவிட்டது.

''கண்ணகியே உன்னை எங்கள்

கண்ணெதிரிலே நிலைநாட்டி விட்டோம்''

என்ற வரிகள் தமிழக வரலாற்றில் மறக்கமுடியாத மாணிக்கவரிகள்.

எஸ்.சித்ராசுரேஷ், பவானி - 638301.


★★★''கோபுரம் காத்த கோமான் - காலச்சுவடுகள் பகுதியில் மருது பாண்டியர்தம் ஆன்மீக அறநெஞ்சத்தைக் கண்டு மிகுந்த பரவசத்திற்கு ஆளானேன்.

- வேல் முருகன், வடபழநி.

★★★நூற்றாண்டு விழா கண்ட நம் வாரியார் சுவாமிகளின் திருப்புகழ் இன்னும் பல நூற்றாண்டுகள் நிலைத்திருக்கும், கேள்வி-பதில் பகுதியில் அவர் தெரிவித்திருக்கும் கருத்துகள் ஒவ்வொன்றும் அருமை அருமை.

- இராமாநுஜம், திருவரங்கம்.





# பெண்ணை ஆணாக்கிய அழகிய மன்னார்

பாளையங்கோட்டை நகர் நடுவே வீற்றிருக்கும் எழிலார்ந்த ஆலயம் அருள்மிகு அழகிய மன்னார் இராஜகோபாலசுவாமி ஆலயம் ஆகும்.

இந்த சுவாமி பக்தர்களுக்குப் புத்திர பாக்கியம் நல்கியருள்புரியும் சுவாமி எனப்போற்றப்படுகிறார். இதனால் குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் இவரை வேண்டிப் புத்திரபாக்கியம் பெறுகின்றனர்.

விஷ்ணுப்பிரியன் எனும் அர்ச்சகர், இவரை வேண்டி வழிபட்டுப் புத்திரபாக்கியம் பெற்றார். ஆயினும் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் பெண்ணாகப் பிறக்க வருத்தமுற்ற அர்ச்சகர் தம்பூஜா பாத்திரத்தைக் கோபமாக வீசகோபாலர் மூக்கு பின்னப்பட்டதாம்.

தம் செயலுக்கு வருந்திய அவ்வருச்சகர் வீடு சென்று பார்க்கைதயில் அக்குழந்தை ஆணாகமாறி இருக்கக் கண்டுபின் கோயிலுக்கு வந்து கோபாலனைப் பூசித்து மகிழ்ந்தார். ஆகவே இக்கோயில் இராஜகோபால சுவாமிக்குப் பெண்ணை ஆணாக்கிய அழகிய மன்னார் என்னும் திருப்பெயரும் உண்டானது.

புத்திரபாக்கியம் இல்லாதோர் இக்கோயிலுக்கு வந்து வழிபட புத்திரபாக்கியம் உண்டாகும். ஆணோ, பெண்ணோ எக்குழந்தை வேண்டுமானாலும், வேண்டி அவ்வாறே வரமும் பெறலாம்.



பூசைவிசேசமாக நடத்தப்பட்டு வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல்திறப்புடன் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

தைமாதம் பிரம்மோற்சவ விழா மிகச்சிறப்பாக நடைபெறுகிறது.

தமிழ்ப்புத்தாண்டு அன்று ''திருமலைபோல் ஒரு நாள் விழா'' என்னும்விழா இவ்வாலயத்தில் நடைபெறுகின்றது. திருப்பதியில் பெருமாளுக்கு எவ்வாறு விழா நடத்தப்படுகின்றதோ அதே மாதிரி இவ்வாலயத்திலும் நடத்தப்படுகின்றது.

ஆரம்பத்தில் சிறிய ஆலயமாக இருந்த இந்த ஆலயம் கடந்த 200 ஆண்டுகளில் கருடாழ்வார் சந்நிதி, அலர்மேல் மங்கைத் தாயார் சந்நிதி, ஸ்ரீ ஆண்டாள் சன்னிதி, பெருமாள் சந்நிதி, ஆஞ்சநேயர், சக்கரத்தாழ்வார், லட்சுமிஅயக்கிரீவர் சந்நிதிகளுடன் மிகவிரிவு பெற்று நாளும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வழிபடும் ஆலயமாகத் திகழ்ந்து வருகின்றது.

மைலாப்பூர் அகாடமி 1986, 1998, 2002 ஆகிய ஆண்டுகளில் சென்னையின் சிறந்த கோயில் என இக்கோயிலைப் பாராட்டிக் கேடயம் வழங்கிச் சிறப்பித்திருப்பதைக் கொண்டு இவ்வாலயத்தின் பெருமையை நன்கு உணரலாம்.

ஒரு கோவிலில் 100 வருடங்கள் திருவாராதனம் நிற்காமல் நடந்தால் அந்தக் கோயில் திவ்விய தேசத்திற்கு இணையானது என்று பெரியோர் கூறுகிறார்கள்.

கடந்த 200 வருடங்களாகத் திருவாராதனை தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாலும் சமயச் சான்றோர்கள், ஆதினகர்த்தர்கள் பலரும் இவ்வாலயத்திற்கு வருகை தந்து சிறப்பித்து வருவதாலும், பக்தர்கள் பலரும் புரசைஅருள்மிகு சீனிவாசப் பெருமாளை, திருப்பதி சீனிவாசப் பெருமாளைப் போன்றே ஆராதித்து வருவதாலும், இத்திருக்கோயில் மங்களாசனம் பெற்ற திவ்விய தேசத்திற்கு நிகராகத் திகழ்ந்து வருவது கண்கூடு.

## வைகறை துயில் எழு



ஓஸோன் என்ற இயற்கையான சக்தி அதிகாலை நேரத்தில் காற்று ரூபத்தில் மனிதர்கள் எளிதாகப் பெற்றுப் பயன் அடையும் விதத்தில் கிடைக்கின்றது.

ஆகவே வைகறையில் துயில் எழுந்து அதிகாலை நடைப்பயிற்சி மேற்கொள்ளுவதாலும், மங்கையர்கள் அதிகாலையில் வீட்டுவாசல் பெருக்கிக் கோலம் போடுவதாலும் ஓஸோன் சக்தியை அவர்கள் முழுமையாகப் பெற்று உடல் நலத்துடன் வாழ முடியும்.

# ஐப்பசியில் அவதரித்த முதலாழ்வார்கள்

இந்திரா ஆராவமுதன்




பன்னிரு ஆழ்வார்களில் முதல் மூன்று ஆழ்வார்களை முதலாழ்வார்கள் என்று அழைக்கிறோம். அவர்கள் முறையே பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் எனப்படுவார்கள். இவர்கள் மூவருமே தொண்டை நாட்டில் ஒரே வருடத்தில், ஒரே மாதத்தில் அடுத்த அடுத்த நாட்கள், நட்சத்திரங்களில் ஆனால் வெவ்வேறு ஊர்களில் அவதரித்தார்கள் என்பது தான் உண்மையான அதிசயம்.

''தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து'' என்று ஔவைப் பிராட்டியினால் புகழாரம் சூட்டப்பட்ட நாடு தொண்டை நாடு. இதன் தலைநகரமான காஞ்சிபுரமோ நகரங்களுள் சிறந்தது என்ற பெருமை பெற்ற ஊராகும்.

துவாபரயுகத்தில் 862900 வருடங்களுக்குப்பின் சித்தாத்திரி என்கிற வருடத்தில் ஐப்பசி மாத வளர்பிறையில் அஷ்டமி திதி, செவ்வாய்க்கிழமை கூடிய திருவோண நட்சத்திரத்தில் காஞ்சியில் உள்ள திருவெஃகா என்கிற பதியில் உள்ள ஒரு பொய்கையின் பொற்றாமரை மலரில் பொய்கை ஆழ்வார் தோன்றினார். பகவானின் ஐந்து ஆயுதங்களில் ஒன்றான பாஞ்சசன்னியம் என்று அழைக்கப்படும் திருச்சங்கின் அம்சமாக இவரைக் கூறுவர்.

பல்லவ மன்னனான மாமல்லன் ஒரு நகரத்தை உருவாக்கினார். அதைக் கலைவளம் மிக்கச் சிற்பங்கள் நிறைந்த எழில் மிகு கலைக்கூடமாக அமைத்ததனால் அவருடைய பெயராலேயே மாமல்லபுரம் என்று இன்றைக்கும் அழைக்கப் படுகிறது. சென்னைக்குத் தெற்கில் உள்ள கடற்கரையில் இருந்ததால் அதைக் கடல்மல்லை என்றும் கூறுவர்.

அந்த கலைச்சிற்பங்களில் முக்கியமானவை பகீரதன் தவம், பஞ்சபாண்டவர் மண்டபம், கோவர்த்தன மண்டபம், அர்ச்சுனன் தவம், பஞ்சபாண்டவர்கள் ரதம் ஆகியவையாகும். அர்த்தஸேது என்று இதை அழைக்கிறார்கள்.

இங்குள்ள பெருமாள் கோயிலை விஜயநகர அரசனான பராங்குசன் கட்டியதாகத் தெரிய வருகிறது. பெருமாளின் பெயர் ஸ்தலசயனப் பெருமாள். இதுபற்றிய சுவையான கதை :

புண்டரீக மகரிஷி என்பவர் க்ஷீராப்தி நாதனுக்கு அர்ச்சனை செய்ய விரும்பி, ஒரு கூடை நிறைய தாமரை புஷ்பங்களை எடுத்துக் கொண்டு கிழக்கே நோக்கிச் சென்றார். சமுத்திரம் வழியை அடைத்துக் கொண்டு இருப்பதாக நினைத்து பக்தி மேலீட்டால் சமுத்திர ஜலத்தை கைகளால் இறைத்து விடலாம் என்று இறைக்க ஆரம்பித்தார்.



இவருடைய பக்தியை உலகிற்கு வெளிப்படுத்த எண்ணி பகவான் ஒரு வயதான பிராமண வேடத்தில் வந்து அவரிடம் ஆகாரம் கேட்டார். அவரும் வயதானவர் கேட்கிறாரே என்று ஆகாரம் கொண்டு வரச்சென்றார்.

அவர் திரும்பி வரும்போது கண்ட காட்சி அவரை மெய்சிலிர்க்க வைத்தது. அவர் கூடையில் வைத்திருந்த தாமரைப் புஷ்பங்களைச் சாற்றிக் கொண்டு வெறும் தரையில் சயனித்தபடி பெருமாள் அவருக்குக் காட்சி அளித்தார்.

மற்ற திவ்ய தேசங்களில் பகவான் பாம்பணை மீது சயனக் கோலத்தில் படுத்திருப்பார். ஆனால் இங்கோ தரையில் சயனித்த கோலத்தில் இருப்பதால் பகவானை ''ஸ்தல சாயீ'' என்றும் இந்தத் தலத்தை ''கடல்மல்லைத் தலசயனம்'' என்றும், அழைக்கிறார்கள். பகவானின் திருவடி அருகில் புண்டரீக மகரிஷி கைகூப்பியபடி காட்சி தருவதை நாம் காணலாம். உண்மையான பக்திக்குப் பகவான் எவ்வாறு கட்டுப்படுகிறார் என்பது இந்த தலவரலாறு ஒரு உதாரணமாகும்.

இவ்வாறு புகழ்பெற்ற இந்த தலத்தில் உள்ள மல்லிகை புதரின் நடுவில் நீலோத்பல மலரில் சித்தாத்திரி வருடம் ஐப்பசி மாதம் நவமி திதி புதன்கிழமை அன்று அவிட்ட நக்ஷத்திரத்தில் பூதத்தாழ்வார் அவதாரம் செய்தார். இவர் கௌமேதகி என்கிற கதையின் அம்சமாவார்.

அடுத்துத் தொண்டை நாட்டில் உள்ள சென்னையில் சிறப்பு மிக்க செல்வந்தர்களும் அறிவில் சிறந்த அறிஞர்களும் வசிக்கும் இடத்தை மயிலை என்றும் மயிலாப்பூர் என்றும் சொல்வார்கள். தெய்வமறையான திருக்குறளை உலகிற்குத் தந்த ஐயன் திருவள்ளுவரின் கோயிலும் இங்கு தான் உள்ளது. அத்தகைய பெருமை மிக்க மயிலையில் ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் உள்ள திருக்கிணற்றில் செவ்வல்லி மலரில் அதே சித்தாத்திரி வருடம் ஐப்பசி மாதம் தசமி திதி, வியாழக்கிழமை கூடிய சதயம் நக்ஷத்திரத்தில் பேயாழ்வார் தோன்றினார். இவரை நாந்தகம் என்கிற வாளின் அம்சம் என்பர்.

இவர்கள் மூவரும் ரஜஸ், தமஸ் ஆகிய குணங்கள் இல்லாமல் சத்வகுணம் மேலோங்கப் பெற்று எம்பெருமானுக்கு அடிமை செய்யும் உத்தேசத்துடன் ஞானம், பக்தி, வைராக்யம் ஆகிய குணங்களுடன் சம்சாரிகளுடன் ஒட்டாதவர்களாக வாழ்ந்து வந்தனர்.

வெவ்வேறு ஊர்களில் பிறந்த காரணத்தினால், இவர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் அறியாமல், ஒரு நாள் இருந்த ஊரில் மறுநாள் இருக்காமல் ஊர் ஊராகச் சென்று இறைவனைத் தரிசித்தபடி இருந்தனர்.



இவர்கள் மூவரையும் ஒன்றாகச் சேர்த்து அவர்களின் மூலம் அருளிச் செயல்களை அனுபவிக்க வேண்டும் என்பது இறைவனின் திருவுள்ளம் அல்லவா? அதன்படி அவர்கள் மூவரின் மனத்திலும் திருக்கோவலூருக்குச் செல்ல வேண்டும் என்கிற எண்ணத்தை இறைவன் விதைத்தார். மூவரும் திருக்கோவலூர் வந்தனர்.

பொய்கை ஆழ்வார் முதலில் வந்து பெருமாளைச் சேவித்தார். மாலை வந்தது. மழை வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அதனால் இரவைக் கழிப்பதற்கு இடம் தேடினார். மிருகண்டு முனிவரின் வாசலில் நின்று கேட்டார். இடைகழியில் தங்குவதற்கு இவருக்கு அனுமதி கிடைத்தது, படுத்துக் கொண்டார்.

பூதத்தாழ்வார்

சற்றைக்கெல்லாம் பூதத்தாழ்வார் வந்து இடம் கேட்க, ''ஒருவர் படுக்கலாம், இருவர் அமரலாம்'' என்று பொய்கை ஆழ்வார் பதிலளித்து உள்ளே வரச் சொன்னார். இருவரும் அறிமுகம் செய்து கொண்டனர்.

இன்னும் சிறிது நேரம் கழிந்தபின் இதே போல் உதவி கேட்டு ஒரு குரல் ஒலித்தது. உடனே, முதலில் வந்த இருவரும் ஒரே குரலில், ''ஒருவர் படுக்கலாம். இருவர் அமரலாம். மூவர் நிற்கலாம்'' என்று சொல்லிப் பேயாழ்வாரை வரவேற்றனர்.

மூவரும் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டனர். அந்தக்கால வழக்கப்படி ஒருவரை ஒருவர் தண்டனிட்டுக் கொண்டும், பகவானின் குணாதிசயங்களைப் பற்றி விமர்சித்துக் கொண்டும், புகழ்ந்து கொண்டும் இருந்தனர். ஞானிகளான இவர்களுடன் நிற்க விரும்பிய பெருமாள் இவர்களை நெருக்கத் தொடங்கினார். ஆழ்வார்கள் மூவரும், தங்களை நெருக்குவது யார் என்று தங்கள் ஞானச் சுடர் விளக்கினால் கண்டு கொண்டு மகிழ்ச்சி அடைந்தனர். அதன் விளைவாக பொய்கையாழ்வார்

''வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று'' *(1)*

என்று ஆரம்பித்து முடிவாக

''ஓரடியும் சாடிஉதைத்த ஒண்மலர்ச் சேவடியும்
ஈரடியும் காணலாமென் நெஞ்சே - ஓரடியில்
தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர்
மாயவனையே மனத்துவை'' *(100)*

என்று நூறு பாடல்களை அந்தாதித் தொடரில் பாடினார். இதை ''முதல் திருவந்தாதி'' என்பார்கள்.

அடுத்துப் பூதத்தாழ்வார் தன் பங்குக்கு

''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தையிடு திரியா - நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்'' (1)

''மாலே நெடியோனே கண்ணனே, விண்ணவர்க்கு
மேலா வியன்துழாய்க் கண்ணியனே - மேலால்
விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே, என்றன்
அளவன்றால் யானுடைய அன்பு'' *(100)*

என்று ஆதியாகவும் அந்தமாகவும் அதே அந்தாதித் தொடரில் பாடி முடித்தார். இதை ''இரண்டாம் திருவந்தாதி'' என்பர்.

## ''அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டது போல்'' என்ற பழமெழியின் பொருள் என்ன?



இங்கு அரசன் என்பது அரசமரம் எனப்பொருள்படும்.

அதிகாலை நேரத்தில் அரசமரம் சுற்றினால் பெண்களுக்குள்ள கர்ப்பப்பைக் கோளாறுகளை ஓசோன் கலந்துள்ள அரசமரக் காற்று நீக்கிவிடும் என்று மருத்துவ ஆய்வு கூறுகின்றது.

ஆகவேதான் அரசமரத்தடி விநாயகரை அதிகாலையில் வழிபட குழந்தை வரம் உண்டாகும் என சமயச்சான்றோர்களும் வற்புறுத்தியுள்ளனர்.

இவ்வாறு அரசமரம் மகிமை வாய்ந்ததாக இருப்பினும், அரசமரத்தை மட்டும் சுற்றிவிட்டுத் தன் கணவனோடு மனைவி ஒத்துப் போகாவிட்டால் புத்திரபாக்கியம் உண்டாகாது என்பதை வலியுறுத்தும் வண்ணமே

''அரசனை நம்பி புருஷனைக் கைவிடாதே'' என்று அறிவுறுத்தப்படுகின்றது.



பேயாழ்வார்

# மங்கையர் நெற்றியில் குங்குமம் அணிவதேன்?

கிருமிநாசிப் பொருட்களான மஞ்சள், படிகாரம், சுண்ணாம்பு இவை கலந்து குங்குமம் தயார் செய்யப்படுகிறது.



இரண்டு புருவங்களுக்கு நடுவிலுள்ள நெற்றிப் பகுதியில் குங்குமம் அணிவதால் உடலிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகளின் உஷ்ணத்தைக் குங்குமம் குறைக்கின்றது.

குங்குமத்தின்மேல் சூரியஒளி படும்போது அதிலுள்ள மூலிகை சக்திகளுடன் வைட்டமின் டி சக்தியும் உடலுக்குள் சென்று நன்மை உண்டாக்குகின்றது.

மன அமைதி, மங்கலகரமான தோற்றம், உடல்நலம் இவை அனைத்தும் தருவதால் மங்கையர் குங்குமத்தை நெற்றியில் அணிகின்றார்கள்.

மூன்றாவதாக, பேயாழ்வார் தாம் கண்ட காட்சியை முதல் இருவர் போன்றே அந்தாதியாக பாடும் எண்ணத்துடன் திருமாலின் கோலத்தைத் தெரிவிக்கும் வகையில்

''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன், திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன், புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று'' (1)

என்று தொடங்கி அந்தாதியின் நூறாவது செய்யுளாக

''சார்வு நமக்கென்றும் சக்கரத்தான், தண்டுழாய்த்
தார்வாழ் வரை மார்பன் தான்முயங்கும் - காரார்ந்த
வானமரு மின்னி மைக்கும் வண்டாமரை நெடுங்கண்
தேனமரும் பூமேல் திரு''. *(100)*

என்று முடித்து பரந்தாமனின் பண்பினைப் ''மூன்றாம் திருவந்தாதி''யாக மொழிந்தார். ஆக மூன்று திருவந்தாதிகளும், ஞான, பக்தி, சாக்ஷாத் காரங்களைச் சொல்லுவதாக அமைந்தன.

திருவரங்கம், திருவிண்ணகர், திருக்கோவலூர், திருவெஃகா, திருவேங்கடம், திருப்பாற்கடல், பரமபதம் ஆகிய 7 தலங்கள் பொய்கை ஆழ்வாரால் பாடப்பட்ட பெருமை பெற்றன.


திருவரங்கம், தஞ்சை, திருக்குடந்தை, திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், திருத்தண்கால், திருக்கோவலூர், திருக்கச்சி, திருப்பாடகம், திருநீர்மலை, திருக்கடல்மல்லை, திருவேங்கடம், திருப்பாற்கடல் ஆகிய 13 தலங்கள் பூதத்தாழ்வார் பாடியதால் பெருமை பெற்றன.

திருவரங்கம், திருக்குடந்தை, திருவிண்ணகர், திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், அட்டபுயகரம், திருவேளுக்கை, திருப்பாடகம், திருவெஃகா, திருவல்லிக்கேணி, திருக்கடிகை, திருவேங்கடம், திருப்பாற்கடல், பரமபதம் ஆகிய 14 தலங்கள் பேயாழ்வார் கருத்தான திருமாலின் திருவடிகளே மக்கட்குப் பற்றுக்கோடு என்று வலியுறுத்தும் வகையில் சிறப்புப் பெற்றன.

மற்ற ஆழ்வார்களுக்கு முன்னே அவதரித்து வைணவத் தலங்களை தரிசித்து முதல் முதலாக திவ்யப் பிரபந்தங்களை அருளிய வழிகாட்டி என்ற பெருமையினால் இவர்கள் ''முதலாழ்வார்கள்'' என்று பெயர் பெற்றனர். ஸ்ரீரங்கத்தில் அரங்கனை வலம் வந்து தாயார் சன்னதிக்குப் போகும் வழியில் இம் மூவரின் சன்னதி இருப்பதை நாம் தரிசிக்கலாம். இவர்களின் திருநக்ஷத்திரங்கள் 2006 அக்டோபர் 30, 31 நவம்பர் 1 ஆகிய தேதிகளில் வருகின்றன.

# தீராநோய் தீர்த்தருளும் மூலிகைவனேஸ்வரர்

ஏ. கிருஷ்ணன்



திருந்துதேவன்குடி என்ற தலம் சோழநாட்டுத் தலங்களில் காவிரியின் வடகரைத் தலங்களில் 42ஆவது தலமாக உள்ளது. இது திருஞான சம்பந்தரால் பாடல் பெற்ற தலமாகும்.

திருந்துதேவன்குடியில் சிவபெருமான் திருந்துதேவன் எனவும், தேவதேவன் எனவும் பெயர் பெறுவார். இந்தத் திருந்துதேவன் எழுந்தருளிய தலம் திருந்துதேவன்குடி என பெயர் பெற்றது. திருந்து என்ற சொல் திருத்தமான- முழுமையான செம்மையான எனவும் திருந்துதேவன் என்பது முழுமையானகடவுள் எனவும் பொருள்படும்.

இந்திரன், பிரமன், விஷ்ணு முதலான எல்லா தேவர்க்கும் பெரிய தேவராக முழுமுதற் கடவுளாக இருப்பதால் தேவ தேவேசனார் என்றும் பெயர் உள்ளது.

நண்டும், இந்திரனும் வழிபட்டது

முன்னொரு காலத்தில் துருவாசமுனிவர் சிவபூசைசெய்து கொண்டிருக்கும் பொழுது அவ்விடம் வந்த ஒரு இயக்கன் துருவாசரைப் பார்த்துக் கை கொட்டி நகைத்துப் பரிசாசம் செய்தான்.

இதைப் பார்த்த துருவாசர் கோபம் அடைந்து, ''நீசிவபூசையை இகழ்ந்து கைகொட்டி நகைத்தாய். ஆகையால் நண்டு தனது கொடுக்கை அடிக்கடி கை கொட்டுவது போல் சேர்த்துச் சேர்த்துப் பிரிக்கும். அதனால் நீநண்டாகக் கடவாய்'' என்று சாபம் இட்டார்.

இயக்கன் பயம் கொண்டு. அவர் காலில் விழ்ந்து சாபவிமோசனம் கே'ட்டான். பிறகு துருவாசர் ''நீசிவ பூசையை இகழ்ந்ததால் நீயும் சிவபூசைசெய்தால் தான் இப்பாவம் தீரும். ஆகவே பூலோகத்தில் உள்ள திகுந்து தேவன் குடியில் உள்ள அகழியில் பூக்கும் தாமரை பூவைப் பறித்து அத்தலத்து திருந்துதேவனை வழிபாடு செய். இப்படி ஒரு மண்டலம் செய்தால் உனக்குச் சாபவிமோசனம் உண்டாகும்'' என்றார்.

சாபத்தின்படி இயக்கன் திருந்துதேவகுடி அகழியில் நண்டாகப் பிறந்தான். அகழியில் பிறந்த நண்டிற்கு ஒரு நாள் இறைவன் அருளால் சிவனை வழிபட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அகழிக்கரையில் நெடுக வளை தோண்டிக் கொண்டே சென்ற நண்டு சிவலிங்கத்தின் அடிப்பாகத்தை அடைந்து அங்கிருந்த துளைவழியாக மேலே ஏறிச் சிவலிங்கத்தின் உச்சியை அடைந்தது. இப்படி வழி தெரிந்து கொண்ட நண்டு வந்த வழியாகத் திரும்பி, அகழியை அடைந்தது. அகழியில் பூத்த தாமரைத்தண்டைக் கொடுக்கால் நறுக்கித் தண்டோடு தாமரைத் தண்டை கொடுக்கால் கவ்வியபடி வளையில் இழுத்து போய்ச் சிவலிங்கத்தின் முடியில் இட்டுப் பாணத்தை வலம் வந்தது. இங்ஙனம் நண்டு நாள் தோறும் சிவனைவழிபட்டுவந்தது.

இதற்கு இடையில் தேவலோகத்து இந்திரன் அசுரர்களோடு போரிட்டுப் பலம் குறைந்து போனதால் மீண்டும் பலத்தை பெறுவதற்காகத் தன் குருவான வியாழ பகவானின் அருளோடு திருந்து தேவன் குடியில் உள்ள தேவதேவேசனை நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூவால் சகஸ்ரநாம அர்ச்சனை செய்து தன் பலத்தை மீண்டும் பெறதேவ தேவேசனைவழிபட்டான்.

அகழியில் நீராடி அவ்விடம் உள்ள தாமரை பூக்களை பறித்தான். ஆனால் ஒரு பூ குறைந்ததால்

# திருக்கண்ணபுரம் முனியோதரன் பொங்கல்

-பா.குபேந்திரபாபு



வைணவத்தலங்கள் என்றாலே பெருமாளின் அழகுமுகம் நினைவுக்கு வருவதுடன், அத்தலங்களில் வழங்கப்படும் பிரசாதங்களின் சுவையும் நினைவுக்கு வருகின்றன. திருப்பதி லட்டு, காஞ்சிபுரம் வரதராஜபெருமாளின் இட்லி, பார்த்தசாரதி கோவிலின் சர்க்கரைப் பொங்கல் - அவ்வரிசையில் திருக்கண்ணபுரத்து முனியோதரன் பொங்கலும் சிறப்பானதாகும்.

5 நாழி அரிசி, 3 நாழி பருப்பு, 2 நாழி நெய் ஆகியவற்றினைச் சேர்த்து பக்குவமாக செய்யப்படும் இப்பொங்கலுக்கென ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு.

திருக்கண்ணபுரத்து சௌரி ராஜ பெருமாளிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர் - சோழ மன்னனுக்கு கப்பம் வாங்கி கொடுக்கும் பணியிலிருந்தவர் முனையதரையர் என்பவர் ஆவார். இவர் ஒரு கொடிய பஞ்சகாலத்தில் தாம் சேகரித்த கப்பம் முழுவதையும் கோவிலில் திருவாராதனத்திற்கும், அன்னம் வழங்குதலுக்கும் செலவிட்டு விட்டார். சினமுற்ற சோழஅரசன், முனையதரையரைச் சிறையிலிட்டு விட்டார். முனையதரையரிடம் பேரன்பு வாய்ந்த மாதரசியொருத்தி, ஐந்து நாட்களுக்குள் தன் அன்பன் சிறையிலிருந்து மீளாவிடில் தீயில் பாய்ந்து உயிர் விடுவதாக ஸ்ரீ சௌரி ராஜ பெருமானை வேண்டிச் சபதம் செய்தாள். சோழமன்னனது கனவில் தோன்றி முனையதரையரை விடுவிக்குமாறு சௌரிராஜ பெருமாள் உத்திரவிட்டார்.

விடுதலை பெற்ற முனையதரையர், தீயிற்புகுந்தருவாயில் தம்பால் காதல் மிக்க அம்மங்கை நல்லாளைத் தடுத்து வாழ்த்தினார். அன்று அவர், அந்த மங்கை சமைத்த பொங்கலை மானசீகமாகப் பெருமாளுக்கு நிவேதனம் செய்து உண்டார்.

மறுநாள் காலை பெருமாளின் திருமேனியில் பொங்கலுடன் நெய் வடிந்தொழுகுதலைக் கண்ட அர்ச்சகர்கள் நிகழந்தவற்றை அறிந்து, பெருமாளின் பேரருளைப் போற்றினர்.

அன்றுமுதல் பெருமாள் நாள்தோறும் அர்த்த சாமத்தில் பொங்கல் அமுது செய்ய கட்டளை நிறுவினார் முனையதரையர். இதனை ''முனியோதரன் பொங்கல்'' எனக் கூறுகின்றனர்.

ஸ்ரீ சௌரிராஜப் பெருமாளின் சௌந்தர்யமும் நெய்வடியும் பொங்கலும் நம் மனதை விட்டலகா தவையாகும்.

---

அர்ச்சனை செய்ய முடியவில்லை. ஒரு பூ காணாமல் போனதைக் கண்டு வியப்படைந்தான். சிறிது நேரத்தில் இலிங்கத்தின் உச்சியில் உள்ள தொளை வழியாக ஒரு நண்டு வருவதை கண்டான். அந்த நண்டு தனது கொடுக்கால் ஒரு தாமரைப் பூவை இழுத்து வருவதையும் லிங்கத்தின் உச்சியில் பூவை இட்டுக் கீழே ஆவுடையாரில் இறங்கி மேலேயே மூன்றுமுறை வலம் வந்தது. அப்பொழுது தேவசேனர் உமாதேவியோடு காட்சிகொடுத்துச் சாப விமோசனம் கொடுத்தார். நண்டு இயக்கனாக மாறியது. சிவப் பூசைசெய்த துருவாசரைப் பரிகாசம் பண்ணின சாபம் நீங்கித் தன் உலகம் அடைந்தான் இயக்கன்.

இதனைப் பார்த்த இந்திரன் வியந்தான். உடனே சிவனிடம் இழந்த தன் பலத்தை அளிக்கும் படி கேட்டான். சிவபெருமானும் ''ஆயிரம் தாமரைப் பூவைக் கொண்டு அர்ச்சனை செய்தால் பலம் வரும்'' எனக் கூறி மறைந்தார். இந்திரனும் அவ்வாறே அர்ச்சனை செய்து இழந்த பலத்தை பெற்று இந்திர லோகம் சென்றான் என்று வரலாறு கூறப்படுகிறது.

மேலும் நண்டின் பூசைக்கு மகிழ்ந்து அதன் சாபத்தை நீக்கி விமோசனம் தந்ததால் ஈசனுக்கு கர்க்கடேசுவரர் என்ற பெயர் வழங்கி வருகிறது. (கர்க்கடகம் என்றால் நண்டு). இத்தலம் பூர்வத்தில் மூலிகைவனமாக இருந்தபோதே அவ்வனத்தின் நடுவில் இறைவன் சுயம்புவடிவமாகத் தோன்றியதால் மூலிகைவனேசுவரர் என்ற பெயரும் ஏற்பட்டது. மேலும் சோழமகராஜனுக்கு நோயை நீக்க இத்தலத்து இறைவன் இறைவி, மருத்துவராக சென்றதால் மருந்தீசர் எனவும் பெயர் உள்ளது.

மேலும் தன்வந்திரி என்ற தேவர்களின் மருத்துவர், மூலிகைகள் மூலம் மருத்துவம் செய்ய அகத்தியர் மூலம் மூலிகைவனமான திருந்து தேவன்குடி வந்தார். அவ்விடம் சுயம்புலிங்கம் இருப்பதைக் கண்டு வழிப்பட்டார். பிறகு இறைவன் அருள் பெற்று அபூர்வ மூலிகை செடிகளை எடுத்துக் கொண்டு தேவலோகம் சென்றார் என்று வரலாறு கூறப்படுகிறது.

சோழராஜன் இத்தலத்தில் திருப்பணி செய்தபோது அம்மன் சிலை கிடைக்காமையால் புதிதாக ஒரு அம்மன்சிலை செய்தான். இறைவன் மருத்துவராகவும், இறைவி மருத்துவச்சியாகவும் வந்ததால் புதியதாக செய்த சிலைக்கு அருமருந்தம்மை என்றும், பிறகு பழைய சிலை கிடைத்ததால் அதற்குப் பூர்வத்தில் இருந்த அம்மை என்ற பொருளில் அபூர்வநாயகி என்றும் பெயர் சூட்டினான். இக்கோயில் நண்டாங் கோயில் என்று கூறப்படுகிறது.

கும்பகோணத்திலிருந்து காவிரியின் வடகரை வழியாக மயிலாடுதுறைக்குச் செல்லும் பேருந்து வழியில் கிழக்கே 7கி.மீ தொலைவிலும். மயிலாடுதுறைக்கு மேற்கே 29கி.மீ தொலைவில் உள்ள திருவிசநல்லூர் அடைந்து அங்கிருந்து வடக்கே 2கி.மீ தூரம் சென்றால் திருந்துதேவன் குடியை அடையலாம்.



# அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயில்


**திருவலிதாயம் (குருஸ்தலம்)பாடி**

**அம்பத்தூர் வட்டம், சென்னை - 600 050. போன் -044-26540706**

E-Mail : thiruvalitayam@vsnl.net website : wwwthiruvalitayam.com


**குருபெயர்ச்சிக்குத் திருவலிதாயம் வருக! குருவருள் பெற்று வளமுடன் வாழ்க!**

## குருப்பெயர்ச்சி 3 நாட்கள் சிறப்பு இலட்சார்ச்சனை விழா

**நாள்: 18-10-06 புதன், 19-10-06 வியாழன் மற்றும் 20-10-06 வெள்ளிக்கிழமை**

பேரன்புடையீர்!

தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற 32 சிவாலயங்களில் ஒன்றானதும், வியாழ குரு வழிபட்டு பாவ நிவர்த்தி பெற்றதன் காரணமாக திருவலிதாயம் குருஸ்தலம் எனப் பெயர் பெற்றதும், தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர், வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் மற்றும் பாம்பன் சுவாமிகள் உள்ளிட்ட அருளாளர்களால் பாடப் பெற்றதும், திருச்செந்தூர், ஆலங்குடி, தென்குடிதிட்டை, கோவிந்தவாடி, போன்ற முக்கிய குருஸ்தலங்களில் ஒன்றானதும், சூரியன் - சந்திரன்- இந்திரன்- இமயன் - ஸ்ரீராமர் - ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பரத்துவாஜமாமுனிவர் ஆகியோரால் பூஜிக்கப்பட்டதுமான அருள்மிகு ஜெகதாம்பிகை உடனுறை திருவல்லீஸ்வரர் திருக்கோயிலில் நிகழும் விய வருடம் ஐப்பசி மாதம் 03ம் தேதி *20-10-2006* வெள்ளிக்கிழமை அருள்மிகு குருபகவான் துலாம் ராசியிலிருந்து விருச்சிக ராசிக்கு குருபெயர்ச்சியாவதை முன்னிட்டு அருள்மிகு தட்சிணாமூர்த்தி மற்றும் குருபகவானுக்கு, குருபெயர்ச்சி சிறப்பு இலட்சார்ச்சனை விழா *18-10-2006* புதன்கிழமை, *19-10-2006* வியாழக்கிழமை மற்றும் *20-10-2006* வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது.

**குரு பார்க்க கோடி நன்மை**

**குரு பரிகார சாந்தி செய்து கொள்ள வேண்டிய ராசிதாரர்கள்:**

## மேஷம், மிதுனம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு,கும்பம்

## இலட்சார்ச்சனை நேரம்

**காலை 8 மணி முதல் 12 மணி வரை; மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை**

**நபர் ஒன்றுக்கு இலட்சார்ச்சனைக் கட்டணம் ரூ.125/- மட்டும்**

குறிப்பு :


1. இலட்சார்ச்சனையில் நேரில் கலந்து கொள்ள விரும்பும் பக்தர்கள் திருக்கோயிலில் நேரில் கட்டணச் சீட்டுப் பெற்றுப் பங்கேற்க விரும்பும் குறிப்பிட்ட நாளிற்கு முன்பதிவு செய்து விழாவில் கலந்து கொள்ள வேண்டும்.
2. இலட்சார்ச்சனையில் பங்கு பெற இயலாத உள்ளூர்/வெளியூர் சேவார்த்திகள் கட்டணம் ரூ. 125/- (பெயர், இராசி, நட்சத்திரம், லக்னம், கோத்ரம் ஆகிய விபரத்துடன்) மணி ஆர்டர்/ காசோலை /வங்கி டிராப்ட் அனுப்பி வைத்தால் குருப்பெயர்ச்சி இலட்சார்ச்சனை 3 நாள் விழாவில் ஏதேனும் ஒரு நாளில் சங்கல்பம் செய்யப்பட்டு இலட்சார்ச்சனை செய்யப்பட்டுப் பூஜையில் வைக்கப்பட்ட அருள்மிகு குருபகவான் வெள்ளி டாலர் (2 கிராம்) விபூதி பிரசாதத்துடன் தபாலில் *31-10-2006* தேதிக்குள் அனுப்பி வைக்கப்படும்.
3. I.C.I.C.I திருக்கோயில் வங்கி கணக்கு எண்.*602701217206* வழியாகவும் ரூ.125/- செலுத்தித் தபாலில் இதர விபரங்களை அனுப்பி இலட்சார்ச்சனைக்கு முன்பதிவு செய்து கொள்ளலாம்.
4. *18.10.2006, 19.10.2006, 20.10.2006* ஆகிய 3 நாட்கள் லட்சார்ச்சனைப் பூஜையில் கலந்து கொள்ள இயலாத பக்தர்களின் வசதிக்காக ரூ.125 மதிப்புள்ள குருப்பெயர்ச்சி திருவிழா கட்டணச் சீட்டுகள் திருக்கோயிலில் அர்ச்சனை கட்டணச் சீட்டு விற்குமிடத்தில் *21.10.2006* தேதி முதல் *02.11.2006* தேதி வரை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு, அருள்மிகு குருபகவான் சன்னதியில் வைத்து அர்ச்சனை செய்த (லட்சார்ச்சனை பூஜையில் வைக்கப்பட்ட) குருபகவான் உருவம் பதித்த 2 கிராம் வெள்ளி டாலருடன் பிரசாதம் வழங்கப்படும்.

**திரு.வெ.சாரங்கபாணி,** M.A.,B.L. — நிர்வாக அதிகாரி

**திரு.எம்.வி. சுவாமிநாதன்,** — நியமன அறங்காவலர்

**திரு.பிஎஸ். சண்முகசுந்தரம்** — பரம்பரை அறங்காவலர்

# அருள்மிகு முருகவேள் 108 போற்றி



**த**மிழ் அருச்சனை - அருள்வேண்டுதல்
(சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந்நன்னாளில்............ அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும் சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம், பொருள், இன்பம் வீடு எனும் நாற்பயனும் பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல வாழ்வெய்தவும் உமது திருவடிகளில் மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

**அருள்மிகு முருகவேள் போற்றி 8 போற்றிகள்**

1. ஓம் அறுமுகச்சிவமே போற்றி
2. ஓம் திருச்செந்தூரா போற்றி
3. ஓம் திருப்பரங்குன்றா போற்றி
4. ஓம் திரு ஆவி னன்குடியாய் போற்றி
5. ஓம் திருவே ரகக்குருவே போற்றி
6. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி
7. ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி
8. ஓம் வைரவேல் வீரா போற்றி போற்றி ஓம் !

**அருள்மிகு முருகவேள் 16 போற்றிகள்**

1. ஓம் அறுமுகச்சிவமே போற்றி
2. ஓம் உமையருட் செல்வா போற்றி
3. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி
4. ஓம் காவடி விருப்பனே போற்றி
5. ஓம் குன்றுதோறாடுவாய் போற்றி
6. ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி
7. ஓம் சைவக் கொழுந்தே போற்றி
8. ஓம் ஞானப் பழமே போற்றி
9. ஓம் திருச்செந்தூரா போற்றி
10. ஓம் திருப்பரங் குன்றா போற்றி
11. ஓம் திரு ஆவி னன்குடியாய் போற்றி
12. ஓம் திருவேரகக்குருவே போற்றி
13. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி
14. ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி
15. ஓம் முத்தமிழ் முருகா போற்றி
16. ஓம் வைரவேல் வீரா போற்றி போற்றி ஓம்!

**அருள்மிகு முருகவேள் 108 போற்றிகள்**

1. ஓம் அறுமுகச்சிவமே போற்றி
2. ஓம் அறுகுசூடிதன் இளையாய் போற்றி
3. ஓம் அழகினுக் கழகே போற்றி
4. ஓம் அருளினுக் கருளே போற்றி
5. ஓம் அலங்கார நாயக போற்றி
6. ஓம் அநுபூதி நாதனே போற்றி
7. ஓம் அன்பின் அண்ணா போற்றி
8. ஓம் ஆறுமுக அப்பா போற்றி
9. ஓம் இமையோர் இறைவா போற்றி
10. ஓம் இமயப் புகழோய் போற்றி
11. ஓம் இருவினை நீக்குவாய் போற்றி
12. ஓம் இருசுடர் ஆனாய் போற்றி
13. ஓம் ஈசனார் குருவே போற்றி
14. ஓம் ஈரேழ் உலகோய் போற்றி
15. ஓம் உமையருட் செல்வா போற்றி
16. ஓம் உயர்மறைப் பொருளே போற்றி
17. ஓம் எஃக வேலுடையாய் போற்றி
18. ஓம் எமபயம் நீக்குவாய் போற்றி
19. ஓம் எழில் அற்புதனே போற்றி
20. ஓம் ஏறுமயில் ஏறி போற்றி
21. ஓம் ஔவைக் கரசே போற்றி
22. ஓம் ஒப்பிலா இறைவா போற்றி
23. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி
24. ஓம் கந்தா முருகா போற்றி
25. ஓம் கடம்பா இடும்பா போற்றி
26. ஓம் கங்கையின் மைந்தா போற்றி
27. ஓம் கதிர்காமக் கந்தா போற்றி
28. ஓம் கவிமாலை அணிந்தாய் போற்றி
29. ஓம் கார்த்தி கேயனே போற்றி
30. ஓம் காவற் காரனே போற்றி
31. ஓம் காவடி விருப்பனே போற்றி
32. ஓம் குகனென நின்றாய் போற்றி
33. ஓம் கும்பமுனிக் குருவே போற்றி
34. ஓம் குமரகிரி வேலனே போற்றி
35. ஓம் குராவடி வேலனே போற்றி
36. ஓம் குறத்திக் கோவே போற்றி
37. ஓம் குறிஞ்சிக் கிழவா' போற்றி
38. ஓம் குன்றம் எறிந்தோய் போற்றி
39. ஓம் குன்றுதோறாடுவாய் போற்றி
40. ஓம் கூத்தன் மைந்தா போற்றி
41. ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி
42. ஓம் கொற்றவைக் குமரா போற்றி
43. ஓம் கொற்றத்தனி வேலோய் போற்றி
44. ஓம் கோலமயில் குமரா போற்றி
45. ஓம் கோரும்வரம் தருவாய் போற்றி

# திருமண மண்டபம் திறப்புவிழா



கோட்டூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் திருமணமண்டபத்தை 18.9.06 அன்று மாண்புமிகு மத்திய கப்பல், சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திருமிகு டி.ஆர். பாலு அவர்கள் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு தமிழக அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு கே.ஆர். பெரியகருப்பன் அவர்களும், அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

46. ஓம் சங்கப் புலவா போற்றி
47. ஓம் சரவண பவனே போற்றி
48. ஓம் சண்முகக் குமரா போற்றி
49. ஓம் சகல நலம் அருள்வாய் போற்றி
50. ஓம் சிவகுரு நாதா போற்றி
51. ஓம் சிவசுப்பிர மணியா போற்றி
52. ஓம் சீரலைவாய்த் தேவே போற்றி
53. ஓம் சூர் முதல் தடிந்தாய் போற்றி
54. ஓம் செஞ்சுடர் வேலா போற்றி
55. ஓம் செவ்வேள் பரமா போற்றி
56. ஓம் செந்தில் வாழ்வே போற்றி
57. ஓம் செந்தமிழ்ச் செல்வா போற்றி
58. ஓம் செங்கோட்டு வெற்பா போற்றி
59. ஓம் சேவற் கொடியோய் போற்றி
60. ஓம் ஓம் சேந்தா முருகா போற்றி
61. ஓம் சைவக் கொழுந்தே போற்றி
62. ஓம் ஞானச்சுடரே போற்றி
63. ஓம் ஞானப் பழமே போற்றி
64. ஓம் தங்க வேலனே போற்றி
65. ஓம் தண்டாயுதபாணியே போற்றி
66. ஓம் தமிழ்மா மறையே போற்றி
67. ஓம் தமிழெனும் அழகே போற்றி
68. ஓம் திகழ்மணி மார்பா போற்றி
69. ஓம் திகழ்மயில் வாகனா போற்றி
70. ஓம் திருச்செந்தூரா போற்றி
71. ஓம் திருப்பரங் குன்றா போற்றி
72. ஓம் திருஆவி னன் குடியாய் போற்றி
73. ஓம் திரு வேரகக்குருவே போற்றி
74. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி
75. ஓம் திருப்புகழ் விருப்பா போற்றி
76. ஓம் திருமால் மருகா போற்றி
77. ஓம் திருவருட் செல்வா போற்றி
78. ஓம் தீமையைத் தீர்ப்பாய் போற்றி
79. ஓம் துங்கக் கொடையோய் போற்றி
80. ஓம் தூ மறைக்கு ஆதீ போற்றி
81. ஓம் தெய்வானைக் கணவா போற்றி
82. ஓம் தேவர்தம் கோவே போற்றி
83. ஓம் நக்கீர நாயகா போற்றி
84. ஓம் நற்றமிழ் வேந்தே போற்றி
85. ஓம் பழநிமலை வாழ்வே போற்றி
86. ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி
87. ஓம் பன்னிரு தோளாய் போற்றி
88. ஓம் பதினெண்கண் மலர்ந்தாய் போற்றி
89. ஓம் பிணிமுகம் ஏறுவாய் போற்றி
90. ஓம் பிணிக்குலம் ஒட்டுவாய் போற்றி
91. ஓம் பிரணவம் மொழிந்தாய் போற்றி
92. ஓம் பிரமனைக் குட்டினாய் போற்றி
93. ஓம் பிறவா நெறி அருள்வாய் போற்றி
94. ஓம் மலைமகள் மகனே போற்றி
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி
96. ஓம் மாயோன் மருகா போற்றி
97. ஓம் முத்தமிழ் முருகா போற்றி
98. ஓம் முத்தைய வேளே போற்றி
99. ஓம் முருகெனும் அழகே போற்றி
100. ஓம் முருகாற்றுப் படையோய் போற்றி
101. ஓம் மூவர்க்கும் முதல்வா போற்றி
102. ஓம் வள்ளி நாயகனே போற்றி
103. ஓம் வழித்துணைக் குழகா போற்றி
104. ஓம் விழித்துணை அழகா போற்றி
105. ஓம் வெற்றிவேல் முருகா போற்றி
106. ஓம் வேடர்தம் மருகா போற்றி
107. ஓம் வையச்சுடரே போற்றி
108. ஓம் வைரவேல்வீரா போற்றி போற்றிஓம்!

**பாடல் - முருகப் பெருமான்**

அஞ்சு முகம்தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சேலென வேல்தோன்றும்


- நெஞ்சில்

ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

**வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்**

................................ பெருமான் / அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக, மங்களம் உண்டாகுக.

# அருள்மாரி வழங்கும் அம்மன் கோயில் படைவீடு



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டத்தில் அமைந்து விளங்கும் ''அம்மன் கோயில் படைவீடு'' என வழங்கும் அருள்மிகு ரேணுகாம்பாள் அம்மன் திருக்கோயில் மிகச் சிறந்த பிரார்த்தனைத் தலமாகும்.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்த இத்திருத்தல மகிமை அளவிடற்கரிய ஒன்றாகும்.

விதர்ப்பதேசத்தரசனான இரேணுமன்னன் தனக்கு உமாதேவியே பெண்குழந்தையாகப் பிறக்க வேண்டுமென்று தவம் புரிந்தான். பிரம்மதேவன் தந்த வரத்தின் படி, உமாதேவியும் ஓர் பெண்குழந்தையாய்த் தோன்றினாள்.

அக்குழந்தைக்கு இரேணுகை எனப் பெயரிட்டுக்கண்ணென வளர்த்தான் இரேணுமன்னன்.

பாலாற்றுக்குத் தெற்கில், சேயாற்றுக்கு வடக்கில் இருபத்தி ஐந்து மலைகளால் சூழப் பெற்றக் கமண்டல நதிக்கரையில் அமைந்துள்ள புண்ணிய நகரம் குண்டலிபுரம்.

இங்குதான் ஆயிரம் தேவ வருடங்களாய்த் தவம்புரிந்து கொண்டிருந்தார் ஜமதக்கினி முனிவர்.

இரேணுகாதேவி தன் திருமணத்திற்கான வரனைத் தேடித் தந்தையின் அனுமதி பெற்று நானாவித சேனையோடு திக்விஜயம் புறப்பட்டுக் குண்டலிபுரம் வந்து அடைந்தாள்.

நால்வகைச் சேனைகளோடு இரேணுகை வந்து தங்கியிருந்தபடியால் இவவிடத்திற்குப் படைவீடு (படவேடு) என்ற பெயர் உண்டானது.

ஜமதக்கினி முனிவர் அனுப்பிவைத்த சீடர்கள் உண்டாக்கிய படைவீரர்கள் இரேணுகையின் படையோடு போர்புரிந்தார்கள்.

இரேணுகையின் படைத்தலைமை ஏற்றிருந்த துர்க்கை எனும் சாமுண்டீஸ்வரி ஜமதக்கினியின் சேனைகளின் மீது அம்புகளைச் சொரிந்தார். நெற்றிக் கண்ணினால் எரித்தார்.

ஜமதக்கினி முனிவர் மூன்று லோகத்திலும் உள்ள எல்லாதீர்த்தங்களையும் தன்கமண்டலத்திற்கு வரச் செய்து அக்கமண்டல நீரை நதியாகப் பெருகியோடச் செய்து நெருப்பை அணைத்தார். அதுவே ''கமண்டல நதி''ஆனது.

இவ்வாறான போரின் முடிவில் மும்மூர்த்திகளும் முன் நின்று ஜமதக்கினி முனிவருக்கும் இரேணுகைக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். இரேணுமன்னனும் தம்மகளைத் திருமணம் முடித்து வைக்கத் தம் படைகளுடன் வந்து சேர்ந்தான்.

ஜமதக்கினி முனிவருக்கும் இரேணுகைக்கும் பங்குனி மாதம் உத்திர நன்னாளில் திருமணம் நடத்தி வைத்தார் பிரம்மதேவர். காமதேனு திருமணத்திற்கு வந்த முனிவர்கள், தேவர்கள், யாவருக்கும் விருந்துபசாரம் செய்து மகிழ்வித்தது.

ஜமதக்கினி - இரேணுகை இல்லறத்தில் தன்னுவன், அனுவன், விசுவாசு, இராமர் என நான்குப் பிள்ளைகள் தோன்றினர். கடைசிப் பிள்ளையாகிய இராமர் திருமாலின் அம்சமாகப் பிறந்தவர். சிவபெருமானை வழிபட்டுப் பரசு என்ற ஆயுதத்தைப் பெற்ற படியால் ''பரசுராமர்'' என்று சிறப்பிக்கப் பெற்றார்.

ஜமதக்கினி முனிவர் சிவபூசைசெய்வதற்காக இரேணுகை நாளும் ஆற்றங்கரைக்குச் செல்வாள். ஆற்று மணலைக் குடமாக வனைந்து தண்ணீர் எடுப்பாள். அவள் கற்பின் திறத்தால் குடமும் தண்ணீர் முகந்து வரும்.

இதற்குச் ''சலம் திரட்டுதல்'' என்று பெயர். இவ்வாறு இரேணுகை சலம் திரட்டி வந்தவுடன் ஜமதக்கினி முனிவர் சிவபூசைசெய்து முடிப்பார்.

இரேணுகை இவ்வாறு தம் கணவருக்குத் தொண்டு செய்து வரும் நாளில் ஒருநாள் ஆற்றில் தண்ணீர் எடுக்கும்போது மேலே வான்வழியே கந்தருவன் ஒருவன் சென்று கொண்டிருந்தான்.

அவன் வடிவ நிழலைத் தண்ணீரில் பார்த்த இரேணுகை அவன் அழகைக் கண்டு மனத்தால் வியந்து மகிழ்ந்தாள். அவ்வளவில் சலம் திரண்டு வரவில்லை.


ஜமதக்கினி முனிவர் முன்வந்து தலைகுனிந்து நின்றாள் இரேணுகை.

''உள்ளத்தால் உள்ளலும் தீதே'' என்ற திருக்குறளுக்கேற்ப நினைத்தலும் செய்தலோடு ஒக்கும் என்ற நிலையில் இரேணுகை பாவத்திற்கு உரியவள் ஆனாள்.

வந்த பாவம் அடுத்த பிறவியில் தொடரா வண்ணம் அப்பொழுதே தீர்த்துவிட நினைத்த ஜமதக்கினி முனிவர்தம் பிள்ளைகள் ஒவ்வொருவராக அழைத்துத் தாயை வெட்டி விடுமாறு பணித்தார். முதல் மூன்று பிள்ளைகளும் ''தாயிற் சிறந்த கோயிலும் இல்லை'' என்ற நிலையில் தம் தாயை வெட்ட மறுத்து விட்டனர். அவர்களை வேடர்களாகப் போகுமாறு ஜமதக்கினி முனிவர் சபித்தார்.

இறுதிமகன் பரசுராமனோ ''தந்தை சொல்

# இராமாநுஜர் செய்த புரட்சி



திருக்கோட்டியூர் நம்பி இராமாநுஜருடைய காதிலே மந்திரத்தை உபதேசித்து ''இதை நீகடைசிவரை இன்னொருவருக்கு வெளியிடக் கூடாது, இதை மீறி நடந்தால் உனக்கு நன்மை இல்லை. தீமைதான் கிடைக்கும், சத்தியம் செய்து கொடு'' என்று கேட்டார்.



திருக்கோட்டியூர் நம்பியின் கரங்களைப் பிடித்து இராமாநுஜர் சத்தியமும் செய்து கொடுத்தார் ''நான் யாரிடமும் சொல்லமாட்டேன்'' என்று.

பிறகு திருக்கோட்டியூர் வந்து கோபுரத்திலே ஏறிநின்றார். அந்த ஊர் மக்களை எல்லாம் அழைத்தார். எல்லோரும் வந்தார்கள். அவர்களைப் பார்த்து திருக்கோட்டியூர் நம்பி சொல்லிக் கொடுத்த அந்த ரகசிய மந்திரத்தை அனைவருக்கும் விளங்கக் கூடிய அளவிற்கு உபதேசித்தார்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் திருக்கோட்டியூர் நம்பி திகைத்தார். ஆத்திரப்பட்டார். ராமாநுஜரை அழைத்து வரச் செய்தார்.

''எப்படி சத்தியம் செய்துவிட்டு மீறினாய்?'' என்று கேட்டார்.

''சொன்னவனுக்குத் தீமை ஏற்படும், கேட்டவனுக்கு நன்மை ஏற்படும் என்றால், கேட்டவர்கள் பலர், சொன்னவன் நான் ஒருவன்,''

''இந்த ஒருவன் தீமைக்கு ஆளானால் பரவாயில்லை; பலர் நன்மைக்கு ஆளாவார்கள். எனவே தான் பலர் அறிய அதை நான் சொன்னேன்'' என்று குறிப்பிட்டார்.

இதைக்கேட்ட குருநாதர், இவரைக் கட்டித் தழுவி ''நீதான் எனக்கு வழிகாட்டியப்பா'' என்று சொன்னார் என்பது அவருடைய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக் கூடிய ஒரு நிகழ்ச்சியாகும்.

- மாண்புமிகு தமிழக முதல்வர்

''முத்தமிழ் அறிஞர் டாக்டர்'' கலைஞர் அவர்கள்

---

மிக்க மந்திரமில்லை'' என்ற நிலையில் தம் பரசு கொண்டு தாயை வெட்டி வீழ்த்த முனைந்தார்.

இரேணுகை அஞ்சி ஓடினாள், ஒரு தாழ்த்தப்பட்ட பெண் இரேணுகையைக் கட்டிப் பிடித்துப் பாதுகாப்பு செய்தாள். பரசுராமரின் பரசுக்கு இருவருமே பலியாயினர்.

வேலூர் - திருப்பத்தூர் பேருந்து வழியில் உள்ள வெட்டுவாணம் என்ற ஊரே இவ்வாறு வெட்டுப்பட்ட இடமெனக் கூறுவர்.

தம் தாயின் தலையைக் கொண்டு வந்து தம் தந்தையின் திருவடிகளில் காணிக்கை ஆக்கினார் பரசுராமர்.

தம் சொல்லின்படி நடந்த மகனைக் கண்டு மகிழ்ந்து வேண்டியதைக் கேட்குமாறு கூறினார் ஜமதக்கினி முனிவர்.

அறிவுக் கூர்மையும், தந்தைப் பாசமும் கொண்ட பரசுராமர் இரண்டு வரம் தர வேண்டினார்; ஜமதக்கினி முனிவரும் அதற்கு இசைந்தார்.

முதல் வரத்தால் தம் தமையன்கள் சாபத்திலிருந்து விடுதலை பெற வேண்டிக் கொண்டார். இரண்டாவது வரத்தால் இறந்த தாய் மீண்டும் உயிர் பெற்று எழுவதற்கு அருளுமாறு வேண்டினார்.

ஜமதக்கினி முனிவர் பொன்பிரம்பும், நீரும் தந்து மந்திரம் மொழிந்து தாயை எழுப்பிவருமாறு கூறினார்.

பரசுராமர் இரத்தவெள்ளத்தில் கிடந்த உடல்களில் வேறுபாடு தெரியாது தம்தாயின் தலையை வேற்றுடலில் பொருத்தி உயிர்ப்பித்து அழைத்து வந்தார்.

இதற்கிடையில் சூரியமரபில் வந்தவனான கார்த்தவீரியன் என்பவனது பிள்ளைகள் தம் தந்தைக்கும் ஜமதக்கினி முனிவருக்கும் ஏற்பட்ட பகையுணர்வால் ஜமதக்கினிமுனிவரைக் கொன்றுவிட்டனர்.

ஜமதக்கினி முனிவர் இறந்த செய்தி கேட்டு இரேணுகை தீயில் புகுந்தாள். இந்திரன் மழை பொழிந்து தீயை அணைத்தபடியால் இரேணுகை இறக்கவில்லை. ஆனால் உடலெங்கும் கொப்புளங்கள் உண்டானது.

ஆடை முழுவதும் எரிந்து போனதால் வனத்தில் பக்கத்தில் இருந்த வேப்பிலை கொத்துகளை ஒடித்து ஆடையாக உடுத்திக் கொண்டாள்.

மும்மூர்த்திகளும் இரேணுகைக்குக் காட்சி தந்தனர். ''அம்மா, நீபூமியில் சிலைவடிவாக எழுந்தருளி உன்னை வழிபடுவோர்க்கு அருள்பாலித்து, வழிபடாதோர்க்கு இன்னல் தந்து மனம் திருந்தச் செய்வாயாக! உன் உடல் கொப்புளங்களைப் போல, மக்களுக்கு அம்மைக் கொப்புளங்கள் வரச் செய்வாக! மக்கள் பொங்கலிட்டும, பானகம், கூழ் மாவு முதலியன வைத்தும் உமக்குப் படைப்பார்களாக'' என்று அருளினர்.

இரேணுகையம்பாள் சிவனிடமிருந்து சூலமும், விஷ்ணுவிடமிருந்து சக்கரமும், பிரம்மனிடமிருந்து வேதங்களும், எமனிடமிருந்து பாசமும் பெற்று வேற்றுடலைப் பூமியில் புதைத்து, தன்முக மண்டலத்தை மட்டும் மக்களுக்குக் காட்டி அருள் பாலித்து வருகின்றார்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

உ

ஸ்ரீ கலங்காமற் காத்த விநாயகர் துணை

போன் - 04374 - 269407
இ.மெயில் - algguru@sancharnet.in

# அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்



## (குருபரிகாரஸ்தலம்)

## ஆலங்குடி - 612801

## வலங்கைமான் வட்டம்திருவாரூர் மாவட்டம்

# குருபெயர்ச்சி இலட்சார்ச்சனை விழா

நிகழும் விய வருடம் ஐப்பசி மாதம் 03 ம் தேதி 20.10.2006 வெள்ளிக்கிழமை அருள்மிகு குருபகவான் துலாம் ராசியிலிருந்து விருச்சிக ராசிக்குப் பிரவேசிக்கிறார்.அதை முன்னிட்டு கீழ்கண்ட இராசி நேயர்கள் தங்களுடைய ஜென்ம ராசிக்குப் பரிகாரம் செய்து கொள்வது மிகவும் உத்தமம்.

இராசிகள் : மேஷம், மிதுனம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு, கும்பம்

அருள்மிகுகுருபகவானுக்கு நிகழும் விய வருடம் புரட்டாசி மாதம்19- ம் நாள் 05.10.2006 வியாழக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 12.10.2006 வியாழக்கிழமை முடியவும். மீண்டும் ஐப்பசி மாதம் 9-ம் நாள் 26.10.2006 வியாழக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 19-ம் நாள் 05.11.2006 ஞாயிற்றுக்கிழமை முடியவும் இலட்சார்ச்சனை நடைபெறும்.

நேரடி இலட்சார்ச்சனைக் கட்டணம்ரூ.125/- (ரூபாய் நூற்றி இருபத்தைந்து மட்டும்)

தபாலில் இலட்சார்ச்சனைக் கட்டணம் ரூ. 150/- (ரூபாய் நூற்றி ஐம்பது மட்டும)

அருள்மிகு குருபகவான் உருவம் பொறித்த 2கிராம் வெள்ளியினால் செய்த டாலர் பிரசாதமாக வழங்கப்படும்.

தொகையை மணியார்டர் மூலமாகவோ, டிமாண்ட் டிராப்டாகவோ, நிர்வாக அதிகாரி, அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரசுவாமி திருக்கோயில், ஆலங்குடி - 612 801, வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

என்ற முகவரிக்குத் தங்களுடைய பெயர், நட்சத்திரம், இராசி, கோத்திரம், லக்னம் ஆகிய முழு விபரங்களையும் எழுதி அனுப்பிப் பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டிமாண்ட் டிராப்ட் எடுப்போர் கும்பகோணம் வங்கி கிளையில் மாற்றத்தக்க வகையில் அல்லது சிட்டி யூனியன் வங்கி, ஆலங்குடி - 612 801, திருவாரூர் மாவட்டம் என்ற முகவரிக்கு எடுத்து அனுப்பவும். அல்லது ICICI கணக்கு எண் 608101081328ல் கட்டணத்தைச் செலுத்திக் கட்டணம் செலுத்திய செலானைக் கடிதத்துடன் இணைத்து அனுப்பவும். மேலும் விபரங்களுக்கு www. tiruvarur.tn.nic.in மற்றும் www. alangudigurubaghavan.org என்ற இணையதளத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளவும்.

இலட்சார்ச்சனை நேரம்

காலை 9மணி முதல் 12 மணி வரை; மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை

## குருவருள் பெற்று வளமுடன் வாழ்க!

இங்ஙனம்

பொன்.நந்தகோபால் .M.A.
செயல் அலுவலர்

ஆ. இளம்பரிதி,B.Sc., M.A., BL..,
தக்கார்/உதவி ஆணையர்

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08



# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்.

## திருச்செந்தூர்.

## 2006 ஆம் ஆண்டு கந்த சஷ்டித் திருவிழா அழைப்பிதழ்

*22.10.2006 முதல்*
*28.10.1006 முடிய :* கந்த சஷ்டித் திருவிழா - நாள்தோறும் காலை, இரவு யாகசாலைப் பூஜை நடைபெறும். பகலில் உச்சிக்கால தீபாராதனை முடிந்ததும் யாகசாலை தீபாராதனை, பின் யாகசாலையில் இருந்து அருள்மிகு ஜெயந்திநாதர் தங்கச் சப்பரத்தில் எழுந்தருளி வீரவாள் வகுப்பு, வேல் வகுப்பு முதலிய பாடல்களுடன் மேளவாத்தியங்களுடன் சண்முக விலாசம் சேர்ந்ததும் தீபாராதனை நடைபெறும்.

மாலை 6.00 மணிக்கு மேல் திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் வைத்து அருள்மிகு ஜெயந்திநாதருக்கு அபிஷேகம் அலங்காரம் முடிந்த பின்னர் சுவாமி அம்பாளுடன் தங்கரதத்தில் கிரிவீதி உலா வந்து திருக்கோயில் சேரும்.

*27.10.2006 :* சூரசம்ஹாரம் - காலை யாகசாலை பூஜை நடைபெறும். உச்சிக்கால தீபாராதனை முடிந்ததும் யாகசாலை தீபாராதனைக்குப் பின்னர் யாகசாலையில் இருந்து அருள்மிகு ஜெயந்திநாதர் தங்கச் சப்பரத்தில் எழுந்தருளி சண்முகவிலாசம் சேர்ந்ததும் தீபாராதனை நடைபெறும்.

பிற்பகல் 4.30 மணிக்கு மேல் அருள்மிகு ஜெயந்தி நாதர் சூரசம்ஹாரத்திற்கு எழுந்தருளுதல். சூரசம்ஹாரம் நடைபெற்ற பின்பு சந்தோஷ மண்டபத்தில் சுவாமிக்கும். அம்பாளுக்கும் அலங்காரமாகித் தீபாராதனைக்குப் பின்னர் கிரிபிரகாரம் உலா வந்து திருக்கோயி சேர்தல். பின்னர் சாயாபிஷேகம் நடைபெறும்.

*28.10.2006 :* அதிகாலை 5.00 மணி அளவில் தெய்வானை அம்பாள் தபசு காட்சிக்கு எழுந்தருளுதல். மாலை சுவாமி எழுந்தருளி அம்பாளுக்குக் காட்சி தந்து தோள் மாலை மாற்றித் திருவீதி வலம் வந்து திருக்கோயில் சேருதல். இரவு திருக்கல்யாணம் நடைபெறும்.

### பக்தர்களுக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகள்

1. பக்தர்கள் வசதியாக தரிசனம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
2. கந்த சஷ்டித் திருவிழாவின்போது காலை, மாலை யாகசாலைப் பூஜை நடைபெறும்.
3. இத்திருக்கோயிலில் பன்னீர் இலை விபூதி பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
4. இத்திருக்கோயிலில் அனைவருக்கும் நற்சந்தனம் வழங்கப்பட்டு வருகிறது.
5. ஒவ்வொரு தமிழ் மாதக் கடைசி வெள்ளியன்று 800 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.
6. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நன்கொடையாளர் பங்களிப்புடன் கூடிய அன்னதானத் திட்டத்தின் கீழ் தினசரி 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.
7. திருக்கோயில் சார்பில் வாரந்தோறும் வெள்ளிக் கிழமையன்று ஆன்மீகச் சொற்பொழிவு நடைபெறுகிறது.
8. திருக்கோயில் சார்பில் மாணவர்களுக்கு ஞாயிறுதோறும் ஆன்மீக ஒழுக்க நெறி பயிற்சி வகுப்பு நடத்தப் பெறுகிறது.
9. திருக்கோயில் சார்பில் மாணவர்களுக்கு ஞாயிறுதோறும் திருக்குறள் பயிற்சி வகுப்பு நடத்தப் பெறுகிறது.

இணையதளம் மூலம் பிரார்த்தனை நிறைவேற்றலாம்.
வெளியூர்களிலிருந்து வர இயலாத அன்பர்கள் கீழ்க்கண்ட இணைய தள முகவரியில் தொடர்பு கொண்டு. பிரார்த்தனை நிறைவேற்றிக் கொள்ளலாம்.
இத்திருக்கோயில் பற்றிய விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய வெப்சைட்:
www.tntempleorg
www.tiruchendurmurugan.org
Email: tcrtemple@sancharnet.com
கந்த சஷ்டித் திருவிழாவில் பக்தர்கள் கலந்துகொண்டு செந்திலாண்டவர் அருள் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

**போ.இராமராஜ** , பி.எஸ்ஸி.பி.எல்.
இணை ஆணையர்/செயல் அலுவலர்/ தக்கார்
அருள்மிகு சுப்பிரமைணியசுவாமி திருக்கோயில்,
திருச்செந்தூர்.